

821

JL
0317211N50KN

# செய்திகள்

## இந்தியா - ஆஸி டெஸ்ட் மாட்சு

இந்தியக் கோஷ்டிக்கும் ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கும் சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் அக்டோபர் 19-ஆம் தேதி முதல் டெஸ்ட் மாட்சு ஆரம்பமாயிற்று. இன்னும் பம்பாயிலும், கல்கத்தாவிலும் இரண்டு மாட்சுகள் நடக்கவிருக்கின்றன. சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்ட் மாட்சு இந்தியாவுக்கு இன்னிங்ஸ் தோல்வியில் முடிந்துவிட்டது. முதலில் டாஸ் போட்டதில் ஜயித்த இந்தியாவுக்கு ஆட்டமும் வெற்றியில் முடியும் என்று அனைவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் முதல் இன்னிங்ஸிலேயே 161 ரன்கள் எடுத்து இந்தியா வெளியேறியது. ஆஸ்திரேலியா 319 ரன்கள் எடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா 153 ரன்கள் எடுத்து, 5 ரன்கள் வித்தியாசத்தில் இன்னிங்ஸ் தோல்வியடைந்தது பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது. ஆஸ்திரேலியக் கட்சியில் பெரும்பாலோர் ஆல் - ரவுண்டர்கள். ஆனால் இந்தியக் கட்சியிலோ பாட்ஸ்மென்கள் குறைவு. பந்து வீச்சில் பெரும் புகழ்பெற்ற குப்தேயும் குலாமும்கூட சோடை போய்விட்டார்கள். இந்தியக் கட்சியின் பீல்டிங் மிகவும் மோசமாக இருந்தது. பந்து ஓடுவதற்கு ஏற்ற வாட்டமாக மைதானமும் இல்லை. பவுண்டரிக்குப் போன பந்துகள் தயங்கிக் கொண்டுதான் போயின. உஷாராகவும் துடியாகவும் நின்ற ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்கள் தயங்கி ஓடும் பந்துகளை முந்திக்கொண்டு பிடித்துவிட்டார்கள். பொதுவாக, சென்னையில் நடந்த ஆட்டம், திரளாகக் கூடியிருந்த ரசிகர்களுக்கெல்லாம் பெரிய ஏமாற்றமாக முடிந்துவிட்டது. அடுத்த இரண்டு டெஸ்ட் மாட்சுகளிலாவது இந்தக் குறைகள் இல்லாதவாறு இந்தியா ஆட முயலும் என்று நம்புவோம். இந்த இதழ் உங்கள் கையில் கிடைக்கும் போது பம்பாய் டெஸ்ட் முடிவும் தெரிந்துவிடும்.

## குழந்தை எழுத்தாளருக்குப் பரிசு

குழந்தை இலக்கிய வளர்ச்சியை முன்னிட்டு, மத்திய சர்க்கார், ஆண்டுதோறும் குழந்தை நூல்களுக்குப் பரிசு அளித்து வருகின்றனர். இந்திய மொழியில் வெளியாகியுள்ள 23 நூல்களுக்கு இந்த ஆண்டு ரூ. 500/- வீதம் பரிசளித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு, தமிழில் சிறந்த குழந்தை நூல் என 'மலரும் உள்ளம்' என்ற குழந்தைக் கவிதைத் தொகுதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதை எழுதிய திரு அழ. வள்ளியப்பா அவர்களுக்கு, சென்னை அரசாங்கப் பரிசுப் பத்திரமும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



84202

## மிக உயரமான கட்டிடம்

சிகாகோவில் சமீபத்தில் நடந்த பத்திரிகை நிருபர் மகாநாடு ஒன்றில், புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர் பிராங்க் லாயிட் ரைட் என்பவர் கட்டிடக் குறிப்பு ஒன்றைக் காட்டினார். அந்தக் கட்டிடத்தில் 528 மாடிகள் இருக்குமாம்; அதன் உயரம் 5280 அடி, அதாவது ஒரு மைல்; அதைக் கட்டி முடிக்க 10 கோடி டாலர் செலவாகுமாம். இதில் $1\frac{1}{2}$ லட்சம் மக்கள் வசதியாக வேலை செய்யலாம் என்ற விவரங்களையும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# குழந்தைகளே!

F21
4-56

உங்கள் அனைவருக்கும் குழந்தைக் கடவுளான கண்ணனின் ஆசியும் அருளும் பூரணமாகக் கிடைக்கவேண்டும் என்று முதலில் வாழ்த்துகிறேன்.

இமயம் முதல் குமரிவரையில் இந்தத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுகிறார்கள். அங்கங்கே கொண்டாடுகிற விதத்தில் சிற்சில மாறுதல்கள் இருக்கலாம். ஆனால் உள்ளத்து உற்சாகத்தில் ஒரே விதமான மகிழ்ச்சிப் பெருக்குத்தான். அறியாமை என்கிற அரக்கனை ஒழித்து, அறிவு என்கிற ஒளியைப் பெறுகிற மகிழ்ச்சி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 NOV 1956
MADRAS

உங்கள் உள்ளங்களில் தூய்மையும் ஒளியும் ஏற்பட்டு மகிழ்ச்சியும் மலர்ச்சியும் ஏற்படவேண்டும் என்பதே கண்ணன் ஆசை. அன்று கோகுலத்தில் தோன்றி, குழந்தைக் குலத்தை உய்வித்த கண்ணனின் திருவருளை எண்ணி, நம் கண்ணனும் உங்கள் நெஞ்சிலே நீங்காத இடம் பெற்று, உங்களைக் களிப்பில் ஆழ்த்தி வருகிறான்.

சென்ற ஆறு வருஷங்களாகச் சிறப்பான மலர் வெளியிட்ட கண்ணன் இந்த ஏழாவது ஆண்டிலும் புதுமைப் பொலிவுடனும் எழில் வண்ணத்துடனும் காட்சி தருகிறான். குறும்புத் தனமெல்லாம் செய்தாலும், கண்ணன், கள்ளம் கபடமற்ற குழந்தையாக, கடவுளாக எல்லாருடைய நெஞ்சிலும் இடம் பெற்றிருக்கிறான் என்பதை அட்டைப் படம் அழகாக விளக்குகிறது.

குழந்தைகளுக்கெல்லாம் நேரு, மாமாவென்றால், நம்முடைய ராஜாஜி, தாத்தா என்பது பொருந்தும். நல்ல அறிவும், நம் சக்திக்கு ஏற்ற ஆசையும் நமக்கு வேண்டும் என்பதை ராஜாஜித் தாத்தாவின் கதை அழகாகச் சொல்லுகிறது. மற்றும் பல பல அறிஞர்களும் பெரியார்களும் அழகழகான கதைகளை எழுதி உங்கள் கருத்துக்குச் சுவையான விருந்து படைத்திருக்கிறார்கள்.

நாளும் கிழமையும் வந்தால் வேண்டியவர்கள் நமக்கு ஏற்ற பரிசுகளைக் கொண்டுவந்து தருவதுபோல், நமது ஓவியர்களும், புகைப்பட நிபுணர்களும் எழுத்தாளர்களும் உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் ஏற்ற முறையில், அழகிய சித்திரங்களும் புகைப்படங்களுமாகத் தந்து இந்த வண்ண மலரைச் சிறப்பாக்கியிருக்கிறார்கள்.

கண்ணன் சித்திரப் போட்டி நடைபெற்றது உங்களுக்குத் தெரியும். பலர் இதில் ஆர்வத்துடன் கலந்தும் கொண்டார்கள். அந்தப் போட்டியில் வயதுக் கிரமப்படிப் பரிசு பெற்ற ஆறு மூவர்ணப் படங்களை உள்ளே காணலாம்.

இந்த மலரில் மேலும் வெட்டி ஒட்டும் மூவர்ணப் படம், முழு நீளச் சித்திரக் கதை முதலியன வெளியாகியிருக்கின்றன. பொருட் செலவைப் பாராது, உங்கள் மகிழ்ச்சி ஒன்றையே பெரிதாகக் கருதி வெளியாகியுள்ள இந்த அம்சங்கள் எல்லாம் உங்கள் கவனத்தைக் கவரும் என்று நம்புகிறேன்.

இந்த மலரை இத்தனை சிறப்புடையதாகச் செய்த முது எழுத்தாளர்களுக்கும் புது எழுத்தாளர்களுக்கும் மற்றும் சித்திரக் கலைஞர்களுக்கும் ஏனையோருக்கும் நம்முடைய நன்றியை இங்கே தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.




# பொருளடக்கம்






மலர்: 7 இதழ்: 21

| | | பக்கம் |
|---|---|---|
| குழந்தைகளே! | .. | 1 |
| எருமைப் பால் - ராஜாஜி | .. | 4 |
| தீபாவளித் திருநாள் - கனம் சி. சுப்பிரமணியம் | | 6 |
| புத்தி வந்த எருமை - கி. வா. ஜகந்நாதன் | .. | 8 |
| போட்டி - கி. சந்திரசேகரன் | .. | 10 |
| நல்ல தோல்வி - டாக்டர் மு. வரதராசனுர் | .. | 13 |
| சின்னப் பாப்பா - எ. ந. கணபதி | .. | 17 |
| கற்பகப் பூ - பெ. தூரன் | .. | 18 |
| சுவாமி காப்பார் - கி. சரஸ்வதி அம்மாள் | .. | 23 |
| உருமாறிய காசு - தி. ஜ. ர. | .. | 27 |
| காட்டிலே நடந்தது - ராஜி | .. | 30 |
| லண்டனில் தீபாவளி - அழ. வள்ளியப்பா | .. | 33 |
| புலிக்குட்டி - 'ஆர்வி' | .. | 34 |
| தினத்தாள் உருவாகிறது - என். ராமகிருஷ்ணு | | 35 |








பாழடைந்த பங்களா - ஜயந்தி; கலா .. 41
சைஞ சு-சூ! - 'ஆர்வி' .. 46
கண்ணன் சித்திரப் போட்டி—மூவர்ணப் படங்கள்
பொழுதுபோக்கு - யார் கண்கள்? 49
போட்டோ க்விஸ் - ஶ்ரீதர் 50
எது எதைத் தின்னும்? - ரகமி 52
இவர்கள் யார்? 53
சித்திரக் கட்டம் - க. திருநாவுக்கரசு 54
வெட்டி ஒட்டும் படம் 55
ராஜாமணியின் கனவு 56
எண்ணிலே படங்கள் - ரகமி 58
சீனுக்காரன் மூட்டை - ரகமி 59
பட்சணம் திருடி 60
விடுகதைப் பாடல்கள் 62
பொழுதுபோக்கு - விடைகள் 64
ஆனந்தம், ஆனந்தமே! - எஸ். ரங்கநாயகி .. 65
வேலி - வி. ஆர். பாலன் .. 72
ராமு துப்பறிந்தான் - ஸி. எஸ். விஜயா .. 76
வெட்டி ஒட்டும் வேடிக்கை .. 104
கிளி சர்க்கஸ் - என். ராமகிருஷ்ண .. 81
சோறுதான் சொர்க்கம் - 'திருச்சி அண்ண' .. 84
தியாகம் - சங்கரசுப்பு .. 91
பலே திருடன் - பி. ஆர். வி. .. 96
துப்புத் துலங்கியது - கே. சுந்தரேசன் .. 97
தலைகீழ்ப் பாடம் - நீலம் .. 105
ஒரு நாள் இரவு - தங்கமணி .. 110
எந்த நாடும் எனக்கு நாடே! - பூவண்ணன் .. 113
மர்ம மனிதன் 'நடனு' .. 114
பக்த குசேலா - 'ஜாஜலி' .. 122
ஏழை மீன - ஸேன .. 126


ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு, ரெஸாக், கலர், மணி, சாகர், உமாபதி, ஜோதி, குரு.

அட்டைப் படம்: ரெஸாக்



# எருமைப் பால்

**ராஜாஜி**



ஒரு கிராமத்தில் ஒரு பூனை இருந்தது. அது ஒரு நாள் பாலைத் திருடிவிட்டது. பால் எருமைப் பால். நன்றாக வயிறு நிறையக் குடித்துவிட்டு ஒரு மூலையில் ஒடுங்கித் தூங்கிற்று,

பாலின் குணத்தால் பாவம், பூனையின் புத்தி மந்தமாய்ப் போய்விட்டது.

''என்னைப் பார்த்து ஏன் யாரும் பயப்படுவதில்லை? மாமா— புலியைக் கண்டால் எல்லாரும் பயப்படுகிறார்களே! நானும் புலியைப்போலத்தானே இருக்கிறேன்?'' என்று குள்ளநரியைக் கேட்டது.

நரி தெரிந்துகொண்டது, 'இந்தப் பூனை எருமைப் பாலை அதிகமாகக் குடித்துவிட்டது. அதனால்தான் இப்படிப் பைத்தியம் பிடித்து விட்டது' என்று. அது ஒரு குறும்பு செய்தது. ''பூனையே! உனக்கு இது தெரியவில்லையா? புலிக்கு நல்ல நீண்டபட்டைகள், மஞ்சளும் கறுப்புமாக இருக்கின்றன. அதைப் பார்த்துப் பயப்படுகிறார்



கள். உன் தோல் ஒரேமாதிரி சாம்பல் நிறமாக இருக்கிறது. அதைக் கண்டு 'இது பூனை, சாதுப் பிராணி' என்று யாருமே பயப்படுவதில்லை.''

இப்படி நரி சொல்ல, ''இதற்கு என்ன செய்வது?'' என்று கேட்டது பூனை.

''அதற்கென்ன? நீதான் அடுப்பண்டையே தினமும் இருக்கிறாய். பட்டை பட்டையாக வடுக்கள் உண்டாகும்படிச் சூடு போட்டுக் கொள்'' என்றது குள்ளநரி. குள்ளநரியின் யோசனையைப் பூனை நம்பிற்று. சூடு போட்டுக்கொண்டது.



பாவம், பூனை ரொம்பக் கஷ்டப்பட்டது, புண் வாசியாவதற்கு ஒரு வாரம் ஆயிற்று. ஆனால் உடம்பில் புலியைப்போல் பட்டை பட்டையாக வடுக்கள் உண்டாகியிருப்பதைக் கண்டு பூனை மிகவும் சந்தோஷப்பட்டது.

'இனிமேல் நானும் புலியானேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு புறப்பட்டது.

தெருவில் ஒரு மாடு இருந்தது. அதன் எதிரில் இந்தப் பூனை நின்று வெறித்துப் பார்த்தது. மாடு பயப்படவேயில்லை. அது ஏன் பயப்படும்? பூனையை அது லட்சியமே செய்யவில்லை. அதன்பாட்டுக்குப் புல் மேய்ந்துகொண்டிருந்தது.

அங்கிருந்த ஒரு நாய் பூனையைப் பார்த்துக் குலைத்தது. பூனை நாயைப் பார்த்துக்கொண்டு தைரியமாக, தன்னுடைய தோலில் சுட்ட வடுக்களை நன்றாகக் காட்டிக்கொண்டு நின்றது.

நாய் அதைக் கவனியாமல் பூனையைத் துரத்திக்கொண்டு வந்தது, பாவம்! பூனைக்குப் பயமாய்விட்டது. ஒரு வீட்டின் மேல் குதித்து ஏறிக்கொண்டு, 'நான் ஏமாந்துபோனேன். சூடு போட்டுக்கொண்டது தான் லாபம். ஒரு வித்தியாசமும் இல்லை. தெய்வாதீனம், வீட்டு மேல் குதித்து ஓடித் தப்புவதை மறந்துவிடவில்லை. நாயினின்று தப்பினேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

''என்ன சமாசாரம்?'' என்று கேட்டது நரி. பூனை வெட்கப்பட்டுப் பேசவில்லை.

''இனிமேல் எருமைப் பால் குடிக்காதே!'' என்று குள்ளநரி பூனைக்குச் சொல்லிவிட்டு ஓடிப்போயிற்று. ★


# தீபாவளித் திருநாள்

சென்னை, கல்வி அமைச்சர்
**கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம்**

இன்றைக்குத் தீபாவளி. ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். இந்தியா முழுவதிலும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் பண்டிகை இது. இந்தப் பண்டிகையினால் என்ன பயன்?

நாம் தினந்தோறும் காலையில் எழுந்திருந்து குளிக்கிறோம். நிமிஷத்துக்கு நிமிஷம் நம் உடம்பில் அழுக்குச் சேர்ந்துகொள்கிறது அல்லவா? நாம் அன்றாடம் குளிக்காவிட்டால் அழுக்கு மிகுதியாகச் சேர்ந்து உடம்புக்கு நோய் வந்துவிடும். உடம்பில் அழுக்குச் சேர்வதுபோலவே நம் சமுதாயத்திலும் கெட்டவை வந்து கலந்துவிடுகின்றன. தீமை விளைவிக்கும் குணங்களால் சமுதாயம் நாளடைவில் உருக்குலைந்து போய்விடும். எனவே சமுதாயத்தில் சேரும் அழுக்குப் போன்ற தீமைகளை உடனுக்குடன் அழிக்க வேண்டும். அப்பொழுதுதான் எந்தச் சமுதாயமும் வளர முடியும்.

சமுதாயத்துக்கு மாசு செய்யும் கெட்ட குணங்களுக்கு எல்லாம் ஓர் உருவமாக அமைந்தவன்தான் நரகாசுரன். உடலில்



சேர்ந்து நோயை உண்டாக்கும் அழுக்கைப்போல, அந்த அசுரன் சமுதாயத்தில் பல தீங்குகளைச் செய்துவந்தான். அந்த அழுக்கைத் தான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சமுதாயத்திலிருந்து ஒழித்தார், ஆனால் திரும்பத் திரும்ப அந்த அழுக்கு வந்து சமுதாயத்தில் படிந்து கொள்கிறது. அவைகளை நீக்கத் தொடர்ந்து முயற்சி செய்யவேண்டும். இதுவே வருஷந்தோறும் தீபாவளி கொண்டாடுவதன் தத்துவம்.

தீபாவளித் திருநாள் அன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் எல்லோரும் சோம்பலின்றி அதிகாலையிலேயே எழுந்திருக்கிறார்கள். நோயைத் துரத்தும் வகையிலே எண்ணெய் தேய்த்து நீராடுகிறார்கள். இதனால் உடம்பில் மறைந்துள்ள அழுக்குகள் அகலுகின்றன; சுறுசுறுப்பும் தெளிவும் ஏற்படுகின்றன. பிறகு பழைய ஆடைகளைக் களைந்து, புத்தாடைகளை உடுக்கிறார்கள். தீமை பயக்கும் கெட்ட கருத்துக்கள் அகன்று, நல்ல எண்ணங்கள் மனத்தில் நிறைகின்றன. பிறகு வெடி சுட்டு, மத்தாப்பூக் கொளுத்தி, எங்கும் பரந்து கிடக்கும் இருளை ஓட்டி விடுகிறோம். வெளியே வெளிச்சமும் மனத்திலே ஒளியும் நிலவுகின்றன. கெட்ட அரக்கனைத் துரத்திவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் சுவையான தின்பண்டங்களைத் திருப்தியுடன் பிறருக்கும் அளித்து நாமும் சாப்பிடுகிறோம். பசியும் பட்டினியும் இன்றி எல்லோரும் புன்சிரிப்புடன் ஒருவரை ஒருவர் இன்முகத்துடன் விசாரிக்கிறோம். இதுதான் தீபாவளித் திருநாள்.



குழந்தைகளே, நீங்கள் எல்லோரும் தினந்தோறும் உடம்பைச் சுத்தம் செய்துகொண்டு, மனத்தையும் தூய்மைப் படுத்தி, நல்ல குழந்தைகளாக வளர வேண்டும் என்று இந்த நல்ல நாளில் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

உங்கள் எல்லாருக்கும் என் அன்பார்ந்த தீபாவளி ஆசி.



# புத்தி வந்த எருமை

கி. வா. ஜகந்நாதன்

குளத்தில் ஒரே ஒரு தாமரைக் கொடி. அதில் ஒரே ஒரு தாமரைப் பூ. அதில் ஒரே ஒரு கரிய வண்டு. அந்தப் பூவுக்குச் சற்றுத் தள்ளி ஒரே ஒரு எருமை குளித்துக் கொண்டிருந்தது. தாமரை இலையை நெருங்கி அது மெல்லக் கடித்தது. அந்தப் பூவைக் கண்டதும் அதற்கு ஆசை உண்டாயிற்று. அது பூவைத் தலையிலா வைத்துக் கொள்ளப் போகிறது? அதை நாக்கினால் சுருட்டி வயிற்றுக்குள்ளே தள்ள வேண்டும் என்ற ஆசைதான்.

இலையை அது கடிக்கிறபோதே வண்டு அதைக் கவனித்தது. அடுத்தபடி பூவைத் தின்ன வந்தால் என்ன செய்வது என்ற பயம் உண்டாயிற்று. ஆகவே இனிய குரலில், ''எருமை மாமா. எருமை மாமா!'' என்று அழைத்தது.

''யார் அது?'' என்று தன் எருமைக் குரலில் கேட்டது மேதி.

''நான்தான் மாமா. தாமரை இலையோடு உங்கள் விருந்தை முடித்துக் கொள்ளுங்கள். இந்தப் பூவுக்கு வரவேண்டாம்'' என்றது, கொஞ்சும் குரலில் வண்டு.

''அது என் விருப்பம். நீ என்ன சொல்கிறது?'' என்று சொல்லிக் கொண்டே அது தன் முரட்டு நாக்கை நீட்டியது. 'இனிமேல் நாம் இதில் இருந்தால் பிழைக்க முடியாது' என்று எண்ணிய வண்டு, பூவினின்றும் புறப்பட்டது. போகும் போது அந்த எருமைக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று நினைத்தது. ஆகவே எருமை மாடு நீட்டின நாக்கில் சட்டென்று கொட்டிவிட்டுப் பறந்து போயிற்று. எருமை மாடு நீட்டின நாக்கை இழுத்துக் கொண்டது. வண்டு கொட்டின வலி தாங்கவில்லை. ''உன்னை விட்டேனா பார்!'' என்று கறுவியது.

ஒரு நாள் எருமை ஒரு மரத்தின் அடியில் படுத்துக்கொண்டிருந்தது. அந்த மரத்தின்மேல் தேன்கூடு கட்டித் தேனைச் சேமித்திருந்த பல வண்டுகளில் தாமரைப் பூ வண்டும் இருந்தது. அது எருமை மாட்டை அடையாளம் கண்டு கொண்டு, ''எருமை மாமா, சௌக்கியமா?'' என்று குறும்பாகக் கேட்டது.

''யார் அது?'' என்று எருமை அண்ணாந்து பார்த்தது.

''அதற்குள்ளா மறந்துவிட்டாய்? உன் நாக்கைக் கேட்டால் சொல்லுமே!'' என்றது வண்டு.

எருமைக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''அப்படியா சமாசாரம்? உன்னை விட்டேனா, பார்'' என்று அது எழுந்தது. மரம் சின்னதாக, இளையதாக இருந்தது. அதனால் எருமை அதன் மேல் உராய்ந்தும் மோதியும் அசைத்து அலைத்தது. அதன் பலமான உடம்பு தாக்கத் தாக்க மரம் ஆடி அசைந்து நடுங்கியது. அதன் மேலே கட்டியிருந்த தேன் அடை குலைந்தது. வண்டுகள் கலைந்தன. தாமரை வண்டுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பேசாமல் பறந்து போய்விட்டது.

மற்றொரு நாள் எருமை மாடு ஓரிடத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அங்கே ஒரு பெரிய வலுவான மரம். அதில்

வண்டுகள் தேன்கூடு கட்டின. தாமரை வண்டும் அங்கே இருந்தது. அது தன் பகையாளியான எருமையைக் கண்டது. 'இதை இன்று சும்மா விடக் கூடாது' என்று எண்ணி நாலைந்து வண்டுகளாகச் சேர்த்துக்கொண்டு அந்த எருமையின் முதுகெலும்புக்குப் பக்கத்தில் நன்றாகக் கொட்டிவிட்டது. அதோடு அந்த இடத்தைச் சுற்றித் தேனைத் தடவிவிட்டது. எருமை மாடு விழித்துக்கொண்டு பார்த்தது. யார் என்ன செய்தார்கள் என்று தெரிந்து கொள்ளவில்லை. அதன் முதுகில் வண்டுகள் கொட்டின இடத்தில் ரத்தம் கசிந்து வந்தது. அப்போது அங்கே வந்த காக்கை ஒன்று அதன் முதுகில் ஏறி ரத்தம் வந்த இடத்தைக் கொத்திப் புண்ணாக்கி விட்டது. எருமை எழுந்து எங்கெங்கோ ஓடியது. எங்காவது படுத்திருந்தால் தேன் இருந்தமையால் எறும்புகள் அதன் மேல் ஏறிப் புண்ணைச் சுற்றி மொய்த்தன. ஈக்களும் வந்து குடைந்தன. எருமை படாத பாடு பட்டது.


மறுபடியும் அந்தப் பெரிய மரத்தின் அடியில் வந்து படுத்துக் கொண்டது. ''எருமை மாமா, வலி எப்படி இருக்கிறது?'' என்று ஒரு குரல் கேட்டது. தாமரை வண்டு தான் அப்படிக் கேட்டது. எருமைக்கு யார் பேசுகிறது என்று தெரிந்து விட்டது. தான் பட்ட கஷ்டத்தால் அதற்குக் கொஞ்சம் புத்தி வந்திருந்தது. சிறிய பிராணி என்று அதை அலட்சியம் செய்தது பிசகு என்று தெரிந்து கொண்டது.

''தம்பி, நீயா?'' என்று மெதுவான குரலில் கேட்டது.

''ஆமாம், மாமா, நான்தான். அடையாளம் தெரிகிறதா?'' என்று வண்டு கேட்டது. இந்த மரம் மிக வலுவானது. எருமையினால் அசைக்க முடியாதென்று அதற்குத் தெரியும்.


''தம்பி, நான் தப்புப் பண்ணி விட்டேன். என்னை மன்னித்து விடு. நாம் இரண்டு பேரும் சிநேகிதர்களாக இருப்போம்'' என்று அழாக் குறையாகச் சொல்லியது. அவ்வளவு பெரிய சரீரம் படைத்த பிராணி கெஞ்சும்போது வண்டுக்கு மனசு இரங்கியது.

''மாமா, இனிமேல் நான் உனக்கு ஒரு தொந்தரவும் கொடுக்க மாட்டேன். உன் புண்ணுக்கு மருந்து போடுகிறேன்'' என்று சொல்லிய வண்டு நாலைந்து வண்டுத் தோழர்களையும் அழைத்துக் கொண்டு எருமைக்கு வைத்தியம் செய்யப் புறப்பட்டது. தேன் மெழுகையும் சாணத்தையும் கலந்து திரட்டி அதன் முதுகுப் புண்ணை மூடி விட்டது. பிறகு காக்கை கொத்தவில்லை. புண் நாளடைவில் ஆறிப் போயிற்று. ஆனால் வண்டுக்கும் எருமைக்கும் இருந்த விரோதம் அப்போதே ஆறிப் போய்விட்டது.



# போட்டி

கி. சந்திரசேகரன்



''எனக்குத்தானே இது!'' என்று முகத்தில் சந்தோஷம் பொங்கி வழிய, கையில் வைத்திருந்த 'கலர் பாக்'ஸை நச்சு உயரத் தூக்கி, சகோதரிகள் இருவருக்கும் காண்பித்தான்.

ரமா, ரங்கநாயகி இரண்டு பேரும் சேர்ந்துகொண்டு அந்த வர்ணப்பெட்டியை அவன் பிடியிலிருந்து தட்டிவிட்டார்கள். வெறும் தகரப் பெட்டிதான் அது. கறுப்பு 'எனமல்' மேல்பூச்சு பளபளவென இருந்தது.

உடனே மூவருக்கும் சண்டை மூண்டுவிட்டது. ''எனக்குடா, நான் பாத்துட்டுத் தர்றேன்'' என்றாள் ரமா விடாமல். அவள் நச்சுவை விட இரண்டு வயது பெரியவள்.

''போடி, உனக்கு என்னத்துக்கு? எனக்காவது பார்த்தால் புரியும்'' என்றாள் ரங்கநாயகி, மற்ற இருவர்களையும் விட விஷயம் தெரிந்தவள் என்ற தோரணையில். ''ஐய, கலர் பாக்ஸாம்! இரண்டு மூன்று வர்ணங்களையே காணலையே!'' என்று இகழ்ந்து வேறு சொன்னாள்.

நச்சு கீழே விழுந்து புரண்டு புரண்டு அழுதான். அவன் முகம் குங்குமப்பூவாய்ச் சிவந்துவிட்டது. ரங்கநாயகி அவளிடம் திருப்பி அதை நீட்டினாள். அவன் வாங்கிக் கொள்ளாமலே அழுதான்.

பார்த்தாள் ரமா. அதுதான் சமயம் என்று அவளிடமிருந்து வெடுக்கென்று அந்தப் பெட்டியைப் பிடுங்கிக்கொண்டு ஓடினாள். அதைப் பார்த்த நச்சு தனது இரண்டு கால்களையும் உதைத்துக் கொண்டு இன்னும் உச்சஸ்தாயியில் அழுதான்.

''என்னடீது திமிலோகம்!'' என்று அவர்கள் அம்மா பத்மாவதி வெளியே வந்தாள்.

''இல்லேம்மா, சித்திரப்போட்டியிலே நச்சுவுக்கு முதல் பிரைஸ் வந்திருக்கு, 'கலர் பாக்ஸ்'. அதை ரமா அவங்கிட்டேருந்து பிடுங்கினா. அதான் அழறான். சமாதானப்படுத்தினாக்கூடக் கேக்கலே'' என்றாள் ரங்கநாயகி.

உடனே ரமா மேல்மூச்சு வாங்க அம்மாவிடம் ஓடி வந்து, ''பாரம்மா, பொய் சொல்றா. நான் ஒண்ணும் பிடுங்கல்லே. இவதான் எடுத்தா . . உம் . . உம்'' என்றாள்.

நச்சுவுக்குச் சித்திரப் போட்டியில் பரிசு வந்தது அம்மாவுக்குப் பெருமையாக இருந்தது. அவனை மிகுந்த வாஞ்சையுடன் இரு கைகளாலும் கீழேயிருந்து வாரி எடுக்க முயன்றாள்.

நச்சுவுக்குத் தெரியாதா அம்மாவின் சலுகை? ஜயம் தன் கட்சியில் தான் என்பதைப்போல் இரு சகோதரிகளையும் பார்க்கலானான்.

''நச்சு, நீ போய் அப்பாகிட்டே பரிசைக் காண்பி!'' என்றாள் அம்மா.

சுந்தரம் - அவன் அப்பா - ஆபீஸுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தவர், ''பரிசுமாச்சு, மாங்காயுமாச்சு! காலையிலே கணக்குக் கொடுத்தால் கூட்டல் வரலேன்னு அழறான். படம் எழுதினானாம் படம்! ஸ்கூல்லே குழந்தைகளை இப்படிக் கெடுக்கிறார்களாக்கும்!'' என்று இரைந்தார்.

ரங்கநாயகிக்கு அப்பா சொன்னதில் மிகமிகத் திருப்தி. ஏனெனில் நச்சு படிக்கும் பள்ளியிலேயேதான் மேல் வகுப்பில் அவளும் ரமாவும் படித்தார்கள். பத்து வயதுக்குமேல் உள்ளவர்களுக்கும் சித்திரப் போட்டியில் தனியாகப் பரிசு வைத்திருந்தார்கள். ஆனால் அதில் அவர்களுக்குப் பரிசு கிடைக்கவில்லை. பத்து வயசுக்குள் போட்டியிட்டவர்களில் நச்சுவுக்குப் பரிசு வந்தது, அவளுக்கு ஏனோ அவ்வளவாகப் பிடிக்கவில்லை! மேலும், அம்மா வேறு பெருமைப் பட்டுக்கொண்டது உள்ளூற அவளுக்குப் பிடிக்கவில்லை. கண்டபடி வர்ணத்தைக் காகிதத்தின் மேலெல்லாம் பூசியிருந்த நச்சுவுக்குப் பரிசு, அதிலும் முதல் பரிசு என்றால் அவளுக்குப் பிடிக்குமா?

படத்தில் மாடு புல் மேய்வதைக் காட்ட வேண்டும் என்று நச்சுவுக்கு ஆசை. பச்சை வர்ணத்தைக் குழைத்து அப்படியே பூசியிருந்தான். அதுதான் புல்லாம். மாடு தலையைக் குனிந்துகொண்டிருப்பது போல் கோடுகளை இப்படியும் அப்படியுமாய்ப் போட்டு ஒன்றைக் காட்டி இருந்தான். ஆனால் மாட்டின் வாலை அவன் மேலே தூக்கி விட்டிருந்தது புல்லைக் கண்ட அதன் சந்தோஷத்தை நன்கு விளக்கியதாம். சிறு குழந்தையின் மனசில் புல்லைக் கண்ட மாடு எவ்வளவு குதூகலமடைகிறது என்று கற்பனை உதித்திருக்கிறதே என்று தீர்ப்பாளர்கள் மிகவும் பாராட்டினார்கள். ரங்கநாயகியின் கண்ணுக்குப் படத்தில் விளங்காத ஏதோ ஒரு கலைச் சூட்சுமம் தீர்ப்பாளர் கண்களுக்கு விளங்கியதற்கு அதுதான் காரணம்.

ஆகையால் அவளுக்கு அப்பா நச்சுவைக் கடிந்ததில் திருப்தி ஏற்பட்டது. மெதுவாய் அவள் அப்பாவிடம், "பாரப்பா, நச்சு போட்ட படத்துக்குப் பரிசாம். குழந்தைன்னூட்டுக் கொடுத்திருக்கா அப்பா. நான் மட்டும் நன்னாப் போடலியா?" என்றாள். இதற்குள் ரமா அம்மாவிடம் தன் வீதம் சலுகைக்காக நெருங்கினாள்.

"அப்பா, நீ அன்னிக்கி வாங்கித் தர்றேன்னியே, எண்ணெய்க் கலர் பாக்ஸ்! அதுதான் எனக்கு வேணும். நிச்சயமாய் வாங்கித் தரணும்" என்றாள் ரங்கநாயகி, தனிமையில். அப்பாவிடம் அவளுக்கு அதிகச் சலுகை உண்டு. "ஆகட்டும், ஒருவருக்கும் சொல்லாதே. நிச்சயம் வாங்கித் தர்றேன்" என்றார் அப்பா.

இதற்குள், ரமா தாயிடம் சென்றவள், தனக்குப் பிடித்த 'டாலியை' வாங்கித் தரவேண்டும் என்று தொந்தரவு செய்யத் தொடங்கினாள். அம்மாவுக்கு ரமாவிடம் மற்றவர்களைவிடப் பற்றுதல் அதிகம். "அவசியம் சாயந்தரம் வாங்கலாம். அவர்களுக்கெல்லாம்



தெரிய வேண்டாம்'' என்று அம்மா எச்சரித்தாள்.

நச்சு தனக்கு ஏதோ புதிய கௌரவம் ஏற்பட்டிருப்பதாகப் பாவனை செய்துகொண்டு இங்கும் அங்கும் நடைபோட்டான். நடு நடுவே, ''பாத்தியா? உங்களுக்கெல்லாம் 'பிரைஸ்' வரவில்லையே! எனக்கு மட்டும்தானே!'' என்றான். ரங்கநாயகிக்கு அப்பா சொன்னதைச் சொல்லிவிட வேண்டும்போல் ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஆனால் அடக்கிக்கொண்டாள்.

சாயந்தரம் அப்பா யாருக்கும் தெரியாமல் ரங்கநாயகிக்கு எண்ணெய் வர்ணப் பெட்டியை வாங்கி வந்தார். அம்மாவும் ரமாவிடம் 'டாலி'யைக் காட்டிக் கண் சிமிட்டி அழைத்தாள்.

பாவம், நச்சுவுக்கு ஒன்றுமே தெரியாது. முதலில் ரங்கநாயகி எண்ணெய்க் கலர் பாக்ஸை எடுத்து வைத்துக்கொண்டு வர்ண'டியூபு'களைப் பிதுக்கிப் பிதுக்கிப் பார்த்துக்கொண் டிருந்தாள். ரமா தன் டாலியைக் கீழே படுக்க வைப்பதும் பிறகு தூக்குவதுமாய் அதன் கண்கள் மூடித் திறப்பதை ரங்கநாயகிக்குக் காட்டிப் பெருமைப்பட்டாள்.

காலையில் போட்ட சண்டையினால் நச்சுவின் கலர் பாக்ஸின்மேல் கிரல்கள் விழுந்திருந்தன. அவனுக்கு அவர்கள் கையிலுள்ள பகட்டான சாமான்களைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது. ''இது அம்மா வாங்கித் தந்தாடா'' என்று பழிப்புக் காட்டினாள் ரமா. ''இது அப்பா வாங்கித் தந்தாடா! உன் பீத்தல் பாக்ஸ் எங்கே? என் பாக்ஸைப் பாரு! ஜம் முனு இருக்கு'' என்றாள் ரங்கநாயகி.

நச்சுவுக்கு என்ன சொல்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. ஓவென்று அழத் தொடங்கிவிட்டான். யார் சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை. விடாமல் கெட்டியாய் அதுவரை பிடித்திருந்த கலர் பாக்ஸை எட்டித் தூர விட்டெறிந்துவிட்டான். ''எனக்குப் பிரைஸ் வேண்டாம். அதெல்லாம் மாதிரித்தான் எனக்கும் வேணும்'' என்று அழ ஆரம்பித்தான்.





# நல்ல தோல்வி

மு. வரதராசன்

பொழுது எப்படியும் போய் விடும். எந்தக் காரணத்தாலும் அது நிற்கப் போவதில்லை. நாம் சுறுசுறுப்பாக இருந்தாலும் சரி, அல்லது சோம்பலாக இருந்தாலும் சரி, பொழுது போய்க்கொண்டுதான் இருக்கிறது. பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது; சூரியனையும் சுற்றி வருகிறது. அதனால் பகலும் இரவும் மாறி மாறி வருகின்றன; நாட்கள் மாதங்களாய், மாதங்கள் ஆண்டுகளாய்க் கழிந்து கொண்டே இருக்கின்றன. யாருக்காகவும் எதற்காகவும் பொழுது நிற்பதே இல்லை.

ஆனால் பொழுது இன்பமாகப் போக வேண்டும்; கவலை இல்லாமல் கழிய வேண்டும். அதைத்தான் எல்லோரும் விரும்புகிறார்கள். அதற்காகவே பொழுது போக்கு என்று ஒன்றைத் தேடுகிறார்கள்.

வயிற்றுக்காக செய்யும் தொழில் பெரும்பாலும் ஒரு சுமையாகவே கருதப்படுகிறது. அதை எந்நேரமும் செய்துகொண் டிருக்க யாரும் விரும்பவில்லை. அதைச் செய்து முடித்த பிறகு, சுமையாகத் தோன்றாத வேறு எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. அப்படிச் செய்யும் ஒன்று தான் பொழுது போக்கு எனப்படுவது.

பொழுது போக்காகச் செய்வது விருப்பமானதாக இருக்க வேண்டும். இன்பமாக இருக்க வேண்டும். கவலையை மறப்பதற்கு வேண்டிய கற்பனை அதில் இருக்க வேண்டும். கொஞ்ச நேரமாவது இந்த உலக வாழ்க்கையை விட்டு வேறொரு கற்பனை யுலகத்தில்-அல்லது வேறொரு புதுமையான வாழ்வில் - மனம் ஈடுபடுவதாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால்தான் அதைப் பொழுது போக்கு என்று யாரும் விரும்புவார்கள்.

சீட்டாட்டம் நல்ல பொழுது போக்கு. மேலே சொன்ன தன்மைகள் எல்லாம் அதில் இருக்கின்றன.

நான் சிறு பையனாக இருந்த போது சீட்டாட்டத்தில் பழகினேன். நான் என் தமக்கை வீட்டுக்கு விடுமுறையில் செல்லும்போது, அங்கே திண்ணையில் பலர் கூடிச் சீட்டு ஆடிக் கொண்டிருப்பவர்களைப் பார்ப்பது வழக்கம். அதுவும், ஞாயிற்றுக் கிழமையானால், பகல் 12 மணிக்குத் திண்ணையில் தொடங்கும் சீட்டுக் கச்சேரி முடிய இரவு ஒன்பது மணி ஆகும். சில ஞாயிற்றுக் கிழமைகளில் பத்துப் பதினொரு மணிக்கு

மேலும் கச்சேரி நடந்துகொண் டிருக்கும்.

அந்தச் சீட்டுக் கச்சேரியில் இருந் தவர்கள் ஒருவரும் என்னை ஆடும் படி அழைக்கவில்லை. ஒருவரும் என்னைத் தனியே உட்கார வைத்துக் கற்றுத் தரவும் இல்லை. சும்மா பார்த்துக் கொண்டிருந் தேன். பொழுது போக்காகப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னை அறியாமல் நான் சீட் டாட்டம் கற்றுக்கொண்டு விட் டேன்.

எப்படித்தான் கற்றுக் கொண் டேனோ தெரியவில்லை. அந்த ஆட் டத்தில் கெட்டிக்காரன் ஆகிவிட் டேன். சீட்டுக் கச்சேரி நடந்து கொண்டே யிருக்கும். அவர்கள் எல்லோரும் வளர்ந்தவர்கள். நான் (அப்போது) சின்னப் பையன். அவர் களுக்கு இடையே தலையை நுழைத் துச் சாய்ந்தபடி பார்த்திருந்தே ஆட்டம் முழுதும் கற்றுக்கொண் டேன். ஸ்பேட், ஆடின், டைமண்ட், கிளாவர் முதலிய பெயர்களும், எது எதைவிடப் பெரியது என்பதும், எதைக் கொண்டு எதை அடிக்க லாம் என்பதும் கற்றுக் கொண் டேன். ஆட்டம் வெல்லுமா, தோற் குமா என்பதை முன்னமே தெரிந்து கொள்ளவும் என்னால் முடிந்தது. சில வேளைகளில் என் பக்கத்தில் ஆடியவர் எந்தச் சீட்டை எடுப்பது என்று தயங்கி எண்ணும்போது, நான் சட்டென்று தகுந்த சீட்டு இது என்று விரலால் தொட்டுக் காட்டுவேன். அவர் என் அறிவுக் கூர்மையைப் போற்றி, என் முது கில் தட்டிக் கொடுப்பார். என் திறமையால் சிலருக்கு எதிர் பாராத வெற்றி கிடைத்ததும் உண்டு. இதைத் தெரிந்துகொண்டு ஒருவர் என்னைத் தம் பக்கமாக வந் திருக்கும்படி செய்து, கொஞ்சம் இடமும் கொடுப்பார். தமக்குத் தேநீர் வாங்கிவரச் சொல்லும் போது, எனக்கும் ஒரு 'கப்' சேர்த்து மிகுதியாக வாங்கிவரச் சொல்லுவார். எதிர்பாராத வகை யில் தோற்றுவிட நேர்ந்தால், ''என்ன தம்பி! நீ இன்றைக்கு என்னைக் கைவிட்டு விட்டாய்! ஒன் றும் சுறுசுறுப்பாக இல்லையே!'' என் பார். ''என்ன செய்யலாம், போங்க! நமக்கு வந்த சீட்டெல் லாம் அப்படி வந்து சேர்ந்துவிடு கிறது. நாம் என்ன செய்யலாம்?'' என்பேன். ''இன்றைக்கு நீயும் நானும் யார் முகத்திலே விழித் தோமோ?'' என்று அவருடைய 'துர திர்ஷ்ட'த்தில் எனக்கும் பங்கு கொடுப்பார். 'யார் முகத்திலே விழித்தோமோ' என்று அவர் சொன்னதைக் கேட்டு, நான் காலையில் எழுந்ததும் யார் யாரைப் பார்த்தேனோ அவர்களை எல்லாம் மனத்திற்குள்ளேயே வைது வெறுத் துக்கொண் டிருப்பேன்.

வெற்றி தோல்விகள் பெரிய செய்திகள் அல்ல. சும்மாப் பார்த்த படியே ஆட்டத்தைக் கற்றுக் கொண்டு, வளர்ந்தவர்களுக்கு வழி காட்டும் படியான திறமை பெற்றுக் கொண்டேனே, அதுதான் பெரிது.

இப்போது நினைத்துப் பார்த் தால், எனக்கு வெட்கமாக இருக் கிறது. கெட்டதை இவ்வளவு எளி தில்-முயற்சி இல்லாமல்-கற்றுக் கொள்ள முடிந்ததே என்று நினைக் கும்போது வருத்தமாக இருக்கி றது.

உண்மையாகவே பார்த்தால், இயற்கையில் தீமைக்குக் கவர்ச்சி இருக்கிறது; நன்மைக்கு அவ்வளவு கவர்ச்சி இல்லை. சீட்டாட்டம் மட் டும் அல்ல, கெட்டது எதுவுமே கவர்ச்சியாக இருக்கிறது. எளிதில் கற்றுக்கொள்ள முடிகிறது.

நல்லது, பாடுபட்டால்தான் கற்றுக்கொள்ள முடிகிறது. நல்லவைகளில், கவர்ச்சியோடு அமைந்தது இசை. அந்த இசை யும் பாடுபட்டுக் கற்க வேண்டி யுள்ளது.

சிறு வயது முதல் இசை கற்றுக் கொள்ள வேண்டும் என்று எனக்கு மிகுந்த ஆவல் உண்டு. இளமை யில் ஒருவரிடம் போய்க் கற்க முயன்றேன். ''உனக்கு இசை வராது, போ'' என்று அவர் சோர்வு படுத்தி அனுப்பிவிட்டார். நானும் அவர் சொன்னது உண்மை என்று நம்பி ஏமாந்து முயற்சியை விட்டு விட்டேன். சில ஆண்டுகள் கழித்து மறுபடியும் அந்த ஆசை வந்தது. அதற்குள் பரீட்சை, பரீட்சை என்று

ஒன்றன் பின் ஒன்ருக எறும்பின் சாரை போல் பரீட்சைகள் தொடர்ந்து வந்து என் உழைப்பை எல்லாம் கொள்ளை கொண்டன.

பரீட்சைகள் எல்லாம் முடிந்தன. அவற்றிற்கு ஒரு பெரிய முற்றுப் புள்ளி இடும்படியான நல்ல காலம் வந்தது. மற்றவர்களுக்குப் பரீட்சைகள் வைத்துப் பழி வாங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த நிலையில் இசை கற்றுக் கொள்ளலாம் என்ருல், ஓய்வு இல்லை. காலையில் எழுவது முதல் இரவு 11 மணிக்கு மேல் தலை சாய்ப்பது வரையில் கடமை கடமை என்று கட்டெறும்புச் சாரை போல் கடமைகள் கணக்கில்லாமல் நின்று பயமுறுத்துகின்றன. ஆகையால் இசை பற்றிய முயற்சியை விட்டு விட்டேன்.

ஆனுல் இசைக்குப் பஞ்சமா? இல்லை. எங்காவது திருமணத்திற்குப் போனுல் அங்கே இசைக் கச்சேரி. எங்காவது கல்வி நிலைய விழாவுக்குப் போனுல் அங்கே இசை விருந்து. கடற்கரைக்குப் போனுல் அங்கே வானெலியில் இசையின் ‘கர்ச்சனை’. வீட்டில் ஒரு மூலையில் சாய்ந்தால் வானெலிப் பெட்டியிலிருந்து ராஜரத்னம் நாதஸ்வரம், அல்லது, சாமிநாதப் பிள்ளை புல்லாங்குழல், அல்லது அவர் பாட்டு, இவர் பாட்டு, வயலின் அல்லது பிடில்; ஏதாவது ஒன்று வலிய வந்து செவியில் விழுந்து இசையமுதைக் கொட்டுகிறது.

இவ்வளவு எல்லாம் இருந்தும் நான் இசையைக் கற்றுக்கொள்ளமுடிந்ததா? அதுதான் இல்லை. பாடுபடாமல் கற்றுக்கொள்ளக் கூடிய எளிய கலையாக அது இல்லை. நல்ல பொழுது போக்கான கலைதான்; ஆனுல் கற்பது அரிதாக உள்ளது.

சீட்டாட்டம் ஒரு வகைச் சூது என்ற எண்ணம் இளமையிலே எனக்கு ஏற்பட்டது. சீட்டு ஆடும் திண்ணைகளில் சாய்வது கூடாது என்று ஒருவகைப் பிடிவாதம் எனக்குள் ஏற்பட்டது. சீட்டுக் கட்டைக் கையால் தொடவும் மறுத்தது என் மனம். எல்லாம் நன்மையே ஆயிற்று. அதன் பயனுக, கற்றுக் கொண்ட சீட்டாட்டத்தை மறந்து விட்டேன். தீமை மறந்து போகாது; எப்படியும் நினைவில் நிற்கும்; அதை மறக்க முயன்ருலும் முடியாது என்று சொல்வார்கள். நான் அதைப் பொய்யாக்கி விட்டேன். எப்படியோ மறந்து விட்டேன்.

சென்ற ஆண்டில் நண்பர்களின் கூட்டத்தோடு டில்லிக்குப் போய் வந்தேன். போகும்போது இரண்டு நாளும் திரும்பும்போது இரண்டு நாளும் ரெயில் பெட்டியிலேயே காலம் கழிக்க வேண்டி ஏற்பட்டது. நண்பர் ஒருவரின் கையிலிருந்து சீட்டுக் கட்டு வெளியே வந்தது. ஆடுவதற்கு அமைந்தார்கள். ஒருவர் குறையாக இருந்தது. எல்லோரும் என்னைப் பார்த்தார்கள். நான் மேல் தட்டில் பேசாமல் படுத்துக்கொண்டிருந்தேன். ‘‘கொஞ்சம் கீழே வரலாமே, எங்களுக்கு உதவியாக!’’ என்ருர் சீட்டுக் கட்டைக் கையில் ஏந்திய நண்பர்.

‘‘எனக்கு ஆட்டம் தெரியாதே!’’ என்றேன்.

‘‘பொய்’’ என்ருர் மற்ரெருவர்.



''சூதை விடுவதற்குப் பொய் சொன்னாலும் குற்றம் இல்லை என்று எண்ணிப் பொய் பேசத் துணிந்தார்'' என்றார் இன்னொருவர்.

''சின்ன வயதில்கற்றுக் கொண்டிருந்தேன். பிறகு அடியோடு மறந்துவிட்டேன்'' என்றேன்.

''இது என்ன திருவாசகமா, தேவாரமா, மறந்து போவதற்கு!'' என்று சிரித்தார் முன்னவர்.

''சும்மா இறங்கி வாங்க. ஒரு பாவமும் இல்லை'' என்றார் இன்னொருவர்.

''மறந்து போனால் கற்றுக் கொடுக்கிறோம். மெய்யா, பொய்யா, பார்க்கலாம்! இறங்கி வாங்க'' என்றார் மூன்றாம் நண்பர்.

பேசாமல் இறங்கினேன். நண்பர்கள் ஆரவாரமாக வரவேற்றார்கள். அந்த வரவேற்பு எனக்கு வியப்பாக இருந்தது. மனமார இப்படி நண்பர்கள் வரவேற்பதை நல்ல துறைகளில் காண்பது அருமையாக இருக்கிறது. தீய துறைகளில் என்றால், அறிமுகம் ஆகாதவர்களும் வரவேற்கக் காத்திருக்கிறார்கள்.

ஆடினேன். ஆட்டம் வரவில்லை. நண்பர்கள் அடிக்கடி எள்ளி நகையாடினார்கள். என் ஆட்டம் கோமாளிக் கூத்துப் போல் இருந்தது. அவர்களுக்கு அது சீட்டாட்டமாக இல்லை; சிரிப்பாட்டமாக இருந்தது. சீட்டாட்டத்தில் அவர்களுக்கு இருந்த ஆர்வமும் ஊக்கமும் குறைந்து போயின. இப்படி இரண்டு ஆட்டங்கள் ஆடியதும், நண்பர்களின் முகத்தில் சோர்வைக் கண்டேன்.

மறுபடியும் மூன்று பேரும் சேர்ந்து என்னைப் பார்க்கும் நிலைமை வந்தது. ''பேசாமல் பழையபடி மேலே ஏறிப் படுத்துக் கொள்ளுங்கள்'' என்றார் ஒருவர்.

''அதுதான், சரி!'' என்றார் இன்னொருவர்.

''மூன்று பேரே ஆடுவோம்'' என்று ஓர் ஆட்டத்தின் பெயரைச் சொன்னார் மற்றவர்.

நான் பழையபடியே மேல் தட்டில் போய்ப் படுத்தேன்.

அந்தப் பெட்டியில் தமிழ் தெரியாத வடநாட்டார் சிலர் எங்களோடு பயணம் செய்தார்கள். எங்கள் பேச்சு அவர்களுக்கு விளங்காவிட்டாலும், என் தோல்வி எப்படியோ விளங்கி விட்டது. அவர்களும் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். நான் மேல் நிலையில் இருந்தபடியே எல்லோரையும் பார்த்துச் சிரித்தேன்.

தோல்விதான். ஆனாலும் இந்தத் தோல்வி எனக்கு நன்மை செய்யும் தோல்வி என்ற மகிழ்ச்சி என் உள்ளத்தில் இருந்தது.

வெற்றி பெற்றிருந்தால் என் கதை என்ன ஆயிருக்கும்? ரெயிலில் மட்டும் அல்ல, சென்னைக்குத் திரும்பிய பிறகு வீட்டிலும் தோட்டத்திலும் வேறு இடத்திலும் சீட்டாட்டமாய் முடிந்திருக்கும். சீட்டாட்டம் என் பெரிய பொழுது போக்காக அமைந்து விட்டிருக்கும். இப்போது என்னுடைய பொழுது போக்குகளாக உள்ளவை படிப்பும் தோட்ட வேலையும் வளை பந்தாட்டமும். அவை என்னைத் துறந்திருக்கும்.

பொழுது போக்காக, படிப்பு நல்லது; தோட்ட வேலையும் நல்லது; பந்தாட்டமும் நல்லது. பரீட்சைத் தொல்லைகளால் உடம்பைப் பாழாக்கிக் கொண்ட எனக்குத் தோட்ட வேலையும் பந்தாட்டமும் நல்ல மருந்துகள்; உடம்பைப் போற்றி வாழ்வைக் காக்கும் நல்ல பொழுது போக்குகள் இவை.

சீட்டாட்டம் என்னை இரண்டாவது முறை பிடித்துக்கொண்டிருந்தால், உட்கார்ந்த இடத்தை விட்டு மணிக் கணக்காக எழாமல் சீட்டைக் குலுக்கும் வெறி பிடித்திருக்கும். அதனால் என் உடம்பு எள்ளளவும் நன்மை அடைந்திருக்காது. மேலும் கெடுவதற்கே வழியாகும். நல்ல காலம், நான் தோல்வியுற்றேன். ★



# சின்னப் பாப்பா

எ. ந. கணபதி



**சிரிப்பு:**

சின்னப் பாப்பா என்னைப்பார்த்தால்
சிரிப்பு வருகுதா?—வெகு
சிங்காரமாய்க் கையைக் கொட்டிச்
சிரிக்கச் சொல்லுதா?—நான்
சொன்ன கேலி உன் மனத்தைத்
தொட்டுவிட்டதா?—உந்தன்
தூய உள்ளம் கும்மாளமாய்த்
துள்ளிக் குதிக்குதா?—சொல்
துள்ளிக் குதிக்குதா?

**அழுகை:**

தூங்கையிலே சொப்பனத்தில்
சிங்கம் வந்ததா?—அது
சுடும் விழியால் விழித்துப் பார்க்கத்
துடித்துப் போனாயா?—அன்றி
வேங்கைப்புலி சீறியுன்னை
விரட்டி வந்ததா?—அந்த
வேளையிலே கண் விழித்து
விம்மி அழுதாயா?—சொல்
விம்மி அழுதாயா?

**கோபம்:**

வீட்டில் அன்னை காலைநேரம்
வேலை செய்கையில்—நீயும்
வேடிக்கையாய்த் தெருவில் சென்று
நின்றிருந்தாயா?—உள்ளே
கூட்டிவந்த தாய் தலையில்
குட்டி விட்டாளா?—அந்தக்
கோபத்திலே அன்னையோடு
பேசமாட்டாயா?—சொல்
பேச மாட்டாயா?

**சமாதானம்:**

சற்றுநேரம் கழித்து அன்னை
வெளியில் வந்தாளா?—உன்னைச்
சலுகையோடு எடுத்து முகத்தில்
முத்த மிட்டாளா?—அப்போது
உற்றுப் பார்த்த உன்றன் கோபம்
ஓடி விட்டதா?—நீயும்
உவகையோடு சிரித்து முகம்
மறைத்துக் கொண்டாயா?—சொல்
மறைத்துக் கொண்டாயா?

# கற்பகப்பூ

ராஜமகேந்திரபுரம் என்று ஒரு பட்டணம் உண்டு. அதை ராஜமகேந்திரன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ராஜலக்ஷ்மி என்ற பெயருள்ள அழகான மகள் ஒருத்தி இருந்தாள். அரசனுக்கு அவளைத் தவிர வேறு குழந்தைகள் இல்லாததால் அவளை மிகச் செல்லமாகவளர்த்து வந்தான். அவளுக்கு எல்லா சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுத்தான். அவள் விரைவிலே கல்யாணம் செய்துகொண்டு தன் கணவனோடிருந்து அரசாட்சியைக் கவனிப்பதற்குத் தயாராக வேண்டுமென்பது அரசனுடைய ஆசை. ஆனால் ராஜலக்ஷ்மி அவசரப்பட்டு மணம் செய்துகொள்ள விரும்பவில்லை. தனது நோக்கத்திற்கு ஏற்ற கணவனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்பினாள். அரசனும் சம்மதித்தான்.



பெ. தூரன்

எத்தனையோ அரசகுமாரர்கள் அவளை மணக்க வந்தார்கள். ஆனால் அவள் அவர்களில் யாரையும் மணக்கச் சம்மதிக்கவில்லை.

ராஜலக்ஷ்மி தினந்தோறும் அதிகாலையிலே அரண்மனை உய்யானவனத்திலே உலாவிக்கொண்டிருப்பாள். அப்போது அவளைப் பார்த்தவர்கள் வனதேவதையோ என்று அதிசயப்படுவார்கள்.

உலாவி முடிந்த பிறகு அவள் அங்குள்ள குளத்திலே குளித்துவிட்டுத் தோணியில் அமர்ந்து அதைச் செலுத்துவாள். தனது அழகான நீண்ட கூந்தலை உலர்த்திக் கொண்டே குளத்தின் மத்தியில் உள்ள சித்திர மண்டபத்திற்குப் போவாள். அங்கேயிருந்த பளிங்குப் பீடத்திலே அமர்ந்து கடவுளை வணங்கிப் பாடுவாள்.

இப்படித் தினமும் நடந்தது. ஒரு நாள் அந்தப் பளிங்குப் பீடத்திலே அழகான பூ ஒன்று கிடந்தது. சித்திரக் கூடத்




தில் அவள் கால் வைத்தவுடனேயே அந்தப் பூவிலிருந்து வாசனை வீசுவதை அறிந்தாள். அந்த மாதிரி வாசனையுள்ள பூவை அவள் அதுவரை பார்த்ததே இல்லை. அந்த மாதிரி அழகுப் பூ உலகத்திலேயே இல்லை என்று சொல்லும்படியாக இருந்தது. ராஜலக்ஷ்மி மிகுந்த ஆவலோடு அதை எடுத்துச் சூடிக் கொண்டாள்.

அன்று முதல் நாள்தோறும் பளிங்குப் பீடத்திலே ஒரு புதிய பூக் கிடந்தது. அவளுக்காக யாரோ அதை அங்கே கொண்டுவந்து தினமும் வைப்பதாக அவள் நினைத்தாள். அது யாரென்று தெரிந்து கொள்ள ஆசை கொண்டாள்.

அதனால் அவள் ஒரு நாள் பொழுது விடிவதற்கு முன்னாலேயே எழுந்து சென்று சித்திரக்கூடத்தில் ஓரிடத்தில் மறைவாகப் பதுங்கியிருந்தாள். பொழுது விடிகிற சமயத்திலே அழகான குருவி ஒன்று அன்று மலர்ந்த பூவொன்றைத் தனது மூக்கிலே கொத்திக் கொண்டு அங்கே வந்தது. அந்தக் குருவியைப் போல அழகான நிறமுடைய குருவியை ராஜலக்ஷ்மி பார்த்ததே இல்லை. குருவி, பூவை வைத்துவிட்டுப் பறந்தோடி விட்டது.

அரசகுமாரிக்கு அந்தக் குருவியின்மேல் மிகுந்த அன்புண்டாயிற்று. ஒரு நாள் வழக்கத்திற்கு மாறாகப் பளிங்குப் பீடத்தின்மேல் மூன்று பூக்கள் இருந்தன. ராஜலக்ஷ்மிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அது முதற்கொண்டு தினமும் மூன்று பூக்கள் இருக்கவே, அரசகுமாரி மறுபடியும் ஒரு நாள் பொழுது விடிவதற்கு முன்பே சித்திரக் கூடத்திற்கு வந்து மறைந்திருந்தாள். முதலில் அந்தக் குருவி வந்து பூவைப் பீடத்தின் மேல் வைத்துவிட்டுச் சென்றது. பிறகு ஓர் அரசகுமாரன் ஒரு பூவை எடுத்துக் கொண்டு அங்கே வந்தான். அவன் ஒரு தோணியிலேறி வந்திருக்கிறான். அவன் போன பின்பு மற்றோர் அரசகுமாரன் வேறொரு தோணியிலேறி அங்கே இன்னும் ஒரு பூவை வைத்து விட்டுப்போனான்.



**வாத்தியார்:** ஏண்டா பையா! வரும்போது தலையை வாரிக் கொண்டு வரப்படாது - ஒரே பரட்டையா வந்திருக்கிறாயே!

**பையன்:** சீப்பு இல்லே, சார்!

**வாத்:** உனக்கு இல்லாவிட்டால், உன் அப்பா சீப்பை எடுத்து வாரிக்கொள்ளப் படாதா?

**பையன்:** முடியாது, ஸார்!

**வாத்:** ஏன்?

**பையன்:** அப்பாவுக்குத் தலை முழு வழுக்கை, ஸார்!

---

இந்த இரு அரசகுமாரர்களிடமும் அவளுக்கு அனுதாபமும் அன்பும் தோன்றலாயின.

ஆனால் திடீரென்று ஒரு நாள் பளிங்குப் பீடத்திலே இரண்டு பூக்கள்தான் இருந்தன. மற்றொரு பூவைக் காணவில்லை. அன்று முதல் அரசகுமாரிக்குக் கவலையுண்டாயிற்று. யார் மலர் கொண்டு வருவதில்லை என்று அறிந்து கொள்ள விரும்பினாள்.


வழக்கம்போல் அந்தக் குருவி அன்று வரவில்லை. அரசகுமாரர்

கள் மட்டும் தனித் தனியாக வந்தார்கள். அவர்களில் ஒருவர் குருவியைக் கொன்றுவிட்டதாக எண்ணிக் கவலைப்பட்டாள் அவள்.

அதனால் மறுநாள் அவள் அவர்களிடம் தனித் தனியாகக் குருவியைப்பற்றி விசாரித்தாள்.

முதல் அரசகுமாரனைப் பார்த்து, "அரசகுமாரா, அந்தக் குருவியை நீ கொன்றாயா?" என்று கேட்டாள்.

அரசகுமாரனுக்குத் தான் வில் வித்தையில் கெட்டிக்காரன் என்று காண்பித்துக்கொள்ள வேண்டுமென்று ஆசையுண்டாயிற்று. அதனால், "ஆமாம், நான்தான் ஒரே அம்பினால் அதைக் கொன்றேன். ஒரு நாள் அந்தக் குருவி அழகிய மலரை உனக்காக இங்கே கொண்டு வருவதைக் கண்டேன். அது முதல் நானும் பூக்கொண்டு வருகிறேன். எனக்குப் போட்டியாக அது உன்னுடைய அன்பைக் கவருவதை என்னால் சகிக்க முடியவில்லை" என்றான்.



அப்பா: என்னடா முழிக்கிறே! நான் கணக்குப் போட்டுத் தரட்டுமா?

பிள்ளை: வேண்டாமப்பா! தப்பாகப் போடறதை நானே போட்டுக்கொள்கிறேன்!

இரண்டாவது அரசகுமாரனுக்கும் தனது திறமையை அரசகுமாரிக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று ஆசை. அவனும், "ஆமாம், நான்தான் ஓர் அம்பை எய்து அதை வீழ்த்தினேன். எனக்குப் போட்டியாக அந்தக் குருவி பூக் கொண்டு வரலாமா?" என்று தலையை நிமிர்த்திப் பேசினான்.

அடுத்த நாள் இருவரையும் அவள் அரச சபைக்கு வரும்படி ஏற்பாடு செய்தாள்.

அவர்கள் வந்ததும் அவள், "அரசகுமாரர்களே, நீங்கள் ஒரு வலிமையற்ற சிறிய குருவியின் மீது இரக்கம் காட்டாமல் அதைக் கொன்றிருக்கிறீர்கள். ஆதலால் உங்களில் யாரையும் நான் மணக்க மாட்டேன்" என்று சொன்னாள்.

உடனே அந்த அரசகுமாரர்கள் இருவரும், "நான் கொல்லவில்லை; அவன்தான் கொன்றவன்" என்று ஒருவரை ஒருவர் காட்டினார்கள்.

"நீங்கள் இரண்டு பேரும் இப்பொழுது கூறுவதைக் கேட்கும்போது நீங்கள் குருவியைக் கொன்றதோடு பொய்யும் பேசுகிறீர்கள் என்று வெளியாகிறது. அதனால் உங்களை மணக்க மறுப்பதற்கு வேறொரு காரணமும் ஏற்பட்டிருக்கிறது" என்று அவள் பதில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் முதல் அரசகுமாரன், "நான் பொய் சொல்லவில்லை; அவன்தான் பொய் சொல்கிறான்" என்றான். இரண்டாவது அரசகுமாரன், "இல்லை இல்லை, அவன்தான் பொய் பேசுகிறான்" என்று உரக்கக் கூவினான்.

அந்தச் சமயத்தில் வேறோர் அரசகுமாரன் அங்கே வந்து சேர்ந்தான். அவனுடைய தோளின் மேல் அந்த அழகிய குருவி ஒய்யாரமாக உட்கார்ந்திருந்தது.

அதைக் கண்டதும் ராஜலக்ஷ்மி, "அதோ, அந்தக் குருவி உயிருடன் இருக்கிறதே!" என்று சந்தோஷத்தோடு உரக்கக் கூவினாள்.

ராஜலக்ஷ்மி அந்த அரச குமாரர்களைப் பார்த்துக் கேட்டாள்.

இருவரும் ஊமைகளைப்போலப் பேசாமல் தலைகுனிந்து நின்றார்கள். அரசகுமாரி வீரவர்மனைப் பார்த்து, ''உங்களிடம் இந்தக் குருவி எப்படி வந்தது?'' என்று கேட்டாள்.

'இந்தக் குருவி ஒரு நாள் என் முன்னே ஓர் அற்புதமான பூவைக் கொண்டுவந்து போட்டு, என்னைக் கூடவே வருமாறு குறிப்பாகக்



''ஆமாம், இளவரசி; இந்தக் குருவிதான் அந்த இளவரசர்களுக்கு உதவி செய்ய முன்வந்தது. இதுவே அவர்களுக்கு அந்த அழகிய பூ இருக்கும் கற்பகத் தீவைக் காட்டியது'' என்று புதிதாக வந்த அரசகுமாரன் சொன்னான். அவன் பெயர் வீரவர்மன்.

''இந்தக் குருவியைக் கொன்றுவிட்டதாகக் கூறினீர்களே! இது உயிருடன் இருக்கிறதே?'' என்று

காட்டிற்று, நான் அதைப் பின் தொடர்ந்து சென்றேன். கற்பகத்தீவிலே சுலபமாக மனிதர் நெருங்க முடியாத புதர்களுக்கிடையிலே அந்த அழகான பூவைத் தரும் மரம் இருக்கிறது. அந்த மரத்தை ஒரு பெரிய ராஜாளி காவல் காத்துக்கொண்டிருந்தது. குருவியின் பின்னாலேயே நான் அங்கே போனேன். ராஜாளி இந்தக் குருவியைக் கண்ட



**தாத்தா:** அடே! கடிதத்தைத் தபாலில் போட்டுவிட்டாயோ?

**பேரன்:** போட்டுவிட்டேன்; ஆனால் தலை ஒட்ட மறந்துவிட்டேன்.

**தாத்தா:** மடப்பயல்! நான் தான் விலாசம் எழுத மறந்தேன். நீயுமா தலை ஒட்ட மறந்தாய், குருட்டுப் பயலே!

---

தும் கோபத்தோடு பறந்து அதன் மேல் பாய்ந்தது. குருவி சட்டென்று வேகமாகப் பறந்து போய் ஒரு மரத்திலிருந்த சிறிய பொந்துக்குள் நுழைந்துகொண்டது. நுழைந்துகொண்டு வெளியே எட்டிப் பார்ப்பதும் ராஜாளி கிட்டே வந்தால் உள்ளே போவதுமாக இருந்தது..''

இப்படி வீரவர்மன் சொல்லும்போதே, ''ஓகோ, அப்படித்தான் இந்தக் குருவி இந்த அரசகுமாரர்களுக்கும் உதவி செய்திருக்கிறது. குருவி பொந்தில் நுழைந்திருந்த போது இந்த அரசகுமாரர்கள் மரத்திலிருந்து பூவைப் பறித்து வந்திருப்பார்கள் போலிருக்கிறது'' என்று ராஜலக்ஷ்மி ஆச்சரியத்தோடு இடைமறித்துப் பேசினாள்.

''ஆமாம், குருவி அந்த எண்ணத்தோடுதான் பொந்துக்குள் நுழைந்து வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தது'' என்றான் அவன்.

''நீங்கள் பூவைப் பறிக்கவில்லையா?'' என்றாள் ராஜலக்ஷ்மி.

'நான் பூப் பறிக்கப் போகவில்லை. ஆனால் இந்தக் குருவியைக் கொல்ல முயன்ற அந்த ராஜாளியை ஓர் அம்பால் கொன்று வீழ்த்தினேன்'' என்றான் வீரவர்மன்.

''பிறகு என்ன நடந்தது?'' என்று மேலும் ஆவலோடு கேட்டாள் அரசகுமாரி.

''இந்தக் குருவி ஒரு பூவைப் பறித்துக்கொண்டு சந்தோஷத்தோடு முன்னால் பறந்து வழி காட்டிற்று. நானும் குருவியின் விருப்பப்படியே வந்தேன்'' என்றான் வீரவர்மன்.

அப்போது குருவி சந்தோஷத்தோடு ஒரு பாட்டுப் பாடியது.

ராஜலக்ஷ்மிக்கு, வீரவர்மன்தான் அன்பும் உண்மையும் வீரமும் உடையவன் என்று நன்றாகத் தெரிந்தது. தான் அவனை மணந்துகொள்ள விரும்புவதாகத் தன் தந்தையிடம் தெரிவித்தாள்.

ராஜமகேந்திரன் மிகவும் மகிழ்ச்சியடைந்து தன் மகளின் திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்திவைத்தான்.

குருவியின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அது தினமும் அரசகுமாரிக்குப் பூக் கொண்டு வந்து கொடுத்தது.

''அந்த அரசகுமாரர்கள் உன்னைக் கொன்றுவிட்டதாகச் சொன்னார்களே, அந்த நாட்களில் நீ எங்கே போயிருந்தாய்?'' என்று அரசகுமாரி அடிக்கடி அந்தக் குருவியைக் கேட்டாள்.

அது ஒரு ரகசியம் என்று குறிப்பாகக் காட்டுவதுபோல அந்தக் குருவி மௌனமாக இருக்கும். அந்த அரசகுமாரர்கள் நல்லவர்களல்லவென்று வெளிப்படுத்தவே, அந்தக் குருவி அவ்வாறு மறைந்திருந்தது என்பதை யாரும் அதன் வாய்மூலமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை.



# சுவாமி காப்பார்

கி. சரஸ்வதி அம்மாள்

சேகர் வீட்டுக்குள் நுழைந்த போதே அப்பாவின் கோபக் குரலைக் கேட்டான். ''நான் பாடுபட்டுச் சம்பாதிக்கிற பணத்தின் அருமை உனக்குத் தெரியவில்லை. எவனாவது 'சாமி, பூதம்' என்று சொல்லிக்கொண்டு வந்தால் உடனே தூக்கிக் கொடுத்து விடுகிறாய்'' என்று அம்மாவை அவர் கடிந்துகொண் டிருந்தார்.

''நன்னா இருக்கு, நீங்க சொல்கிறது! அவ்வளவு தெரியாமல் செய்வேணா? நம்ம பிள்ளையார் கோயில் அர்ச்சகர்தான் வந்தார். கோயில் திருப்பணி. சாமிக்கு நாமாகச் செய்யாவிட்டாலும் படியேறி வந்து கேட்கும்பொழுது ஏதாவது செய்யவேண்டாமா? எல்லாம் நம் நல்லதுக்குத்தானே!'' என்றாள்.

''என்ன நல்லதோ, எனக்குத் தெரியவில்லை'' என்றார் அப்பா.





''சாமிக்குச் செய்தால் நல்லது இல்லையா?''

''ஒன்று, இரண்டா, நூறு ரூபாயைத் தூக்கிக் கொடுத்துவிட்டு மாதக் குறை நாளுக்கும் செலவுக்குக் கஷ்டப்படுகிறது நல்லதுதான்'' என்று அப்பா பின்னும் கோபமாகச் சொன்னபொழுது, ''கஷ்டப்படுவானேன்? அப்படியென்ன நமக்கு இல்லாமல் போய்விட்டது? கோயில் கட்டுவதற்கு ஒவ்வொருத்தர் ஆயிரம் பதினாயிரம் என்றெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்!'' என்றாள் அம்மா சமாதானமாக.

''ஏதோ கொட்டி வைத்திருக்கிற மாதிரிதான் உன் நினைப்பு!''

''சாமிக்குச் செய்தால் ஒன்றும் குறைந்துவிடாது. அவர் ஒன்றுக்குப் பத்தாகத் திரும்பத் தந்துவிடுவார்!'' என்று அம்மா சாதித்தாள்.

''சரி, அப்படியானால் இப்பொழுது அவர் தரட்டும். இந்தத் தீபாவளிக்கு என்னிடம் ஒன்றும் கிடையாது. சாமி கொடுப்பதில் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்'' என்று திடமான கோபத்தோடு சொல்லிவிட்டுச் சென்றார் அப்பா. சேகருக்கு இந்தப் பேச்சைக் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டது. பாலுவினுடைய 'ஸில்க் ஜிப்பா'வைப்போல் தனக்கு வேண்டும் என்று அம்மாவைக் கேட்கத்தான் அவசரமாக வந்துகொண்டிருந்தான். தையற்காரன் இப்பொழுதுதான் பாலுவின் சட்டையைக் கொண்டுவந்து கொடுத்தான். அதன் வழவழப்பும் பளபளப்பும் அவனை அப்படியே கவர்ந்து, அவனுக்கு அது போல வேண்டும் என்கிற ஆசையைக் கிளப்பியது. தீபாவளிச் செலவுக்கு அப்பா பணமே கொடுக்கவில்லையென்றால், அம்மா எங்கிருந்து 'ஸில்க் ஜிப்பா' தைப்பாள்? அவனுக்குப் பெருத்த கவலையே வந்துவிட்டது. அம்மா இருந்தாலும் எப்பொழுதும் இப்படித்தான். சாமிக்குச் செய்வது அப்பாவுக்குப் பிடிக்கவில்லையென்று தெரிந்திருந்தும் ஏதாவது செய்து அவர் கோபத்தைக் கிளப்பிவிடுகிறாள். அப்பா, 'சாமிக்கு லஞ்சம் கொடுக்கிறதா? கூடாது' என்கிறார். அம்மா, 'பிரார்த்தனை லஞ்சமல்ல' என்று சாதிக்கிறாள்.

கொஞ்ச நாளைக்கு முன், அம்மா தெருக் கோடி அரசமரத்துப் பிள்ளையாருக்கு ஆயிரத்தெட்டு கொழுக்கட்டைகள் பண்ணுவதாக வேண்டிக்கொண்டாள். அன்று வெள்ளிக்கிழமை. விடிகாலை எழுந்திருந்து, எதிரகத்து மாமியையும் உதவிக்கு வைத்துக்கொண்டு செய்ய உட்கார்ந்துவிட்டாள். அப்பாவுக்காகத்தான் வேண்டிக்கொண்டாள். அவர் ஏதோ ஜுரத்தில் விழுந்து பிழைத்ததே புனர்ஜன்மம் என்றாகி விட்டது. அம்மாவுக்கு என்றைக்கும் தெருப் பிள்ளையாரிடம் பக்தி அதிகம். அவருக்கு வேண்டிக்கொண்டுதான் அவனே பிறந்தானாம். அவள் வேண்டிக்கொண்ட பிறகுதான் அவர் உடல் நிலையில் குணம் காணத் தொடங்கியது. இப்பொழுது அப்பா முற்றும் குணமாகி ஆபீஸ் செல்லத் தொடங்கின பிற்கும் பிரார்த்தனை செலுத்தாமல் இருப்பார்களா? கொழுக்கட்டைக் காரியம் லேசா? அதனால் சமையல் செய்யத் தவக்கமாகிவிட்டது. அவன் பள்ளிக்கூடம் செல்லச் சாப்பிட வந்தபொழுதே சமையல் ஆகவில்லை என்று தெரிந்தது. ''இருடா, கண்ணு, சித்தே இரு'' என்றாள் அம்மா. இதற்குள் அப்பாவும் வந்து விடவே, அம்மாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ''நூற்றெட்டு கொழுக்கட்டைகள் பண்ணுவதாக வேண்டிக்கொள்வதுண்டு, இது மாதிரி ஒரேயடியில் ஆயிரத்தெட்டு செய்துகொண்டு, புருஷனுக்குச் சோறில்லாமல் அடிக்கும் பெண்களை நான் கண்டதில்லை'' என்று, பெரிதாக இரைந்தார் அப்பா.

அம்மா, ''ஆயிரத்தெட்டு செய்கிற வழக்கம்தான்'' என்று சாதித்தாள். ''சாப்பாடு தயாராகாததுடன் இது வேறா?'' என்று அப்பாவுக்குக் கோபம் தாங்கவில்லை. அப்படியே பாத்திரத்தோடு கொழுக்கட்டைகளை வாசல் குப்பைத் தொட்டியில் கொட்டுவதற்குத் தூக்கி விட்டார். அவன் பயந்து போய், அவர் கால்களைக் கட்டிக்கொண்டு, ''வேண்டாம் அப்பா,

அம்மா காலையிலிருந்து கஷ்டப்பட்டுப் பண்ணியிருக்கா அப்பா'' என்று கெஞ்சினான். நல்ல காலம், அவர் அப்படியே வைத்துவிட்டார். ஆனால் அதற்காக அவர் சினம் முற்றும் தணிந்துவிடவில்லை. சாப்பிடாமல் தான் ஆபீஸ் சென்றார். அப்புறம் பத்து நாளைக்கு மேல் அவர் கோபத்தில் வீட்டில் ஒருவருடனும் பேசவில்லை. அம்மாவும் வருத்தத்தில் மௌனமாகத்தான் சுற்றி வந்து கொண்டிருந்தாள். இது சேகரை மிகவும் பாதித்தது. உற்சாகத்தை இழக்கும்படிச் செய்தது. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மனஸ்தாபம் என்றால் அவனால் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடியும்?

அப்பொழுது வெறும் நாள்தான். இப்பொழுது தீபாவளி ஆயிற்றே. அவன் ஏதேதோ அதற்கான திட்டங்கள் போட்டு வைத்திருக்கிறானே. அவனுக்குப் பெருத்த கவலையாகப் போயிற்று. ''அப்பா, கோபிக்கும்படி, ஏம்மா ஏதாவது செய்துவைக்கிறே? அப்பா பணம் தராவிட்டால், எனக்கு 'ஸில்க் ஜிப்பா' எப்படியம்மா தைக்க முடியும்?'' என்று அம்மாவை நச்சரித்



தான். ''இப்படியே கோபமாக இருப்பாரா? மாட்டார். எல்லாம் தானே சரியாகிவிடும்'' என்று அம்மா சமாதானம் சொன்னுள்.

ஆனல் அப்பாவின் கோபம் தணிகிற மாதிரியே தெரியவில்லே. அல்லு அசல்களில் எல்லாம் துணிமணிகள் மட்டுமல்ல, பட்டாசு வகைகளும் வாங்கத் தொடங்கிவிட்டார்கள். அவன் நண்பர்கள் எல்லாம் தங்கள் தங்கள் வாணங்களேயும், உடைகளேயும் உற்சாகத்தோடு காண்பிக்கும்பொழுது சேகருக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. அம்மாவிடம் வந்து அழுதான். ''நீதான் அப்பாவிடம் கேளேண்டா, கண்ணு'' என்ருள் அவள். ''அவர் என்னுடன் பேசவே இல்லேயே அம்மா, எப்படிக் கேட்கிறது?'' என்ருன் அவன். அவனுக்கு அவரிடம் பேசத் தைரியமில்லே. ''அப்படியானல் பிள்ளேயார்தான் சரி பண்ணித் தரணும்'' என்று அம்மா சொன்னபொழுது, அம்மா பேரில் கோபம் வந்தது. பிள்ளேயார் ஒன்றுமே கேட்கமாட்டாராம். அப்பா சொல்லுகிருர். அம்மா நூற்றெட்டு சதிர்த் தேங்காய்கள் உடைக்கும் பொழுதெல்லாம்கூட, ''பிள்ளேயார் கேட்பது தோப்புக்கரணமும் குட்டும்தான். நீ எதற்காக விலே கொடுத்துத் தேங்காய்கள் வாங்கி உடைக்கிறே?'' என்றுதான் அவர் கோபிக்கிற வழக்கம். ஆமாம்; இப்பொழுதுகூட தெருக்கோடியில், இருக்கிற அரசமரத்தடியில் சாதாரணமாய் ஒரு செங்கல் 'கமான்' வளேவில் நிம்மதியாக இருக்கிற பிள்ளேயாருக்குத்தான் இவர்கள் கோயில் கட்டுவதற்காகக் கிளம்பியிருக்கிருர்கள். அம்மாவிடம் வந்து பணத்தை பெற்றுக்கொண்டு சமயத்தில் அப்பாவைக் கோபிக்கும்படிச் செய்திருக்கிருர்கள்.


பிள்ளேயாருக்குத் தோப்புக்கரணம் போதுமென்ருல், அவனல் நூற்றெட்டு தோப்புக்கரணங்கள் போட முடியாதா? அதன்படி வேண்டிக்கொள்ளலாம் போலத் தோன்றிற்று அவனுக்கு.

அம்மாவுக்குச் சேகரின் வருத்தம் தெரியாமல் இல்லே. கணவர் பேரில் வருத்தமும் கோபமும் வந்தன. அவரைச் சமாதானம் செய்தும் பலனளிக்கவில்லே. அவளுக்குச் செய்வது என்னவென்று தெரியவில்லே. அவள் வழக்கப்படி பிள்ளேயாரைத் தான் நம்பியிருந்தாள்.

அவள் நம்பினது வீண் போகவில்லே. தீபாவளிக்குச் சில தினங்கள் இருக்கும்பொழுது, பத்திரிகை ஒன்றின் தீபாவளிப் போட்டிக்கு அப்பா எழுதியிருந்த சிறுகதை ஒன்றிற்கு ஐந்நூறு ரூபாய் பரிசு வந்தது. அவர் பத்திரிகைகளுக்குப் பொழுது போக்காக அவ்வப்பொழுது எழுதுவதுண்டு. என்ருலும் அவைகள் பாதியும் பிரசுரமாவதுகூடக் கிடையாது. அப்படியிருக்க இம்முறை, போட்டியில் முதல் பரிசு என்ருல் பெரும் வியப்புத் தோன்ருதா? அவருக்குண்டான பெரு மகிழ்ச்சியில் கோபத்தை முற்றும் மறந்து மனேவியிடம், ''சுந்தரி, பரிசை அடித்து விட்டேன், பார்த்தாயா!'' என்று பெருமையுடன் கூறினர். அவளுக்குச் சந்தோஷமும் பெருமையும் கொஞ்சமா? ''பார்த்தீர்களா, நான் என்ன சொன்னேன்! இவ்வளவு நாளும் எழுதி வந்திருக்கிறீர்களே, ஏதாவது கிடைத்ததா? சுவாமிக்குக் கொடுத்தோம், கைமேல் பலன் கிடைத்தது'' என்று சமயத்தில் சொல்லிவிட்டாள்.

''தேவலேயே நீ. நான் மூளேயைச் செலவழித்து, சம்மானம் பெற்ருல் நீ சுலபமாய்ச் சாமி செய்தது என்கிருயே'' என்று அவர் ஒப்புக்கொள்ளாமல் பேசினலும், அவருக்கும் அது ஈசுவரனின் அருள் என்றுதான் உள்ளூறத் தோன்றிக் கொண்டிருந்தது. ஏனெனில், அவர் இம்முறை கடவுள் பக்தியை வைத்துத்தான் கதை எழுதியிருந்தார். மனேவியின் பக்தியைப் பற்றித்தான் அவருக்குத் தெரியுமே!

எதுவானல் என்ன? சேகரின் சந்தோஷத்திற்கு எல்லேயே இல்லே. தீபாவளியின்போது எல்லாம் வாங்கி ஜமாய்த்துவிட்டான்!




அநேக வருஷங்களுக்கு முன்னே இது நிகழ்ந்தது.

அது அரையணுக் காசு இருந்த காலம். அரையணுவுக்கு ஒரு பட்டாஸ் கட்டு விற்ற காலம்.

என் மாமா சின்னப் பையனாக இருந்தானாம். அப்போது அவன் ரொம்ப ரொம்பக் கெட்டிக்காரனாம். பாட்டி சொல்லுவாள்.

ஒரு தீபாவளி வந்தது. அப்போது மாமா ரொம்பச் சின்னப் பையன். அது வரைக்கும் அவன் பட்டாஸ் சுட்டதே யில்லை. அந்த வருஷங்கூட அவனாக ஆசைப்படவில்லையாம். 'காசு காசு' என்று தான் தொல்லைப் படுத்துவானாம். காசைப் பெற்று மிட்டாய் வாங்கித் தின்று விடுவானாம்.

ஒரு நாள் யாரோ அரையணுக் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கும்போதே, ''அடே, தீபாவளி வருகிறது. காசைக் கரியாக்காதே; வாணத்தை வாங்கிச் சுடு'' என்று சொல்லி யிருக்கிறார்கள். அவனும் நிஜந்தான் என்று, அதை ஒரு புரையில் பத்திரமாய்ப் போட்டு வைத்திருக்கிறான். தீபாவளி வந்துவிட்டது. தெருக் கோடியிலே பட்டாஸ் கடையும் வந்துவிட்டது. அந்த அரையணுக் காசுக்கு முப்பத்திரண்டு சீன வெடிக்கட்டு அவன் வாங்கிவிட்டான்.

அது எப்படி முடிந்தது என்றால், இப்படித்தான்.

தன் அப்பாவிடம்-அதாவது என் தாத்தாவிடம்-சீனவெடிக் கட்டுக்கு மாமா அழுதிருக்கிறான். அவன் ரொம்பச் செல்லம். உடனே பணம் எடுத்துக் கொண்டு, பட்டாஸ் வாங்கி வர அவர் புறப்பட்டார். 'பட்டாஸ் என்ன; அதோடு ஜவுளியும் வாங்கி வரலாம்' என்று பெரிய கடைத் தெருவுக்குப் போய்விட்டார். வெகு நேரம் ஆகிவிட்டது. இன்னும் வரவில்லை.

மாமா பொறுத்துப் பொறுத்துப் பார்த்திருக்கிறான். இனித் தாங்காது என்ற நிலை ஏற்பட்டது. புரையில் வைத்த அரையணுக் காசு ஞாபகம் வந்தது. புரையைப் போய்த் துழாவினான். காசு கைக்கு அகப்பட்டது. ஆனால் அது உருமாறி யிருந்தது. வீட்டுக்கு வெள்ளையடித்தபோது, சுண்ணாம்பில் புரண்டிருக்கிறது. வெள்ளைக்கார ராணித் தலை போட்ட காசு.

மாமா சின்னப் பையன்தானே! காசைக் கழுவவில்லை. அப்படியே எடுத்துக்கொண்டு பட்டாஸ் கடைக்குப் புறப்பட்டுவிட்டான்.

பட்டாஸ் கடையில் 'பவர் லைட்' போட்டுக்கொண்டு வியாபாரம் மும்முரமாய் நடந்துகொண்டிருந்தது. கூட்டம் நெரித்தது. இடுக்கிலே முண்டியடித்துக்கொண்டு மாமா புகுந்தான்.

காசை நீட்டினான். ''பட்டாஸ், பட்டாஸ்'' என்றான்.

வருஷத்துக்கொரு தடவை அவசரக் கோலத்தில் கடை நடத்துகிறவன் அந்தப் பட்டாஸ் கடைக்காரன். காசிலே பூ இருக்கிறதா, தலை இருக்கிறதா என்று திருப்பிப்

பார்க்கக்கூட அவனுக்கு நேரம் கிடையாது. காசை மாமாவின் கையிலிருந்து பிடுங்கிப் பெட்டியிலே போட்டான். முப்பத்திரண்டு பட்டாஸ் கட்டுக்களைச் சிப்பமாய்க் கட்டி மாமாவிடம் கொடுத்தான்.

மாமா தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

அவன் அம்மா-அவள்தான் என் பாட்டி-இதைப் பார்த்தாள்.

''ஏண்டா, அப்பா வந்து விட்டாரா?'' என்றாள்.

''இல்லே.''

''பின்னே சீன வெடிக்கட்டு ஏது?''

''கடைக்காரன் கொடுத்தான்.''

''காசு?''

''நான் கொடுத்தேன்.''

''ஏது?''

''அன்னிக்கு வந்தாரே ஒரு மாமா, அவர் கொடுத்தார். அதைப் புரையிலே வெச்சிருந்தேன்.''

''அது என்ன காசு?''

''பெரிய காசு. புளி போட்டுத் தேய்ச்சா, பளபளன்னு மின்னும்.''

இதற்குள் என் தாத்தாவும் வந்து விட்டார். ஜவுளி யெல்லாம் நிறைய வாங்கிக் கொண்டு, பட்டாஸ், மத்தாப்பு, பாம்பு வாணம், தேள் வாணம், இன்னும் என்ன வெல்லாம் உண்டோ அத்தனையும் வாங்கிக் கட்டிக் கொண்டு வந்திருந்தார். பையன் பெயரைச் சொல்லிக் கொண்டு வாணம் எல்லாம் சுட அவருக்கே ரொம்ப ஆசை.

அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது. புரையிலே இருந்த அரையணாக் காசைச் சுண்ணாம்பு பூசிய கோலத்தில் அவரே ஒரு நாள் கண்டிருக்கிறார். அரையணாவும் ஒரு ரூபாயும் அந்தக் காலத்தில் ஒரே அளவாக இருக்கும். கடைக்காரன் அவசரச் சந்தடியில் ஏமாந்து போயிருக்கிறான்.

''இது ரொம்பத் தப்பு. வெடிக் கட்டைக் கொண்டு போய்க் கடையிலே கொடுக்கவேண்டும்; இல்லே, மீதி விலையையாவது கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டு, வெடிக் கட்டு முப்பத்தொன்றைக் கையிலே வாரிக் கொண்டு தாத்தா கிளம்பினார்.

''உங்களுக்கென்ன, பைத்தியமா பிடித்திருக்கிறது! குழந்தைக்கு அதிருஷ்டம். கடைக்காரன்தான் எவ்வளவோ கொள்ளையடிக்கிறான். இது ஒண்ணும் அவனுக்கு நஷ்டமில்லே. உட்காருங்கள்'' என்று பாட்டி தடுத்துவிட்டாள்.

தாத்தாவுக்கும் கொஞ்சம் களைப்பாய்த்தான் இருந்தது. ''ஆமாம், மூணே முக்கால் ரூபாய்க்கு நான் கூட அவனிடம்தான் வெடியெல்லாம் வாங்கினேன். ஒட்டிக்கு இரட்டி விலே. என்னிடமே ஒண்ணே முக்கால் ரூபாய்க்கு மேல் சம்பாதித்திருப்பான்'' என்றார் தாத்தா.

உண்மையிலே தாத்தாவுக்கு மனத்தில் சமாதானம் இல்லே. ஆனால், பாட்டி கிழித்த கோட்டை அவரால் தாண்ட முடியாது. அதனால் இப்படித் தம்மைத் தாமே சமாதானப் படுத்திக்கொண்டார்.

பிறகு, மணிபர்ஸை எடுத்து, ''இந்தா, கணக்குப் பார்த்துக் கொள். இதோ ஜவுளி ரசீது; இதோ பட்டாஸ் சீட்டு....'' என்று 'வவுச்சர்'களோடு கொள் முதல்களைப் பாட்டியிடம் ஒப்புவித்தார்.

பாட்டி மணிபர்ஸைத் திறந்தாள். ஆமாம்; இதற்குள் நீங்கள் தான் ஊகித்திருப்பீர்களே. அந்தச் சுண்ணாம்பு பூசிய அரையணாக் காசு, ஒரு ரூபாயாகக் கணக்காகி, இவர் கொடுத்த நோட்டுக்கு மிச்சப் பணப் பகுதியாக இவருடைய பர்ஸில் வந்து புகுந்திருந்தது.

பாட்டிக்கா மகா ஆத்திரம் வந்தது. ''உங்களுக்குப் புத்தியே இல்லே. ஒரு குழந்தைக்கு இருக்கிற புத்தி உங்களுக்கு இல்லே. அது அரையணாக் காசை ஒரு ரூபாயாகச் செலுத்திவிட்டு வந்திருக்கிறது. நீங்கள் என்னடா என்றால் அஞ்சு ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு, வாணம் போகச் சில்லறை வாங்குகையில் ஒரு ரூபாய்க்குப் பதில் அரையணாவை வாங்கி வந்திருக்கிறீர்கள். வாங்குகிற காசை முன்பின் பார்க்



கிற வழக்கமே உங்களுக்கு இல்லை. இது வரைக்கும் எத்தனை செல்லாக் காசை நீங்கள் வாங்கி வந்திருக்கிறீர்கள், நினைத்துப் பாருங்கள். அத்தனையையும் நான் என்ன பாடு பட்டு மோர்க்காரியிடமும் பால்காரியிடமும் காசோடு காசாகச் சேர்த்து, கணக்கிலே விவகாரம் பேசி, இடுக்கிலே கொடுத்துச் செல்ல வைத்திருக்கிறேன்..'' என்று கூச்சலிடத் தொடங்கினாள்.

''அடீ, இது செல்லும் டீ. நன்றாய்த் தேய்த்து அலம்பு. நீ சொன்னையே, அந்த மோர்க்காரி, பால்காரிகளைப் பற்றி நீயே சபிப்பாயே, 'நீர் நீரோடே; மோர் மோரோடே' என்று. அந்த மாதிரி நம்ம காசு நம்மோடே வந்துவிட்டது'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார் தாத்தா.

''சிரிக்காதேயுங்கள். நீங்கள் சிரிக்கச்சே எனக்குப் பற்றி எரிகிறது...'' என்று மறுபடியும் கத்தினாள் பாட்டி.

அவள் என்ன கத்தினால் என்ன? நடந்தது நடந்துவிட்டது. தாத்தாவுக்கு அதிலே ரொம்பச் சந்தோஷம். அவரே காப்பாற்ற முடியாத அவருடைய நாணயத்தைக் கடவுளே காப்பாற்றி விட்டார் இல்லையா, அதிலேதான் அவருக்கு அவ்வளவு சந்தோஷம்;



# காட்டிலே நடந்தது

ராஜி

•

ஒரு காட்டிலே ஒரு பணக்காரப் புலி இருந்தது. அந்தப் புலி தன்னுடைய பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாட நினைத்து ஆயிரத்திற்குமேல் அழைப்பு இதழ்களை அச்சிட்டு விலாசத்தை எழுதியது. தன்னுடைய விரோதிகளான ஆடு, மாடு, பூனை, மான், முயல் முதலிய எல்லாப் பிராணிகளையும் கட்டாயம் வரும்படி எழுதிற்று. பிறந்த நாள் கொண்டாட்டத்தன்று ஒரு பிராணியுடனும் விரோதம் பாராட்ட அந்தப் புலி விரும்பவில்லை. பிறந்த நாள் அன்று சுமார் ஆயிரம் பேருக்குமேல் நிலா வெளிச்சத்தில் சாப்பாடு போட ஏற்பாடு செய்யத் தன் மனைவியைக் கூப்பிட்டது. ''அடுத்த வாரம் வரும் பௌர்ணமி அன்று என் பிறந்த நாள். அன்று இரவு சுமார் ஆயிரம் பேருக்குமேல் விருந்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அன்று யானைகள் பல வரும் என்று நினைக்கிறேன். அதற்குத் தகுந்தாற்போல் விருந்துக்குத் தயார் செய். அழைப்பு இதழ்களை எல்லாம் தபால் மூலமாகவே அனுப்பிவிடு. நான் இப்பொழுது அவசரமாக வெளியூருக்குப் போகவேண்டியிருக்கிறது. பௌர்ணமியன்று காலை அவசியம் வந்து சேருகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டது.

பௌர்ணமி அன்று காலை புலி குறிப்பிட்டபடி வரவில்லை. மாலையில்தான் அதனால் வர முடிந்தது. வந்து பார்த்தால் அன்று பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகள் எதுவும் இருப்பது போல அதற்குத் தோன்றவில்லை. தன் மனைவி ஞாபக மறதியாக விருந்து தயார் செய்யாமல் இருந்திருப்பாளோ என்று பயந்து அவசர அவசரமாக உள்ளே போய், கோபத்துடன் தன் மனைவியைக் கூப்பிட்டது. ''நான் ஆயிரம் நபர்களுக்கு இன்று இரவு ஏற்பாடு செய்யச் சொல்லி இருந்தேனே, ஏற்பாடு ஆகிவிட்டதா?'' என்று கேட்டது.

''அடாடா! நான் மறந்து விட்டேனே, என்னை மன்னியுங்கள்'' என்று கணவன் காலில் விழுந்தது பெண் புலி. ''இனிமேல் என்ன பிரயோஜனம்? இன்னும் சற்று நேரத்தில் அழைப்பு இதழ்கள் அனுப்பியவர்கள் வந்துவிடுவார்களே, என்ன செய்வது? அன்றைத்

தினம் அழைப்பு இதழ்கள் கொடுத்துவிட்டுப் போனேனே, அவைகளைத் தபாலில் அனுப்பி விட்டாயா?'' என்று கோபத்துடன் புலி கேட்டது. புலியின் மனைவி ஒன்றும் பதில் சொல்லாமல் வெகு வேகமாக உள்ளே சென்றது. புலி கொடுத்துப் போன அழைப்பு இதழ்களை எடுத்துக்கொண்டு திரும்பி வந்தது. ''மன்னிக்க வேண்டும். ஞாபக மறதியாக இவைகளை யும் அனுப்பவில்லை'' என்றது. புலியின் மனைவி தன் ஞாபக மறதிக்குத் தன்னை புலி கடிந்துரைக்கும் என்று நினைத்தது. அதற்கு மாறுகப் புலி தன் மனைவியைத் தட்டிக் கொடுத்தது. ''சபாஷ்! எங்கே அழைப்பு இதழ்களைஅனுப்பி யிருப்பாயோ என்று நினைத் தேன். என் பிறந்த நாள் இன்று இல்லை. அடுத்த பௌர்ணமி அன்றுதான். நானும் ஞாபக மறதி யாகச் சொல்லி விட்டேன்'' என்று மனைவியுடன் உள்ளே சென்றது.

* * *

கரடிக் குட்டியின் தந்தை ஒரு போலீஸ் சேவகன். ஒரு நாள் காலை தந்தை வெளியே போயிருந்த சமயம் பார்த்து, கரடிக்குட்டி போலீஸ் உடைகளை மாட்டிக் கொண்டு வீட்டுக்குத் தெரியாமல் வெளியே போயிற்று. அந்தக் கரடிக் குட்டிக்கு வெகு நாட்களாகப் போலீஸ் சேவகனைப்போல் சிறிது நேரமாவது இருக்க வேண்டும் என்று ஆசை. போலீஸ் உடையுடன் கரடிக் குட்டி நேராக நான்கு தெருக்கள் கூடும் இடத்திற்குச் சென்று நடுவில் நின்றது. போக்கு வரத்துக்கு உபயோகமாக நிற்கும் போலீஸ் சேவகனைப்போல மேலும் கீழும் கைகளை அசைத்தது. சரியாகக் கைகளைக் காட்டாததால் நான்கு பக்கங்களிலும் ஏராளமான கார்களும், சைக்கிள்களும் நின்றுவிட்டன. சில மோட்டார்கள் ஒன்றேடு ஒன்று மோதிக்கொள்ள கரடிக் குட்டிக்கு ஏன் பொய்யாகப் போலீஸ் சேவகனைப்போல நடிக்கப் பிரயத்தனம் செய்தோம் என்று தோன்றிற்று.

அந்தச் சமயத்தில் ஒரு சைக்கிளில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிங்கம் அந்த வழியாகப் போயிற்று. போன சிங்கம், கரடிக் குட்டியை முறைத்துப் பார்த்துக் கொண்டே போயிற்று. அதைப் பார்த்த கரடிக் குட்டி நிலைமையை சமாளிக்க முடியாமல் மூச்சுத் திணற வெகு தூரம் ஓடிற்று. அந்தக் காட்டுக்குக் கிழக்குக் கோடியில் சற்று இளைப் பாறப் போலீஸ் உடையுடன் உட்கார்ந்தது. அந்தச் சமயம் சற்றுத் தூரத்திற்கப்பால் இருந்த ஒரு சீனவெடிக்கடை அதன் கண்களில் பட்டது. ''ஏன் இந்தப் போலீஸ் உடையுடன் அந்தக் கடைக்குச் சென்று கடைக்காரனை மிரட்டி வெடிகளையும் வாணங்களையும்



வாங்கிக்கொண்டு போகக்கூடாது'' என்று எண்ணி அப்பொழுது கடையில் நின்றுகொண் டிருந்து இரண்டு யானைகள் போலீஸ் உடை தரித்த கரடிக்குட்டி கடையை நோக்கி வருவதைப் பார்த்துப் பயந்து கரடிக்குட்டி கேட்பதற்கு முன்பாகவே கடையிலிருந்த ஒரு கூடை சீனவெடிகளையும், வாணங்களையும் எடுத்துக் கொடுத்தன. கரடிக்குட்டி சந்தோஷத்துடன் கூடையை மெதுவாகத் தூக்கிக்கொண்டு கொஞ்ச தூரம் சென்றது. அப்போது பின்னுடி யாரோ வந்து அதைப் பிடிப்பது போல இருந்தது. கரடிக்குட்டி திரும்பிப் பார்த்தபோது, அதற்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனென்ருல் அங்கே நின்றது போலீஸ் இன்ஸ்பெக்டர் சிங்கம். ''ஏ கரடிக் குட்டியே, நீ யாரை ஏமாற்றப் பார்க்கிருய்? நீ உண்மையான போலீஸ் சேவகன் இல்லை. என்று நீ போட்டுக்கொண் டிருக்கும் உடுப்பே சொல்லுகிறது. அந்த உடுப்பு உன் அப்பாவுதோ அல்லது உன் தாத்தாவினுடையதோ! அதுவுமல்லாமல் இன்று காலை நான் சைக்கிளில் வரும்போது நீ என்னைப் பார்த்து மற்றப் போலீஸ் சேவகர்கள் சலாம் பண்ணுவதைப் போல நீ பண்ணவில்லை. அதிலிருந்து நீ வேஷம் போட்டவன் என்று தெரிந்து கொண்டேன். போலீஸ் இலாகாவுக்கே இழிவு தேடுவதுபோல சீனவெடிக் கடைக்காரனை மிரட்டி அவனிடம் வெடிகளை வாங்கி வந்தது மிகவும் தப்பு. இப்பொழுது உன்னை என்ன பண்ணுகிறேன், பார்!'' என்றது சிங்கம்.

கரடிக் குட்டி பயந்துபோய்த் தன்னை மன்னிக்கும்படி கேட்டது. ''என்னுடன் வா. சீனவெடிக் கடைக்குச் சென்று மிரட்டி வாங்கிய வெடிகளையும், வாணங்களையும் கொடுத்துவிட்டு வரலாம்'' என்று சொல்லி, கடைக்குச் சென்றது சிங்கம். இன்ஸ்பெக்டர் சிங்கத்துடன் கரடிக்குட்டி மீண்டும் வருவதைப் பார்த்த இரண்டு யானைகளும் ஓட்டம் பிடித்தன. சிங்கமும், கரடியும் கடைக்குச் சென்று பார்க்கும்போது ஒரு நரி ஒரு தூணுடன் கட்டிப் போடப்பட்டிருந்தது. அதன் வாய் பேசமுடியாமல் துணியினுல் கட்டப்பட்டிருந்தது. உடனே அதன் வாய்க்கட்டை அவிழ்த்து விட்டவுடன் நரி, ''உங்கள் இரண்டு பேருக்கும் வந்தனம். நீங்கள் வராவிட்டால் நான் சம்பாதித்த பணம் யாவும் கொள்ளை போய் இருக்கும். இங்கே சற்று முன்பு இருந்த இரண்டு யானைகளும் திருட்டு யானைகள். நீங்கள் எனக்குச் சமயத்தில் உதவி செய்ததற்குப் பட்டாசுகளையும், வாணங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றது. போலீஸ் இன்ஸ்பெக்டர் சிங்கமும், போலீஸ் சேவகன் கரடியும் அவ்விடத்தை விட்டு அகன்றன.

கொஞ்ச தூரம் சென்றவுடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிங்கம், 'கரடிக்குட்டியே! ஏமாந்தாயா, நானும் நிஜ இன்ஸ்பெக்டர் அல்ல. எங்கள் மாமாவினுடைய உடுப்புகளைத்தான் நானும் போட்டுக்கொண்டு வந்தேன். இனிமேல் நாம் இதுமாதிரிப் பொய்யாகப் பிறருடைய உடுப்புகளைப் போட்டுக் கொள்ளகூடாது' என்று சொல்லிற்று. பிறகு இரண்டும் சீன வெடிகளையும் மத்தாப்புக் களையும் பாதி பாதியாகப் பிரித்துக்கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தன.



# லண்டனில் தீபாவளி




**அழ. வள்ளியப்பா...**

லண்டனில் இந்திய மாணவர்கள்—கூடி
நன்றாகத் தீபாவ ளித்தினத்தைக்
கொண்டாடத் திட்டங்கள் போட்டனரே—மிக்க
குஷியாக ஏற்பாடு செய்தனரே.

பண்டிகை கொண்டாட வேண்டுமெனில்—அங்கே
பலத்த விருந்துகள் வேண்டுமன்றோ?
ஒன்றாகச் சேர்ந்தனர் மாணவர்கள்—சேர்ந்து
உற்சாக மாகச் சமையல் செய்தார்.

அந்தச் சமயத்தில் அவ்விடத்தே—ஓர்
அப்பாவி இந்தியர் வந்தடைந்தார்.
வந்தவர் யாரென ஒருவருமே—அந்த
மாணவர் கூட்டத்தில் கேட்கவில்லை.

ஏதும் விசாரணை செய்யவில்லை—ஆனால்,
ஏவினர் வேலைகள் செய்திடவே.
சாதுவாம் அந்த மனிதருமே—சற்றும்
தயங்கிட வேண்டுமே! இல்லை, இல்லை.

பாத்திரம் தேய்த்தனர்; பற்றுத் துலக்கினர்;
பம்பர மாய்வேலை செய்தனரே.
வேர்த்து விறுவிறுத் தேஅவரும்—பல
வேலைகள் செய்திடும் வேளையிலே,

வ. வே. சு. ஐயர் எனும் பெரியார்—அங்கே
வந்தனர் சுற்றிலும் பார்த்தனரே.
ஏவல் புரியும் மனிதரைக் கண்டதும்
ஏனோ துடியாய்த் துடித்தனரே.

''அடடே, இவர்தாமே காந்தி!'' என்றார்—கேட்டே
அனைவரும் ஒன்றாய்த் திகைத்து நின்றார்.
உடனேயே மன்னிப்புக் கோரினரே—ஆனால்
உத்தமர் காந்தியார் சொன்னதென்ன?

''ஒன்றாகச் சேர்ந்து சமையல்செய்தோம்—இது
ஒற்றுமை தன்னையே காட்டுமன்றோ?
நன்றாய் உழைத்துநாம் உண்பதிலே—சற்றும்
நாணமே இல்லை. அறிந்திடுவோம்.''


கதை: ஆர்வி

# புலிக்குட்டி

சித்திரம்: ஸாமி




(தொடரும்)



டெலிபிரிண்டரில் செய்திகள் டைப்பாகின்றன

★


தினமும் காலையில் நம் கண்களில் படுவது அன்றைச் செய்தித் தாள். பெரியவர்கள், சிறியவர்கள் எல்லாருக்கும் தினத்தாள் அவசியமாக இருக்கிறது. ஆனால் அந்தத் தினத்தாள் எவ்வாறு உருவாகிறது என்று நமக்குத் தெரிய வேண்டாமா?

முதல் முதலாகப் பத்திரிகைக்கு முக்கியமானது செய்தி. இரவில் சாப்பாடு ஆனதும் நாம் படுத்துத் தூங்கி விடுகிறோம். ஆனால் காலையில் எழுந்ததும் தினத்தாள் ஒன்றைப் பிரித்தால் உலகத்தையே பரபரப்படையச் செய்யும் செய்தி ஒன்று பெரிதாகத் தென்படுகிறது. ஓர் இரவுக்குள் உலகின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் செய்திகூட

# தினத்தாள் உருவாகிறது!

என். ராமகிருஷ்ணா

அத்தனை விரைவாக இப்போதெல்லாம் கிடைத்து விடுகிறது. இந்தச் செய்திகள் கம்பில்லாத் தந்தி மூலமாகவும், ரேடியோ மூலமாகவும் மற்றும் பல வழிகளிலும் ஒரு செய்தி ஸ்தாபனத்தில் வந்து சேகரமாகின்றன. பிறகு அங்கிருந்து அதை மின்சார விசை கொண்டு அனுப்புகிறார்கள். பத்திரிகைக் காரியாலயங்களில் அமைக்கப்பட்டிருக்கும் டெலிபிரிண்டர் மூலம் செய்திகள் ஆங்கிலத்தில் வருகின்றன. டெலிபிரிண்டரில் உள்ள காகிதத்தில் செய்திகள் தாமாகவே டைப்



★

செய்திகளை அச்சுக் கோக்கும் லைனோ டைப்






அச்சுப் பிழை திருத்துகிறார்கள்

அடித்துவிடுகின்றன. அந்தக் காகிதத்தை அவ்வப்போது ஒருவர் கிழித்து உதவி ஆசிரியர்களிடம் கொண்டு கொடுப்பார். ஆங்கிலத் தினசரியாக இருந்தால் அப்படியே உபயோகிக்கலாம். தமிழ் போன்ற பிரதேச பாஷையாக இருந்தால் இதை மொழிபெயர்க்க வேண்டும். இது மட்டுமன்றித் தபால் மூலமாகவும், தந்தி மூலமாகவும் போன் மூலமாகவும் அன்றாடம் செய்திகள் பத்திரிகாலயங்களுக்கு வந்து குவிந்தவண்ணமாகவே இருக்கும்.

இப்படிச் சேகரமான செய்திகளைப் பலபேர் லைனோ என்ற யந்திரத்தின் மூலம் அச்சுக்கோப்பார்கள். ஓரிடத்திலிருந்து காய்ச்சின ஈயம் வந்து ஒரு சிறு குழாய் மூலம் கொட்டும். அதன்மீது அச்சுக்களை டைப் செய்தால் அந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு வார்த்தைகளாக வெளிவரும். இப்படிச் செய்த வார்த்தைகளையும் கையினால் அச்சுக் கோத்த விஷயங்களையும் ஒன்று சேர்த்து, பத்திப் பத்தியாக அடுக்குவார்கள்.

அச்சுக் கோத்த பக்கம் அட்டையில் பதிவாகின்றன.












(மேலே) படங்களைப் பிளாக் செய்யும் காமிரா.


(கீழே) பிளாக்குகள் உருவாகின்றன.











(மேல்) பதிவான அட்டை ஈய அச்சு உருளையாக மாற்றப்படுகிறது

(நடு) செய்திகளைச் சேகரிக்கும் ரிப்போர்ட்டர்

(கீழ்) மணிக்கு ஆயிரக் கணக்கான பத்திரிகைகளை அடித்துத் தள்ளும் ரோட்டரி யந்திரம்

ஆசிரியர், உதவி ஆசிரியர், ரிப்-போர்ட்டர்கள் அச்சுக் கோத்த விஷயங்களைப் பிழை திருத்தி, பக்கத்தைச் சரி செய்வார்கள். இவைகளுக்கு முன்பாகத்தில் தலையங்கங்கள் சேர்க்கப்படும். இப்படிச் செய்வதற்கு பக்கமாக்குவது (Page-setting) என்று பெயர்.

இந்த ஒரு முழுப்பக்கம் தயாரானதும் ஒரு யந்திரத்தில் முடுக்கி அதன் மீது ஒரு பிரத்தியேகமான அட்டையை வைத்து (Special Matrice-Paper) இரண்டு உருளைகளுக்கு நடுவில் இட்டு அமுக்குவார்கள். இப்படிச் செய்தால் அந்த அச்சுகள் எல்லாம் அந்த அட்டையில் எழுத்துக்களைப்போல் பதிந்துவிடும். பிறகு இந்த அட்டையை எடுத்துத் தண்ணீர் தெளித்து, மேடு பள்ளம் சரி செய்து, உருளை வடிவம் செய்வார்கள்.

இந்த அட்டையை எடுத்துச் சென்று உஷ்ணமுள்ள ஓர் உருளை யந்திரத்தில் (Molten Lead-cylinder) போட்டு மூடுவார்கள். கனமான கதவுகளை மூடி, நன்றாகக் காய்ச்சின ஈயத்தைத் தண்ணீர் போல் அதனுள் விடுவார்கள். அந்த அட்டையிலுள்ள மேடுபள்ளங்களில் ஈயம் பாய்ந்து மறுபடியும் எழுத்துக்களாக மாறிவிடும். இதனால் என்னவென்றால் தட்டையாக இருந்த பக்கம் எல்லாச் செய்திகளுடனும் ஈய உருளையாக மாறிவிட்டது.

இப்படியாகப் பக்கத்திற்கு ஓர் ஈய உருளையாகத் தயார் செய்வார்கள். உருளைகளை எடுத்துச் சென்று ரோட்டரி (Rotary) யந்திரத்திலுள்ள மற்றோர் உருளையில் பொருத்துவார்கள். இந்த யந்திரம் பல நுட்பமான பாகங்களைக் கொண்டது. பல

வெளியூர்களுக்குப் பார்சலாகக் கட்டுக் கட்டி, விலாசமிடுகிறார்கள்



லக்ஷக்கணக்கான ரூபாய்கள் விலை கொண்டது. மணிக்குப் பல்லாயிரக் கணக்கான பிரதிகளை அச்சிட வல்லது. இந்த யந்திரத்தின் ஒரு பக்கத்தில் காகிதங்களை உருளை உருளையாக மாட்டுவார்கள். அந்தக் காகிதம் ஒவ்வோர் உருளை வழியாகவும் வளைந்து புகுந்து சென்று, பிறகு வெளியில் வரும். பெரிய குளம் போன்ற இரும்பு அறை ஒன்றிலிருந்து மை (Ink) இந்த ரோட்டரி யந்திரத்திலுள்ள உருளைகளின்மீது மிதமாக ஒரே சீராகப் பரவிச் செல்லும். உருளைகள் சுற்றச் சுற்றக் காகிதம் சுழன்று, மையின் உதவியால் செய்தித்தாள் அச்சாகும். இப்படி அச்சாகும் தாள் தானகவே வெட்டப்பட்டு மடிப்போடு வெளியில் வந்து விழும்.


நாம் பத்திரிகையில் பார்க்கும் படங்கள் பிளாக் செய்யும் காமிராவினல் பதிவு செய்யப்பட்டு, பிறகு உருளைகளில் சேர்க்கப்படும்.

பத்திரிகைகள் வெளியே வந்து விழவிழ, அவைகள் டிஸ்பாட்ச் பகுதிக்கு அனுப்பப்படும். இங்கே பலபேர் உட்கார்ந்து அவைகளைப் பல ஊர்களுக்கும் கணக்குப்படி கட்டி, மேல் விலாசம் இட்டு, கட்டுக் கட்டித் தள்ளுவார்கள். அந்தக் கட்டுகளை லாரி மூலமாகவும் கார் மூலமாகவும் அனுப்புவார்கள். அந்த அந்த வண்டி புறப்படும் நேரத்திற்குத் தக்கபடி கட்டுகள் அனுப்பப்படும். இப்படித்தான் தினத்தாள் உருவாகி விற்பனை ஏஜெண்டுகள் மூலம் நமக்குக் கிடைக்கிறது.


இந்தப் படங்கள் மூலமாகத் தினத்தாள் உருவாவதைப் பற்றி அப்படியே முழுவதும் தெரிந்து கொண்டுவிட முடியாதுதான். நேரில் பார்த்து, அந்தப் பகுதிளில் உள்ளவர்கள் விளக்கினல்தான் நாம் சரிவர அறிய முடியும். இந்தப் படங்கள் ஓரளவுதான் உதவும்.

இந்தப் படங்கள் எல்லாம் தமிழ் நாட்டில் பிரபலமாக விளங்கி வரும் தினத்தாளான 'சுதேசமித்திரன்' காரியாலயத்தில் எடுக்கப்பட்டவை. கண்ணன் பத்திரிகையில் இவற்றை வெளியிட அநுமதி தந்து, புகைப்படங்கள் எடுக்கவும் வசதிகள் செய்து கொடுத்த சுதேசமித்திரன் ஆசிரியருக்கும் மற்ற அனைவருக்கும் நமது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.—(ஆ-ர்.)

தினத்தாள் வண்டியிலேறிப் பிரயாணப்பட்டுவிட்டது




பாழடைந்த பங்களா
கதை: ஜயந்தி ✿ சித்திரம்: கலா..
முல்லைவனம் ஜமீன்தார் முருகபூபதியிடம் வேலைக் காரனுக இருந்த முனியப்பா சிறைப்பட்டு, தண்டனை முடிந்து வெளியில் வந்தான்.......
அன்று இரவு ஒரு மணி.......
ஜமீன் மாளிகையினுள்.......
ஆ! குழந்தை!
பழிக்குப் பழி! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!
பாமினிநதிக்கரைப் பாலத்தின் கோடியில் உட்கார்ந்து முனியப்பா நகைகளைக் கழற்றுகிறன்.
தூரத்தில் யாரோ வருகிற ஓசை கேட்டதும்......
யாரோ வருகிறர்கள்! வருங்கால ஜமீன்தாரே! இதுதான் உன் ஜமீன்!
முனியப்பா குழந்தையைத் தண்ணீரில் விட்டெறிந்து விட்டு ஓடுகிறன். ஆனல் குழந்தை!
1



ஆ! ஏதோ குழந்தை அலறுகிறதே!
அதோ ஒரு குழந்தை!
கழுத்தில் சங்கிலி! திருடன் கழுத்தை முறிக்காமல் போனுனே!
மாரி சங்கிலியைப் பத்திரப் படுத்திக் கொண்டு தன் அக்காள் சின்னம்மாவின் ஊரான, கீரனூரை அடைகிறன். மறு நாள் காலையில்.....
யாரு பெற்ற செல்வமோ? பயல் ராசா மாதிரி இருக்கானே! நானே வளக்கிறேன், மாரி!
பிள்ளைக்கு என்ன பேரு மச்சான்?
மாதவன்னு வச்சிருக்கேன்.
இங்கே குழந்தை சுகமாக வளர்ந்து வரும்போது முனியப்பா என்ன ஆனன் என்று பார்ப்போம்........
நகைக் கடையில்....
ஹலோ! ஆமாங்க! ஜமீன்தார் வீட்டு நகையேதான்! முத்திரையிருக்கே!
ஹலோ! சேட்ஜி! ஆகா அப்படியே பேச்சுக் கொடுத்துவையுங்க! இதோ ரெடியா வறேம்........
அத்தரி கொடகல்! இவன் தானுங்கோ!
2


பத்து வருஷம் கடுங்காவல் தண்டனை!
ஜெயிலில் கருப்பன் என்ற மற்றொரு கைதி முனியப்பாவுக்கு நண்பனாகிறான். கருப்பன் விடுதலைக்கு முதல் நாள்....
கருப்பா! உம்பேரு இனி சோமு! மெதுவா ஜமீன்காரு கிட்டே வேலைக்குப் போயிடு, படிச்சிருக்கே.
அது ஒண்ணும் பெரிய விஷயமில்லே. அப்படியே செய்யறேன்!
ஓராண்டு முடிகிறது. கருப்பன் ஜமீன்தாரிடம் வருகிறான்.
நான் வந்தவேளை எஜமானுக்கு இன்று ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிற நல்ல நாள். நான் உத்தியோகத்தை நாடி...
சரி; இரும், பார்ப்போம்!
அதோ ஜமீன்தாரு பின்னாலே போறது யாரு?
அந்தக் கரங்கா! அதுதான் இப்போ புது மானேஜரு! பழைய ஆளைநைஸா கவிழ்த்துட்டு வந்திருக்காரு!
ஜமீன்தார் மகள் தேவகிக்கு ஓராண்டு ஆனதும், ஜமீன்தாரிணி மகளைப் பிரிந்த ஏக்கத்திலேயே இறந்து போனாள்.....
எட்டு வருடங்கள் கழிந்தன
முனியப்பா! பத்து வருஷங்கள் முடிந்து விட்டன. இன்று உனக்கு விடுதலை!
கிராமத்தில்...
மாதவா! உன் படிப்புக்காக நாம் முல்லை வனத்துக்கே போக வேண்டியது தான்.
சரி, அப்பா!
பள்ளிக் கூடத்தில் ஜமீன்தார் மகள் தேவகியும், மாதவனும் அன்போடு சேர்ந்து படிக்கிறார்கள்...
மாதவா! என் அப்பா திடீரென்று நேற்று காசிக்குப் போயிட்டாரு!
உனக்கு எப்படித் தெரியும்?
நான் சொன்னேன். என்னிடம் தான் அவர் சொல்லி விட்டுப் போனார். தேவகி, வா, போகலாம்!
அவர் யார்?
அவர் தான் எங்க புது மானேஜர் - சோமு
3


அன்று மாலை மாதவன் வீடு திரும்பும் வழியில்..
இதுதானே பாழடைந்த பங்களா? பேய் வசிக்கும் பங்களா என்கிறார்களே!
ஆ! ஐயோ! ஐயோ!
அதோ! அவர்களுக்குத் தெரியாமல் போகிறேன்!
ஜமீன்தாரே! இதில் கையெழுத்துப் போடு! உம்! இனி நான்தான் இந்த ஜமீன் நிர்வாகி!
ஆ! துரோகிகளா! ஒரு காலும் போட மாட்டேன்!
ஜமீன்தாரே... நீ இங்கே அடைத்துக் கிடப்பது ஒருவருக்கும் தெரியாது. அடுத்த ஞாயிறு வரை கெடு தருகிறேம். அதற்குள் இதில் கையெழுத்து இடவில்லை என்றல்....
தலை பிசுக்....
மறுநாள் காலை மாதவன் தன் வளர்ப்புத் தந்தை சிங்காரத்துடன் ஒருவரும் அறியாமல் பாழடைந்த பங்களாவில்....
என் பெயர் சிங்காரம். எங்களுக்கு உண்மை புரிந்தது. ஏதோ எங்களால் ஆன உதவி செய்கிறேம்!
சிங்காரம்! இதுதான் கதை. ஆனல் நான் வருவது சரியல்ல! தேவகியைக் கொன்று விடுவார்கள்!
ஞாயிறு அன்று தயாராக இருங்கள். தேவகியை நாங்கள் பார்த்துக் கொள்கிறேம்!
மாரி தன் சகோதரி சின்னம்மாவைப் பார்க்க வருகிறன்...
அண்ணே! உனக்கு எப்படி ஜமீனிலே வேலை கிடைச்சுது?
மானேஜரும் நானும் முந்தி ஒரே சிறையில் இருந்தோம். அந்தச் சிநேகம்...
ஞாயிற்றுக்கிழமை மாலை...
ஆ! முனியப்பா, ஜமீன்தாரைக் காணுமே!
தப்பிச்சுட்டாரா? ஆ! ஏதோ காலடி ஓசை கேட்கிறது!
திருடன்! திருடன்! அதோ ஓடுகிறன்! பிடி, பிடி!
சோமு! நம்ப மாரி அல்லவா ஓடுகிறன்!
ஆ! பிடித்து விட்டார்களே! மடியிலிருந்து தங்கச் சங்கிலி!
4


ஜமீன்தார், மாதவன், சிங்காரம் மூவரும் வாசலில் நிற்கிறார்கள்...
ஆ! இது என் மாமா, மாரி யாச்சே!
ஆ! என் மகனின் கழுத்தில் இருந்த சங்கிலியாச்சே!
ஆ! உண்மையைச் சொல்லிவிட றேங்க! என்ன வேலைக்கு வச்ச இரண்டுபேரும் இப்பமேலே தான் இருப் பாங்க!
ஆ! மாரி துரோகம் செய்து நம்மைக் காட்டிக்கொடுத்து விட்டான்.
இப்படிப் பின்புற வழியாகப் ஓடி விடுவோம்
முனியப்பாவும், சோமுவும் பின்புறமாக வரும்போது, மாதவன்...
நில்லுங்கள்! போலீஸ்! போலீஸ்!!
சோமுவும் முனியப்பாவும் துப்பாக்கியை எடுக்குமுன்....
கையைத் தூக்குங்கள்! இல்லையோ சுட்டு விடுவேன்!
உம்!
பத்து வருஷங்களுக்கு முன்பு பாமினி நதியில் தண்ணீர் குடிக்கப்போனேன்... சங்கிலியுடன் ஒரு குழந்தை...
அந்தப்பையன் தான் இந்த மாதவன்!
அப்படியா? மாதவனை அந்தக் குழந்தை!
ஆ! மாதவா! என் அருமைக் குழந்தாய்
அண்ணா!
தேவகி!
மாரி! உன்னால் நானும் என் குழந்தைகளும் மீண்டோம்! இனி நீ இந்த ஜமீனைச் சேர்ந்தவன். சிங்காரம் தான் மானேஜர். சின்னம்மா மாதவனுக்கு மட்டுமல்ல, தேவகிக்கும் தாய். எனக்குச் சகோதரி..
கயவர்கள் தொலைந்தார்கள் கஷ்டம் தொலைந்தது!
எல்லோரும் மகிழ்ச்சியுடன் பலகாலம் சுகமாக வாழ்ந்தார்கள்.
சுபம்
5

# சைனு ச்சூ



ஆர்வி

சீனனுக்குப் பின்புறத்தில் நின்ற உருவம் மெல்ல மெல்ல நெருங்கி வரத் தொடங்கியது. அவனுக்கு வாயை விட்டுக் கூச்சல் போடக்கூடத் தோன்றவில்லை. தொண்டையில் இரும்புக் கட்டை ஒன்று அடைத்துக்கொண்டது போல் இருந்தது. அவன் தன்னையறியாமல் மெல்ல மெல்லப் பின் வாங்கினான்.

அந்த உருவம் பேசவில்லை; மிரட்டவில்லை. தலையிலிருந்து கால்வரை பெரிய கம்பளியால் மூடிப் போர்த்திக் கொண்டது போல் நெடிய தோற்றத்துடன் அது அவனுடைய வேகத்துக்கு இசைய முன்னேறி வந்தது.

சின்ன அறை; எவ்வளவுதான் பின்னால் போகமுடியும்? சீனன் திரும்பிப் பார்க்காமலேயே சுற்றிச் சுற்றி வந்தான். இனி, அதற்கும் வழியில்லை. அந்தப் பயங்கர உருவம் அவனை அசைய முடியாதபடி மூலையில் மடக்கிக் கொண்டு விட்டது. இரும்பு போன்ற அதன் கைகள் இரண்டும் அவன் கழுத்தைப் பற்றிவிட்டன.

''கிரீச்—''

உயிருக்குப் பயந்து ஓலமிட்டுக் கதறியது அவன் குரல். கழுத்தைப் பிடிக்க வந்த கை அவன் வாயை அடைத்துவிட்டது.

அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். அடுத்த க்ஷணம் அவன் வெட்டிச் சாய்ந்த மரமெனக் கீழே விழுந்து விட்டான். அப்புறம் அங்கே என்ன நடந்தது என்பது அவனுக்குத் தெரியாது.

* * *

அரை மணி நேரம் கழிந்திருக்கலாம். பறங்கிமலைப் பங்களாவின் கீழ்ப்புறத்தில் ஒவ்வொரு விளக்காகப் பொக்குப் பொக்கென்று எரியத் தொடங்கியது. சில விநாடிகளில் பகல் போல் எங்கும் பிரகாசமாகி விட்டது.

தடதடவென்று ஐந்தாறு பேர் கையில் தயாராகத் தடி-துப்பாக்கிகளுடன் மாடிப்படி ஏறி வந்தார்கள். நீல விளக்கின் மங்கிய வெளிச்சத்திலே ஷங்கங் காடாந்தகாரமான தூக்கத்தில் ஆழ்ந்து, இஷ்டப்படி குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

''தம்பி! குறட்டை! ஏ குறட்டை!'' என்று வந்தவர்களில் ஒருவர் ஷங்கங்கைக் குலுக்கி எழுப்பினார்.

பன்முறை மன்றாடிய பிறகும் அவன் எழுந்திருக்கும் வழியாகத் தோன்றாததால் அவர் சட்டென்று எதிரே இருந்த பீங்கான் குழாயில் கொஞ்சம் குளிர்ந்த தண்ணீராகப் பிடித்து வந்து, அவன் முகத்திலே 'சுள்' ளென்று அடித்தார்.

அவர் செய்த வேலை பலித்து விட்டது. உளறியடித்துக்கொண்டு, ஷங்கங் எழுந்துவிட்டான்.

''என்ன தம்பி! ஒண்ணும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்கிறாய்? மாஸ்டர் சீனன்

எங்கே?'' என்று அதட்டினார் வந்த மனிதர்.

இதற்குள் வேறு விளக்குகளும் எரியத் தொடங்கின. கூசிய கண்களைச் சுருக்கிக்கொண்டு ஷங்கர் அங்கிருந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் எல்லாம் யார் என்று தெரிந்துவிட்டது. இன்ஸ்பெக்டர் துரைசிங்கமும் இன்னும் நாலைந்து போலீஸ்காரர்களும் அவனைச் சுற்றி நின்றுகொண் டிருந்தார்கள். அந்த நேரத்தில் அவர்களை யெல்லாம் அங்கே கண்டதும் அவனுக்கு ஒரே உதறல் எடுத்துவிட்டது.

''பே பே பே பே'' என்று வாய் குளறத் தொடங்கியது. பேந்தப் பேந்த விழித்தான்.

''எங்கே, மாஸ்டர் சீனன்?''

''யாரு..? சீனனா?..அ..அ.. அ..ங்கேதானே..ப..ப...ப...ப ..'' தந்தியடிப்பதுபோல் அவன் வாய் ப-ப-ப என்று திக்கியது.


''யாருகிட்டே தம்பீ,• இந்த வேலை யெல்லாம்? மரியாதையாக உண்மையைக் கக்கிவிடு. இல்லே.. முட்டி நொருங்கிப் போகும். ஆமாம்..'' என்று அவர் அவனை மீண்டும் அதட்டினார்.

பாவம், ஷங்கர் ஒன்றும் புரியாமல் விழித்தான். சீனனைக் காணவில்லை என்பது ஒரு புறமும் இன்ஸ்பெக்டரின் மிரட்டல் மறுபுறமும் அவனைக் கலங்க வைத்தன.

''ஸார்! எனக்கு ஒண்ணும் தெரியாது, ஸார்! நான் அப்போ படுத்தவன்தான், ஸார்! அப்புறம் என்ன நடந்தது என்று ஒன்றுமே தெரியாது, ஸார்!'' என்று சொல்ல விரும்பினான். ஆனால் வார்த்தைகள் வந்தால்தானே?

இன்ஸ்பெக்டரோடு வந்த போலீஸ்காரர்கள் இதற்குள் மூலைக்கு ஒருவராக விளக்கைப் போட்டு அந்த மாடியை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

''என்ன தம்பி, கேட்கிறேன். முழிக்கிறியே!'' என்று துரை சிங்கம் ஷங்கரின் கையைப் பிடித்துக்கொண்டு மிரட்டினபடி கைத்தடியால் அவன் முட்டியில் ஒன்று மாதிரிக்காகப் போட்டார்.



''ஐயோ!'' என்று அடியைத் தாங்கமுடியாமல் கத்தினான் ஷங்கங்.

''உம்..சொல்லு..''

''எனக்குத் தெரியாது, ஸார்!''

''டேய், பொய்யா சொல்றே? உனக்குத் தெரியாமெயா இங்கே இவ்வளவும் நடந்திருக்கும்? மரத்தையே வெட்டி வழியிலே போட்டிருக்காங்க. அதுவரையிலேயா நீ தூங்கிக்கிட்டு இருந்திருக்கே! பொய் சொன்னியோ....''

இன்ஸ்பெக்டர் தம் வார்த்தையை முடிப்பதற்குள் டெலிபோன் அறையினுள்ளிருந்து ஒரு ஜவானின் குரல் கேட்டது. ''இதோ! மயக்கமா அடிச்சு விழுந்து கிடக்குது, ஸார்!'' என்று அந்த அறையைச் சோதனை போடச் சென்ற போலீஸ்காரன் கத்தினான்.

எல்லாரும் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். சீனன் அங்கே ஒரு மூலையில் பிரக்ஞையின்றிச் சுருண்டு விழுந்து கிடந்தான். பேச்சு மூச்சு இல்லை; நினைவு, விழிப்பு இல்லை. எல்லாரும் சேர்ந்து ஆளைப் புரட்டிப் பார்த்தார்கள்.

துளிக் காயம்கூடப் படவில்லை. ஏதோ மயக்கமாக விழுந்து விட்டான் என்று மட்டும் தெரிந்தது. எதனால் விழுந்தான், என்ன நடந்திருக்கும் என்பதொன்றும் தெரியவில்லை. உடனே டாக்டருக்குப் போன் செய்தார்கள். டாக்டர் வருவதற்குள் முதல் உதவி சிகிச்சை செய்ய முடியுமா என்று பார்க்க அவனைத் தூக்கி வந்து அந்தப் பெரிய மஞ்சத்தில் கிடத்தினார்கள். ஷங்கங், சீனன் இருந்த நிலையைப் பார்த்துவிட்டு, 'ஹோ-ஹோ!' என்று பயந்துபோய் அழுதான்.

''டேய்! சும்மா இரு. கலாட்டா செய்தாயோ, புடிச்சு வெளியிலே தள்ளச் சொல்லிடுவேன். துணைக்கு ஆள் வேணுமானா உன்னைப்போன்ற ஆளைத்தான் கொண்டு வந்து வைத்துக் கொள்ளணும்! தூங்கு மூஞ்சி!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

'மாடி அறையில் எதுவும் கலைக்கப்படவில்லை. எல்லாம் வைத்தது வைத்தபடியேதான் இருந்தது' என்று வாட்சுமேன் கூறினான்.

''ஆமாம்; நீ இதுவரையில் எங்கே இருந்தே?'' என்றார் இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்து.

''கீழேதான் டியூட்டி பார்த்துக்கிட்டிருந்தேன். அப்புறம் என்ன ஆச்சோ தெரியல்லே. அப்படியே படுத்துத் தூங்கிட்டேன். நீங்க வந்தப்போதான் முழிச்சுக்கிட்டேன்!'' என்றான் வாட்சுமேன்.

''சரியான ஆளுங்களாக வந்து சேர்ந்தீங்க, அப்பா! ஒரே தூங்கு மூஞ்சிப் பட்டாளமாக! இதுதான் நீ பங்களா காவல் பாக்கற லட்சணமோ?'' என்றார் துரைசிங்கம்.

வாட்சுமேன் பொன்னுரங்கம் பதில் சொல்ல வழியில்லாமல் மலங்க, மலங்க விழித்தான். இத்தனை நாள் அவன் இந்த மாதிரி ஒரு நாளும் ஏமாந்துபோய்த் தூங்கியது இல்லை. இன்று இருந்த அஜாக்கிரதையால் நேர்ந்த ஆபத்தை எண்ணி அவன் நடுங்கினான். இதனால் தன் வேலைக்கே மோசம் வந்துவிடுமோ என்று அவனுக்குப் பயமாகவும் இருந்தது.


மரம் விழுந்து கிடந்ததால் காரைச் சாலையிலேயே விட்டுவிட்டு டாக்டர் நடந்து வந்தார். கைச் சுருக்காக அவர் சீனனுக்கு முதலில் செய்ய வேண்டிய வைத்திய உபசாரங்களைச் செய்தார். விடியற்காலை நாலு மணிவரையிலும் அவனுக்கு மூர்ச்சை தெளியவேயில்லை. அதற்குமேல்தான் அவன் உடலில் ஒரு சலனம் உண்டாயிற்று. எல்லாருக்கும் அதற்கு மேல்தான் டாக்டரின் சிகிச்சையில் ஒரு நம்பிக்கையும் தோன்றியது. ஷங்கங் சீனனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். அவன் எத்தனையோ தைரியசாலிதான். ஆனால் தெருவில் பிளாட்பாரத்தில் கிடந்தவரையில் தான் அந்தத் துணிச்சல் எல்லாம் இருந்தது. இப்போது, எதற்கெடுத்தாலும் பயம்தான் அவனுக்கு முன்னால் வந்து நின்றது. பணம் வந்துவிட்டால் பயமும் எங்கே என்று காத்திருக்கும் போலிருந்தது. மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கப் போகும் சீனனுக்கு அதிர்ச்சி தரும் காரியம் ஒன்று காத்திருந்தது.

(தொடரும்)

# கண்ணன் சித்திரப் போட்டி

சென்ற சித்திரை மாதத்தில் கண்ணன் பத்திரிகையில் சித்திரப் போட்டி ஒன்று வைத்தோம். அதில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டார்கள். அந்தப் போட்டியிலே பரிசு பெற்ற படங்களை அடுத்த பக்கங்களில் காணலாம். பரிசு பெற்ற குழந்தைகளுக்கெல்லாம் கண்ணனின் கனிந்த பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றப் படங்களில் பல பரிசு பெருவிட்டாலும், பெரும்பாலும் சிறந்த முறையில் அமைந்திருந்தன. தமிழ் நாட்டுக் குழந்தைகளின் கலையுணர்வு உயர்ந்த நிலையில் இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி கொள்கிறோம். பெருமைப்படுகிறோம்.

—ஆசிரியர்.



## பரிசு பெற்ற படங்கள்


கணித வகுப்பு


C. S. சித்ரா
(வயது - 8)
மைசூர்.




பூக்கும் புது மரம்

N. முகமது காசிம்
(வயது - 16)
புதுக்கோட்டை.








பெட்ரோல் பங்க்

ஹென்றி ராசு
(வயது - 12)
திரிகோணமலை.
(இலங்கை)

டவுன் பஸ்

S. வரதன்
(வயது - 13)
சென்னை-4.






பாலத்தடியில்..

அ. சுப்பையா
(வயது - 15)
கரிவலம்வந்த
நல்லூர்.

வசந்தம்


K. நரசிம்மன்
(வயது - 14)
பீமன்ன
பேட்டை.




# பொழுது போக்கு

அடுத்து வரும் 15 பக்கங்கள் அத்தனையும் வேடிக்கை, விளையாட்டு, பொழுதுபோக்குப் பகுதிகள். எல்லாம் மகிழ்ச்சியையும் களிப்பையும் ஊட்டுபவை. உங்கள் அண்ணன் தம்பிகளோடு, சகோதரிகளோடு, நண்பர்களோடு விளையாடி மணிக்கணக்காகப் பொழுதை இன்பமாகக் கழிக்கலாம், உபயோகமாகக் கழிக்கலாம்.

## யார் கண்கள்?



①




⑥



②




⑦



③




⑧



④



⑨



⑤




⑩


இவர்களை நீங்கள் திரைப்படங்களிலே பார்த்திருப்பீர்கள்! எங்கே உங்கள் ஞாபகச் சக்தியைப் பார்ப்போம்.

விடை: 64-ஆம் பக்கம்.


# போட்டோ க்விஸ்



1




2




4



3




5



6


படங்களை நன்றாகப் பார்த்து என்ன பொருள் என்று சொல்லுங்கள்.




7




8




9



10



11



12

எல்லாம் சரியாகச் சொல்லி
விட்டால் நூறு மார்க்கு,

விடைகள்: 64-ஆம் பக்கம்


போட்டோ: ஸ்ரீதர்

# எது எதைத் தின்னும்?




இங்கே சில பிராணிகளும், அவை உணவாகக் கொள்ளும் ஜந்துக்களும் பொருள்களும் கலந்து காணப்படுகின்றன. எந்தப் பிராணி எதைத் தின்னும் என்று உங்களால் சொல்ல முடியுமா? உதாரணம்: 10ஐ 1 தின்னும். அதேபோல் மற்றவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும். உங்கள் விடைகளை 64-ஆம் பக்கத்து விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

# இவர்கள் யார்?





நமது ஓவியர் தலைவர்களின் முகத்தில் உள்ள கண், மூக்கு, காது எல்லாவற்றையும் மறைத்து விட்டார். எங்கே, நீங்கள் கண், மூக்கு எல்லாம் போட்டு யார் என்று பாருங்கள்.

விடை: 64-ஆம் பக்கம்

# சித்திரக் கட்டம்

க. திருநாவுக்கரசு



படங்களைப் பார்த்து, கட்டங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

விடை: 64-ஆம் பக்கம்.

# வெட்டி ஒட்டும் படம்



நல்ல படத்தைத் துண்டு துண்டாகச் செய்து, கலைத்து வைத்திருக்கிறது. அதைத் தனித் தனியே வெட்டி எடுத்து ஒரு கன அட்டையில் சரியானபடி ஒட்டிச் சேர்த்தால் ஒழுங்கான படமாகும். செய்து பாருங்கள்.

சித்திர எழுத்துக் கதை

# ராஜா யின் கனவு

ஜை ந்தது. அன்று

வெல்லக் களையும் பாயசம் முதலியவற்றையும்

வரையில் 1 பார்த்துவிட்டு, க் பக்கம் போ

ளுன். அங்கேதான் ந் தோப்பு இருந்தது. அவனைக்

டதும் மற்ற நண்பர்கள், "அதோ இல்லா வருதுடோய்!"

என்று ளுர்கள். கோபத் லைக் கடித்

துக்கொண்டான். "நான் இல்லாத என்ருல் நீங்கள்

வஸ்துக்கள்!" என்று பதில் கொடுத்தான்.

பெரிய விஷமக் ஆனதால் 1 வரும் பதில்

சொல்ல B140 1 த்தின் யில் போய்

உட் ந்தான். அந்த ம் யுமாக இருந்தது.

அதன் குளு INK யாக இருக்கவே, உட் ந்திருந்த

து படுத்தான். யைத் க்கு வைத்

துக் கொண்டான். க்கும் உண்ட மயக்

ஞல் ணை ஞன். உடனே நித் போஞன்.

மோ மோ என்ற தூக்கம். தூக் ல் விதம் வித

மான கனவுகள். யைவிட வி மான க்

காட்சிகள் புதிய புதிய கள், கள் எல்லா ம்

ஆடிஞன்; ஓடிஞன்; த்தான். ந் ப்

களை விட கன வந்த கள் அரு யாக,

யமாக நடந்து கொண்டார்கள். உண் யில், நன ஆடி

ஓடியது போலவே க்கு த்தது. கன ஒரு

அவனைப் க்க யில், விழுந்து விட்டான்.

த்தின் யிலே அதே சமயம் 1 1 த்

தைக் கீழே தொப்பென்று பறித்துப் போட்டது.


ணைத் திறந்தான். களைத்துப் போன அவனுக்கு இனி யான

காத்திருந்தது. கன ஆடிய ஆட்டத்தில் சாபபிட்ட

, , எல்லாம் ஜ மாகி விட்டன.

# எண்ணிலே படங்கள்

எண்களைக் கொண்டே சில படங்களைச் சுலபமாக வரையலாம்; அவற்றில் சில இவை:




—ரகமி.


# சீனாக்காரன் மூட்டை




அடேயப்பா! இவன் நேரே சீனாவிலிருந்து புதுப் புதுப் பட்டாசு வெடிகள் எல்லாம் 40 தினுசு கொண்டு வந்திருக்கிறான். அந்த மூட்டைக்குள் என்ன என்ன வெடிகள் இருக்கின்றன என்பதை அந்த எழுத்திலிருந்தே கண்டுபிடித்துவிடலாம். கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் கண்டு பிடிக்க வேண்டும். கண்டுபிடித்த பிறகு 64-ஆம் பக்கத்து விடையைப் பாருங்கள். ஒருவராவது முழுவதையும் ஒழுங்காகக் கண்டு பிடித்திருக்க மாட்டீர்கள்! பந்தயம் வேண்டுமானால் கட்டுகிறேன். சரிதானா?


# பட்சணம் திருடி

எதிர்ப் பக்கத்தில் இருப்பவன் மிகவும் குறும்புக்காரன். ஆமாம்; அம்மா கொடுப்பதற்குள் அவனுக்கு ஆசை பொறுக்கவில்லை. பாத்திரத்திலுள்ள பட்சணங்களை அவசர அவசரமாகத் திருடி வாயில் போட்டுக் கொள்கிறான். எப்படி என்பதை எதிர்ப்பக்கத்தில் உள்ளபடி செய்யுங்கள்.



**செய்யும் விதம்:** எதிரே உள்ள வட்டமான பாகத்தைக் கத்திரித்து எடுத்துக்கொள். பிறகு இந்தப் பக்கத்தில் A என்ற பாகத்தைக் கத்திரித்து எடுத்து விடு. 1 என்ற புள்ளியில் ஒரு குண்டூசியைச் செருகு. வட்டமான பகுதியின் மையத்தை இந்தப் பக்கத்தின் பின்புறமாகக் குண்டூசியில் பொருத்திவிடு. குண்டூசியை நழுவவிடாமல் வட்டமான பகுதியைக் கடிகாரத்தின் முள் சுற்றும் திசையில் வேகமாகச் சுழற்றிப் பார். என்ன, கண்களை அகல விரிக்கிறாய்! ஒரு விநாடியில் எத்தனை பட்சணங்கள் அவன் வாயில் போய்க் குதிக்கின்றன, பார்த்தாயா!





# விடுகதைப் பாடல்கள்




1. திரியுண்டு எண்ணெயில்லை
மருந்துண்டு நோய் இல்லை
ஒலியுண்டு வாய் இல்லை
பின்னலுண்டு மயிர் இல்லை.

2. பெட்டியிலே வைத்திருப்பார்,
பணமோ அல்ல;
பிடித்திருக்கக் காம்புண்டு,
காயும் அல்ல;
அட்டியின்றி ஒளிபடரும்,
விளக்கும் அல்ல;
அழகியசெம் பொட்டுண்டு,
நெற்றி அல்ல;
கட்டையினால் உடலுண்டு,
பொம்மை அல்ல;
கறுப்புநிறம் படைத்ததுண்டு,
காக்கை அல்ல;
இட்டமுடன் குழந்தைகள்
கையில் கொள்வார்;
இப்பொருளை இன்னதென்றே
இயம்பு வீரே.






3. குங்குமம் இட்டிருப்பாள்—மலரைக்
கோதி முடித்திருப்பாள்
அங்கம் பளபளப்பாள்—ஒளிசேர்
அஞ்சு முகம் படைத்தாள்
மங்கையர் செங்கரத்தால்—எடுத்து
வாழ்த்தி வளர்த்திடுவார்
எங்கெங்குக் கல்யாணம்—அவ்விடத்
தேற்றம் அடைந்திருப்பாள்.



4. கயிற்றை உருவிவிட்டால்
ஆடுகின்ற மாடு
காலொன்றில் ஆணி தைத்தும்
ஆடுகின்ற மாடு
வயிற்றைப் பிதுக்கிக்கொண்டு
வாழுகின்ற மாடு
வட்டவட்ட மாய்ச்சுழன்று
தூங்குகின்ற மாடு.



5. சுற்றிச் சுற்றி வருமாம் புடலம்பூ
சூதாடி வருமாம் புடலம்பூ
கச்சேரி செல்லுமாம் புடலம்பூ
கரணம் அடிக்குமாம் புடலம்பூ
டங்கென்று பேசுமாம் புடலம்பூ
காய்கறி அல்லவாம் புடலம்பூ



6. தைதை கூத்தாடி
தயிரில் ஆடும் கூத்தாடி
கட்டி வெண்ணெயைக் கண்டுவிட்டால்
கைகால் ஓயும் கூத்தாடி.



# பொழுது போக்கு

## விடைகள் :

**யார் கண்கள்?:** எம். ஜி. ராமசந்திரன், 2. பானுமதி, 3. நாகேச்வர ராவ், 4. ஜெமினி கணேசன், 5. வைஜயந்திமாலா, 6. ராஜ சுலோசனா, 7. சிவாஜி கணேசன், 8. பத்மினி, 9. சாவித்திரி, 10. டி. எஸ். பாலையா.

**போட்டோ க்விஸ்:** 1. மின்சார பல்பு. 2. தொப்பி. 3. வரிக் குதிரை. 4. சட்டப் புத்தகங்கள். 5. கப்பும் சாஸரும். 6. அட்டையில் போடும் கிளிப்பு. 7. குளத்தின் படிக்கட்டு. 8. காகிதத்தைத் துளையிடும் பஞ்ச்சிங் மெஷின். 9. அட்டையில் பொத்தான்கள். 10. சீப்பும் பிரஷ்ஷும். 11. சோடா புட்டிகள். 12. மின்சார பல்பு மாட்டும் ஹோல்டரும் வெளிச்சத்தைத் தடுத்து அதிகப்படுத்தும் ஷேடும்.

**எது எதைத் தின்னும்?:** *10 ஐ 1 தின்னும், 2 ஐ 19, 21 ஐ 9. 9 ஐ 3, 4 ஐ 14, 22 ஐ 5, 6 ஐ 18, 7ஐ 16, 15ஐ 8, 17 ஐ 11, 20 ஐ 12, 1 ஐ 23. 13 ஐ 24.*

**இவர்கள் யார்?:** விஜயலக்ஷ்மி, ராஜேந்திர பிரசாத், டாக்டர் ராதா கிருஷ்ணன், ராஜாஜி, இந்திரா காந்தி, ஜவாஹர்லால் நேரு.


**சித்திரக் கட்டம்: மேலிருந்து கீழ்:** 1. கடிதம், 2. பந்து, 4. பிறை, 5. அட்டிகை, 6. புதைவாணம், 9. கொக்கு. 11. தட்டு. 12. காதணி, 15. பானை, 16. புலி. 17. பசு.

**இடமிருந்து வலம்:** 1. கப்பல், 3. தும்பி. 5. அம்பு, 7. பை. 8. பூ, 9. கொடி, 10. வாளி, 12. காக்கை, 13. லட்டு, 14. மதகு, 15. பாம்பு, 17. படி. 18. யானை. 19. ஏசு.

**சீனாக்காரன் மூட்டை:** 1. கம்பி மத்தாப்பூ, 2. பூவாணம். 3. குண்டு வெடி, 4. சட்டிவாணம், 5. சைனா பட்டாசு, 6. ஏரோப்ளேன். 7. ஜமீன் சக்கரம், 8. ஊசிப் பட்டாசு, 9. ஆட்டம் பாம், 10. விஷ்ணு சக்கரம், 11. ஆனை வெடி, 12. இரட்டை வெடி, 13. கேப்பு, 14. பாம்பு வாணம், 15. படபட, 16. சொர சொர. 17. மாஜிக் ஒயர், 18. மாப்பிள்ளை வெடி, 19. எலி வாணம், 20. பொம்மை வாணம், 21. புஸ்வாணம், 22 ஓலைப் பட்டாசு. 23. ஒற்றை வெடி, 24. தேள் வாணம், 25. தவளை வாணம், 26. எலெக்டிரிக் பட்டாசு. 27. பென்ஸில் வாணம், 28. சாட்டை, 29. வெங்காய வெடி. 30. குச்சி மத்தாப்பூ, 31. பட்சி வெடி, 32, தோரண வெடி, 33. குதிரை வாணம், 34. மின்னல் வெடி, 35. கொம்பு வெடி, 36. ஆத்மலா புருசு, 38. கப்பல் வெடி, 38. பல்டி வெடி. 39. கல் பட்டாசு. 40. அதிர்வெடி.

**விடுகதைப் பாடல்கள்:**

| | |
|---|---|
| 1. பட்டாசு | 2. மத்தாப்பூ |
| 3. குத்துவிளக்கு | 4. பம்பரம் |
| 5. ரூபாய் | 6. மத்து. |




**பாத்திரங்கள்**

**மணி:** ஸ்கூல் மாணவன்.

**கமலி:** அவன் சகோதரி.

மற்றும் அவர்கள் அம்மா, அப்பா, அத்தை.

1

**அப்பா:** ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே..........

**அம்மா:** இதென்ன கஷ்டகாலம்? அடீ கமலி, போய் டாக்டரை அழைச்சுண்டு வா. உங்கப்பாகூடத் தன் சிடுசிடுப்பையெல்லாம் விட்டு விட்டு ஆனந்தம் ஆனந்தமேன்னு பாட்டுப் பாட ஆரம்பிச்சுட்டாரே!

**கமலி:** ஆமாம்மா, பாட்டு வீசை என்ன விலைன்னு கேட்கும் அப்பாவே பாடுவதென்றால் சங்கீதத்திற்கு இனி என்ன கேடு காலமோ தெரியவில்லையே!

**அப்பா:** ஏய் கமலி, என்னுடைய தினபலன், வாரபலன், மாதபலன் எல்லாவற்றையும் பார்த்தாயா? சனியினுடைய வக்ர பார்வையில் சுக்ரன் விழுந்து, குருவையும் உடன் அழைத்து, புதன் பார்வையை வெட்டி....

**அம்மா:** ஐயையோ, ஏதோ கன்னா பின்னாவென்று பேத்துகிறாரேடி கமலி!

**கமலி:** நீ சும்மா இரும்மா, ரகளை செய்யாதே. தீபாவளி வந்து விட்டதோ இல்லியோ, அதுக்கு வேஷம் இது.

**அம்மா:** தீபாவளிக்கும் இதுக்கும் என்னடி சம்பந்தம்?

**கமலி:** நீயும் நானும் அப்பாவை இதை வாங்கிக் கொடு, அதை வாங்கிக் கொடுன்னு கேக்கப் போகிறோமே என்று சும்மா பைத்தியக்கார வேஷம் போடுகிறார், அப்பா.

**அப்பா:** அடி பாவி, எனக்கு உண்மையான ஆனந்தம் வந்தால் கூட நான் பாடிக் களிக்கக் கூடாதா?

**அம்மா:** அட, உங்களுக்குக் கூடவா ஆனந்தம் வந்து விட்டது? ஆபீஸில் ஏதாவது தீபாவளி போனஸ் கீனஸ் தரப் போகிறார்களோ?

**அப்பா:** சரிதான், போனஸுக்கு நல்ல ஆபீஸ் பார்த்தாயே! ஆனந்தம் ஆனந்தம்.........

**கமலி:** அதெல்லாம் இருக்காது அம்மா. அப்பாவை உட்கார வைத்து எவனாவது காரியவாதி புகழ் மாலை சூட்டி, இரண்டு கப் காபி வாங்கிக் கொடுத்திருப்பான்.

**அப்பா:** சரிதான், எனக்குக் காபி வாங்கித் தர எவனாவது முட்டாளா..அட சட்! ஆனந்தத்தில் வார்த்தைகூட நேராக வர மாட்டேங்கிறதே! அப்படி அவன் வாங்கிக் கொடுக்கும் காபியைக்



இந்த விசுவாமித்திரருடைய......

குடிக்க நான் என்ன முட்டாளா? ஆனந்தம் ஆனந்......

**அம்மா:** கணவனுடைய பாதி அம்சம் மனைவின்னு சொல்லுவார்கள். உங்க சுக துக்கத்திலே நானும் பங்குள்ளவள். அப்படியிருக்கும் போது அந்த ஆனந்த விஷயத்தை எனக்குச் சொல்ல கூடாதோ?

**அப்பா:** அப்படிப் பணிவாக வா வழிக்கு! என்னுடைய சிநேகிதன் சுந்தரம் இருக்கானேல்லியோ....

**அம்மா:** இல்லாமே எங்கே போனான்? கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க வழி இல்லாமல் இதே தெருவில் ஐந்து வருஷமாக வெட்கமில்லாமல் குடியிருக்கிறானே. நீங்கள்தான் கடன் பட்டதுபோல் அவனைக் கண்டால் சலாம் போடுவீர்களே.

**அப்பா:** ஏய், பாத்திரமறிந்து பேசு. நான் மீசை முளைத்த ஆண் பிள்ளை! சலாம் கிலாம் இதெல்லாம் பார்த்து ஏமாறுபவன் நான் அல்ல! இதோ பார்த்தாயா?

**அம்மா:** அட, மூன்று பத்து ரூபாய் நோட்டு! ஏது இது? அந்தச் சுந்தரத்தினிடம் கறந்து வாங்கி விட்டீர்களா?

**அப்பா:** அதெல்லாம் வாய் அசைக்காமல் காரியம் முடிந்து விடும் என்னிடம். சும்மா அவனை வழியில் பார்த்து, 'சுந்தரம்' என்றேன். உடனே ஜேபியிலிருந்த பணத்தைக் கொடுத்துவிட்டான்.

**அம்மா:** ஐயோ, பாவம்! பிள்ளை குட்டிக்காரன்!

**கமலி:** அட போம்மா நீ ஒண்ணு; அப்பா சவடாலில் மயங்கி விட்டாயே! அப்பா நம்மைத் தவிர வேறு யாரையாவது மிரட்டிப் பார்த்திருக்கிறாயா?

**அம்மா:** ஆமாண்டி கமலி, என்னுடைய அதிருஷ்டம்தான் பணம் கிடைத்தது. பானை பிடித்தவள் பாக்கியம் இது! தீபாவளிக்கு 'ஜோதி மஹா'லில் ஒரு புடவை பார்த்தேன். விலை முப்பதுதான். பார்த்தால் ஸில்க் மாதிரி இருக்கு!

**அப்பா:** ஏய், ஏய், அத்துடன் பேச்சை நிறுத்து. எனக்குப் பேண்ட், கோட் எல்லாம் போஸ்டாபீஸூம், சப் போஸ்டாபீஸூமாக இருக்கின்றன. அந்த ரூபாயில் முதலில் என் சுயதேவையைப் பூர்த்தி செய்து விட்டு....

**அம்மா:** ஐயே, உங்ககிட்டே போய் நான் சொல்ல வந்தேனே!

**கமலி:** ஏம்மா, அந்த முப்பது ரூபாய்க்கும் உன் புடைவையைப் பார்த்துக் கொண்டால் நாங்கள் என்ன செய்வதாம்? ஜார்ஜெட் சித்தாடை வேண்டுமென்று நானும் எவ்வளவு நாட்களாகக் கேட்கிறேன்?

**அம்மா:** கணவனில் பாதி மனைவி. மனைவிக்கே பாதி கிடைக்க இங்கே வழியில்லையே. நீ வேறு 'பிச்சை எடுக்கும் பெருமாளே, அதைப் பிடுங்கும் அனுமாரே' என்று வந்து விட்டாயா? மணி ஸ்கூலிலிருந்து வந்து விடுவான். அவனும் கிளம்பட்டும்.

**அப்பா:** சரிதான், என் தேவைக்கே இந்த ரூபாய் காணாது. நான் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். இந்தப் பணத்திலிருந்து உங்களுக்கு ஒரு நயா பைசாகூடக் கிடைக்காது.

(வாசலில் யாரோ வருகிறார்கள். அம்மா போய் வருகிறாள்).

**அம்மா:** ஆனந்தம் ஆனந்தம்!

**கமலி:** சரியாப் போச்சு, அப்பா காற்று உனக்கும் அடித்துவிட்டதா? விஷயம் என்ன? யார் வந்தது?

**அப்பா:** ஏ கமலி, உங்கம்மா மேனகை மாதிரி அப்படி இப்படி ஆடிப் பாடி மயக்கி, குலுக்கி என் மனத்தைக் கலைக்கப் பார்க்கிறாள். அதெல்லாம் இந்த விச்வாமித்திரருடைய மனம் கலையாது!

**அம்மா:** ஐயே, உங்கள் கசங்கின நோட்டு எனக்கு ஒன்றுகூட வேண்டாம். கமலி, இதோ என் கையில் பார்த்தாயா?......

**கமலி:** அட, உனக்கு ஏதும்மா பணம்? ஏதாவது மந்திரம் கிந்திரம் போட்டாயா?

**அம்மா:** எங்கள் லேடீஸ் கிளப்பில் மாத மாதம் அதிருஷ்டச் சீட்டு கட்டி வருகிறோமே, உனக்குத் தெரியுமோல்லியோ? மாதம் நாலு ரூபாயாக ஆறு மாதம் கட்டணும். இம்மாதம் என் பெயருக்குச் சீட்டு விழுந்திருக்கிறது. தீபாவளிக்கு உங்கப்பா ஒரு நயா பைசாகூடக் கொடுக்க மாட்டேன் என்றதும் கடவுளே பார்த்து எனக்குக் கொடுத்த பணம் இது. மேலே ஐந்தோ, ஆறோ போட்டு அந்தப் புடைவையை வாங்கிவிட வேண்டும். ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே......

**மணி:** (ஸ்கூலிலிருந்து வந்து கொண்டே) இதென்ன ஒரே கூத்தும் கொம்மாளமுமாக இருக்கு! புதையல் கிதையல் ஏதாவது...

**கமலி:** ஆமாண்டாப்பா நீயும் வா. புதையலைத் தோண்டி எடுக்க ஆள் இல்லையே என்று பார்த்தேன்!

**மணி:** என்ன விஷயம்?

**கமலி:** இந்த அப்பாவுக்கு சொத்தைப் பணம் முப்பது ரூபாயும், அம்மாவுக்குச் சொள்ளைப் பணம் இருபத்துநாலு ரூபாயும் கிடைத்துவிட்டதாம். ஏதோ புதையலைக் கண்டு விட்டதுபோல் இருவருக்கும் சந்தோஷம் தாங்கவில்லை. அந்தப் பணத்தில் அவர்கள் தேவை பூர்த்தியான பிறகுதான் எனக்குப் பங்கு உண்டாம். ஜார்ஜெட் சித்தாடை வேண்டுமென்று அடித்துக் கொள்கிறேன். அதுக்குவழியை..

**மணி:** ஹோல்டான்..ஏ கமலி, இப்படி எக்ஸ்பிரஸ் பஸ் மாதிரி நிற்காமல் பேசிண்டே போகிறாயே? இந்தக் குடும்ப வண்டியில் நானும் ஒரு பாஸஞ்ஜர் என்பதை எல்லோருமே மறந்து போய்விட்டார்கள் போலிருக்கு. வருஷா வருஷம் ஒரே ஒரு பீத்தல் ஷர்ட்டுடன் என் தீபாவளி முடிந்து விடுகிறது. இந்த வருஷம் எப்படியாவது எனக்கு ட்வீட் சூட் வாங்கணும்.

**கமலி:** எங்களுடைய கோரிக்கைகளெல்லாம் முதலில் ரிஜிஸ்டர் ஆகட்டும், உன்னுடைய மகஜர் கடைசியில்தான் வரும்!

**மணி:** ஏனோ தெரியல்லையே, நீ என்ன அப்பாவுடைய பிரைவேட் செக்ரட்ரியா? உன் பேச்சைத்தான் எல்லோரும் கேக்கணுமா? எனக்கும் அம்மாவுக்கும் வாங்கின பிறகு மீதியிருந்தால்...

**கமலி:** சரிதான்; அப்போ அடுத்த ஜன்மத்துக்குத்தான் எனக்குச் சித்தாடை கிடைக்கும்..... டேய் மணி, வாசலில் உங்க ஸ்கூல் தமிழ் வாத்தியார் கூப்பிடுகிறார்!

(மணி வாசலுக்குப் போய் விட்டு வருகிறான்.)



பெண்கள் கலாசாரக் கோஷ்டி......

**மணி:** ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே....

**கமலி:** இதென்னடா கூத்து? உனக்கும் எங்கிருந்தாவது அதிருஷ்டம் அடித்து விட்டதா?

**மணி:** ஆம் பெண்ணே, இனி இந்த மணி தீபாவளித் துணிக்காக ஒருவரிடமும் ஏங்கி நிற்க மாட்டான். இவனே ராஜா, இவனே சக்கரவர்த்தி. இவனே சுய தேவைப் பூர்த்தி செய்யப் போகும் அற்புதப் பிறவி. ஆனந்தம் ஆனந்தமே!

**கமலி:** டேய், போதும் உன் நாடகப் பேச்சு. ஏதுடா பணம்?

**மணி:** அதுவா சொல்கிறேன் கேள். கடன் கொடுத்த பணமும் அல்ல; சீட்டுக் கட்டி மொத்தமாக வந்த பணமும் அல்ல. இது உழைப்பின் மதிப்பிற்கான பணம்; உள்ளத்தில் ஆனந்த மூட்டும் பணம். இது பெருமை தரும் பணம்; இது....

**கமலி:** ராமா ராமா, இதையெல்லாம் யார் கேட்டது உன்னை? விஷயத்தைச் சொல்லாவிட்டால் போ!

**மணி:** எங்க ஸ்கூலிலே தமிழ்க் கட்டுரைப் போட்டி ஒன்று வைத்திருந்தார்கள். அதில் எனக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. அந்தப் பத்து ரூபாய்தான் இது. ஆனந்தம் ஆனந்....

**கமலி:** அப்படியானு எனக்குத் தான் ஒன்றும் கிடையாதா?

**மணி:** நீ பரிசு பெறுவதை நான் வேண்டாம் என்றேனு?

**கமலி:** எங்க ஸ்கூலில் போட்டியே கிடையாதே!

**மணி:** ஆமாம், உங்க ஸ்கூலில் அந்த டிராமா, அது இதுன்னு பணம் வாங்கிக்கத் தெரியும், பரிசு கொடுக்கத் தெரியாது.

**கமலி:** டேய், என் ஸ்கூலைப் பழித்தால் உதை விழும்!

**அம்மா:** ஏன், இப்படிச் சண்டை போடுகிறீர்கள்? எல்லாருடைய பணத்தையும் சேர்த்து ஏதாவது அட்ஜஸ்ட் செய்து கமலிக்கு ஒரு சீட்டி மேலாக்காவது வாங்கிட்டாப் போச்சு.


**கமலி:** ஐயே, உன் சீட்டி மேலாக்கு எனக்கு ஒன்றும் வேண்டாம், போ.

**மணி:** வெரி குட், தாங்க்ஸ்....

2

**அம்மா:** உங்க பணத்தை எடுத்துக் கொண்டு எழுந்திருங்கள்.

## ஆனையை இழுக்கும் மணி...



எங்கே அம்மா போறே? அழ ஆரம்பிச்சுட்டியா....:

உங்க டிரஸ் வாங்கினது போக மிச்சம் இருப்பதைப் புடைவைப் பணத்துடன் போடணும்!....எழுந்திருங்கோ, கடைக்குப் போகலாம்.

**அப்பா:** அட, ஏன் சைத்தான் மாதிரி கத்தறே! நான் இப்போ கடைக்கு வரமாட்டேன்.

**அம்மா:** அப்படின்னு, உத்தேசமா கணக்குப் பார்த்து மிச்சத்தைக்........

**அப்பா:** கொடுக்கிறேன், வா கன்னத்தில் இரண்டு. தீபாவளிக்கு ஒரு வேஷ்டி கூட என்னை வாங்கிக் கொள்ள விடமாட்டாய் போலிருக்கே!

**அம்மா:** நன்னுத்தான் இருக்கு! இந்தப் புது மாப்பிள்ளைக்குப் பட்டைக் கரை ஜரிகை வேஷ்டி இல்லாமெ குறைவாக இருக்கிறதோ?

**அப்பா:** ஷட் அப். நிலைமை தெரியாமெ பேச வந்துவிடாதே. உன்னுடைய பொறுமையினுலே தான் அவ்வளவு பணமும் போச்சு.

**அம்மா:** அச்சச்சோ! பணம் போயிடுத்தா? யாராவது பிக் பாக்கெட் அடித்து விட்டார்களா! அதுக்குத் தான் இந்த பாழாப் போன ஜிப்பாவை எவர் ஸில்வர் பாத்திரக்காரனுக்குக் கொடுங்கள் என்றேன்.

**அப்பா:** ராமா ராமா, பிக்குமில்லே; பாக்கெட்டுமில்லே. எங்க மானேஜர் மாற்றலாகிப் போகிருர்.


**அம்மா:** அவருக்கு மாற்றலானல் உங்க ரூபாயும் உங்க கையை விட்டு மாற்றலாகி விட்டதா?

**அப்பா:** ஆமாம் அதுவேதான். அவருக்கு ஒரு பார்ட்டி கொடுக்கணுமாம். பார்ட்டிக்கு 15 ரூபாய், போட்டோவுக்கு 5 ரூபாய், அவருக்குப் பிரசண்ட் செய்ய 5 ரூபாய். எல்லாம் போக மீதி ஒரு வேஷ்டிப் பணம்தான் இருக்கு.


**அம்மா:** அட ராமா, வருஷா வருஷம் ஒரு மானேஜர் மாற்றலாகிப் போனுல் அதுக்கு இப்படியா பார்ட்டியும் கீர்ட்டியும் ஏற்பாடு செய்வா?

**அப்பா:** சே சே, எல்லா மானேஜரையும் போல இவரையும் பேசாதே. ரொம்பத் தங்கமானவர். என்னை ஹெட் கிளார்க்காகப் போட எவ்வளவு சிபாரிசு செய்திருக்கிருர் தெரியுமா இவர்?

## ஆளேயும் சேர்த்து இழுக்கிருன்!



சரி; வந்து தொலே! அழாதே!



எங்கேயோ பாத்திண்டு வந்தா?

**கமலி:** ஏதோ சாக்குப் போக்குச் சொல்கிறீர்களே? உங்களோடு கடைக்கு வந்து நச்சரித்து நானும் ஒரு சித்தாடை வாங்கிக்கொள்ள ணும்னு இருந்தேன். கடைசியில் இவ்வளவுதானு!

**அம்மா:** இந்தத் தீபாவளி கழித்து பார்ட்டி வைத்துக்கொண் டால் என்னவாம்?

**அப்பா:** அவர் தீபாவளிக்கு மறு நாளே கிளம்பி விடுகிருரே? இரு, வாசலில் யாரோ ஒருவன் கூப்பிடு கிருன். யார் என்று கேட்டு வா.

**அம்மா:** லேடீஸ் கிளப் பியூன் வந்திருக்கிருனே! இருங்கள் வந்து விட்டேன்.

(வாசலுக்குச் சென்று ஒரு கடிதத்துடன் வருகிருள். பிறகு பியூனிடம் பணம் கொடுக்கிருள்.)

**கமலி:** என்னம்மா, அவனிடம் பணம் கொடுத்தாயே. அவனி டமே புடைவைக்கு ஆர்டர் கொடுத்து விட்டாயா? எனக்குச் சித்தாடை கிடையாதா!

**அம்மா:** மூடடி வாயை, உன் பொருமையினுல் எனக்குக் கிடைக்க இருந்ததும் போச்சு!

**கமலி:** ஏன், உங்கக் கிளப்பிலும் யாருக்காவது மாற்றலா?

**அம்மா:** மாற்றல் வந்தால்தான் தேவலையே! கண்டிப்பாக முடியாது என்றுக் கூறிவிடுவேனே. மணிப் பூர் கலாசார கோஷ்டி வந்திருக் கிறதாம். அதற்குப் பார்ட்டி கொடுக்க வேண்டுமாம். போட்டோ, டான்ஸ் எல்லாவற்றுக் கும் ஏற்பாடு செய்ய ரூபாய் இருபது வாங்கிக்கொண்டு விட்டார்கள்.

**கமலி:** உங்க லேடீஸ் கிளப் செக ரடரி சரியான ஆசாமிதான் போலிருக்கு. கறந்து வாங்கி விட்டாளே பணத்தை!

**அம்மா:** சே சே, எல்லோரையும் போல அவளையும் பேசிவிடாதே. என்னைத்தான் வரவேற்புக் கமிட்டி யின் தலைவியாகப் போட்டிருக் கிருள். அவள் எவ்வளவு பெரிய இடத்துச் சிநேகம் வாங்கித் தரு கிருள்...



ஆனந்தமே......

**அப்பா:** எங்க பார்ட்டி தீபாவளி கழித்து வைத்துக் கொள்ளக் கூடாதா என்ருயே. உங்க பார்ட் டிக்கு இப்போ என்ன அவசரமாம்?

**அம்மா:** அந்தக் கலாசாரக் கோஷ்டி இங்கே ஒரு நாள்தான் இருக்கிறதாம். தீபாவளி அன்று இரவே கிளம்பி விடுவார்களாம். எங்கள் கிளப்புக்கு மட்டும் விஸிட் கொடுக்க ஒப்புக் கொண்டார் களாம்.

**கமலி:** என்ன பார்ட்டியோ? அப்பா பணம் போச்சு, அம்மா பணம் போச்சு. இனிமே மணி பணம்தான் பாக்கி. அவன் எனக்குச் சல்லி கொடுக்க மாட்டான்..... அதோ. மணி வந்துவிட்டான்.

(மணி வருகிருன்.)

**அப்பா:** ஏண்டா மணி, ரூபாய் எங்கே? ஜம்முனு துரை மாதிரி சூட்டு வாங்கிக்கப் போறேன்னு சொன்னுயே?

**மணி:** போதுமே, உங்கள் வயிற் றெரிச்சல்தான் இப்படி ஆயிற்று!

**கமலி:** ஏண்டா, உன் பணமும் போயிடுத்தா? உனக்கு என்ன வந்துவிட்டது?

**மணி:** ஏ கமலி, கன்னு பின்னு வென்று பேசாதே. என் பணம் எப்பொழுதும் உபயோகமாகத் தான் போகும். எங்க தமிழ் வாத்தியாருக்குத் தீபாவளியன்று ஷஷ்டி அப்த பூர்த்தியாம். அதனுல் நாங்கள் ஸ்கூல் மாணவர்கள் அதை விமரிசையாகக் கொண்டாடத் தீர்மானித்து விட்டோம். அதனுல் ஆளுக்கு எட்டு ரூபாய் வழங்கி விட்டோம்.

**கமலி:** பூ இதுதானே! எல்லாருடைய பணமும் ஆனந்தமாக வந்தது. ஆனந்தமாகப் பறி போய் விட்டது. அம்மா, இதோ பார். அப்பா மீதிப் பணம், உன் மீதிப் பணம், மணியுடைய மீதிப் பணம் எல்லாமாகப் போட்டு எனக்கு ஜார்ஜெட் சித்தாடை வாங்கித் தந்து விடு. முழுசாக ஒன்று இருக்கும்.

**மணி:** அதுதான் முடியாது. அப்பாவுக்கு ஒரு வேஷ்டி, அம்மாவிற்கு ஒரு ரவிக்கை, எனக்கு ஒரு ஷர்ட். அத்துடன் பணம் காலி. உனக்கு ஒன்றும் கிடையாது.


**அம்மா:** அட ஏண்டா சத்தம் போடுகிறீர்கள்? இரு, வாசலில் ஏதோ வண்டிச் சத்தம்கேட்கிறதே! ....சரியாப் போச்சு, உங்க அத்தை தன் பெண், மாப்பிள்ளை, மற்றக் குழந்தைகள் எல்லோரையும் அழைத்து வருகிருள்....இந்தாங்க, மிச்சப் பணத்தையெல்லாம் போட்டு, இவர்களுக்குத் தீபாவளி விருந்தளிக்க மளிகைச் சாமான் வாங்க வேண்டியதுதான்.

**அத்தை:** (உள்ளே வந்து கொண்டே) தீபாவளிக்கு டில்லியிலிருந்து அதிசயமாய் பெண்ணும் மாப்பிள்ளையும் வந்துட்டா. இந்தச் சமயம் பார்த்து எனக்குப் புக்ககத்து உறவிலே ஒருவர் இறந்து விடவே எனக்குத் தீபாவளி இல்லை. அதனுலே இந்த வீட்டில் தீபாவளி கொண்டாட எல்லோரையும் அழைத்து வந்துவிட்டேன். அடீ கமலி!

**கமலி:** என்ன அத்தை?

**அத்தை:** நீ ரொம்ப நாளா ஜார்ஜெட் சித்தாடை கேட்டுக்கொண்டிருந்தாயே. நேற்று கடைக்குப் போன போது இதைப் பார்த்தேன். சட்டென உன் நினைவு வந்தது. இந்த வருஷம் எனக்குப் புடைவை வாங்கும் செலவில்லையாதலால், உனக்கு இந்தச் சித்தாடையை வாங்கி வந்துவிட்டேன். இந்தச் சித்தாடை, நன்னு யிருக்கான்னு பார்....

**கமலி:** (குதூகலத்துடன்) எனக்கா? சித்தாடை எனக்கா? ஜார்ஜெட் சித்தாடையா? டேய் மணி! ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே—பரமானந்தம் ஆனந்தம் ஆனந்தமே!



அத்தை, குடும்பத்தோடு வருகிருள்......



# வேலி

**வி.ஆர்.பாலன்**

சர்வேயர் சாமிநாதன் தன் கையில் விரித்து வைத்திருந்த நிலப்பிளானையும் எதிரே முள்வேலி அடைக்கப்பட்ட சிறு குட்டையையும் மாறி மாறிப் பார்த்தான். மறுகணமே அவன் பார்வையின் பொருளைப் புரிந்துகொண்ட கணக்குப்பிள்ளை கனகரத்தினம் மெல்லத் தம் தொண்டையைக் கனைத்துக்கொண்டார். ''சார்! இந்தக் குட்டையெல்லாம் பொன்னுரங்கத்தின் நிலத்தைச் சேர்ந்தது. அவர்தான் இந்த வட்டாரத்திலேயே பெரும் பணக்காரர். இந்த ஊரில் உள்ள நிலங்களில் பாதிக்கு மேல் அவருடையதுதான். இப்போது..'' என்று அவர் பேசிக்கொண்டு வந்தபோதே சாமிநாதன் குறுக்கிட்டான்.

''ஐயா, கனகரத்தினம்! இப்போது நான் பொன்னுரங்கத்தின் புராணத்தைக் கேட்க வரவில்லை. இதோ பாரும். சர்வே பிளானில் என்ன இருக்கிறது? எல்லைக் கல் நடப்பட்டிருப்பதற்கு அடையாளமாக எங்கே சிவப்புக் குறி இருக்கிறது? ஆனால் இதோ, எதிரில் பாரும்! குட்டையையும் சேர்த்து அல்லவா கல் நட்டு இருக்கிறது! பிளானின்படி இல்லையே!'' என்று கூறினான் சாமிநாதன். நேருக்கு நேர் பேசத் திறனில்லாத கணக்குப்பிள்ளை நமுட்டுச் சிரிப்பொன்றை மெல்ல உதிர்த்தார்.

முள்வேலிக்கு ஓரமாகப் போட்டிருந்த கல்லின் பக்கத்தில் கிராஸ் டாப்பை நட்டு மாரியுடன் சங்கிலி பிடித்து அளந்தான் சாமிநாதன். நிச்சயம் அந்தக் குட்டை பொன்னுரங்கத்தின் நிலத்தைச் சேர்ந்தது இல்லை. சர்க்கார் பிளானின்படி அந்தக் குட்டை சர்க்காருக்கே சொந்தம். புறம்போக்கு நிலத்தில் இருந்த குட்டையை எப்படி அந்தப் பொன்னுரங்கம் தமதாக்கிக்கொண்டு முள்வேலி அடைத்துக்கொள்வது?

''மாரி, இந்தக் கல்லைப் பிடுங்கி அங்கே நடு!'' என்று சாமிநாதன் கூறியபோது கணக்குப்பிள்ளை வாயடைத்து நின்றேவிட்டார். கடப்பாரையினால் கல்லைச் சுற்றிப் பள்ளம் பறித்த மாரி கொஞ்ச நேரத்தில் கல்லை நட்டு விட்டான். சாமிநாதன் கணக்குப்பிள்ளையைப் பார்த்தபடியே பேசினான். ''ஐயா, கணக்குப்பிள்ளை; இந்தக் குட்டை பொதுச் சொத்து. பொன்னுரங்கம் ஏன் தம் உடைமை ஆக்கிக்கொண்டு குட்டையைச் சுற்றி முள்வேலியைப் போட்டுக் கொள்ள வேண்டும்? உங்களுக்குத் தெரியாமல் அவர் முள்வேலி போட்டுக்கொண்டிருக்கமாட்டார். உடனடியாக நீங்கள் பொன்னுரங்கத்தினிடம் சென்று இந்த முள் வேலியைக் குட்டைக்கு அந்தப் பக்கத்தில் போட்டுக்கொள்ளச் சொல்லுங்கள்!''

'பொன்மேடு' கிராமத்தின் மிராசுதார் பொன்னுரங்கம் ஒரு

கஞ்சப் பேர்வழி. கல்நெஞ்சு படைத்த பொன்னுரங்கத்துக்கு பிறரைக் கஷ்டப்படுத்தி அதனல் லாபமும் மகிழ்ச்சியும் அடைவதே குறிக்கோள்.


ஊருக்கு மேற்கேயிருந்தது மிகப் பெரிய ஊருணி ஒன்று. அதுவும் பொன்னுரங்கத்தின் தரிசு நிலத்தை ஒட்டி. நிலக்கடலே மட்டுமே அந்த நிலத்தில் போட்டு வரும் பொன்னுரங்கத்துக்கு ஊரிலுள்ள குடியானவர்கள் தங்கள் மாடுகளே வெயில் நேரத்தில் தண்ணீர் குடிக்க அந்த ஊருணிக்குத் தம் நிலத்தின் வழியே அழைத்துச் செல்வது அருவருப்பாக இருந்தது. சில சமயம் மனிதர்களே தாகத்துக்கு அந்த ஊருணியில்தான் தண்ணீர் அருந்த வருவார்கள்.

பொறுத்துப் பார்த்த பொன்னுரங்கம் மனத்திலே உருவான திட்டத்தை மறுநாளே நடைமுறையில் கொண்டுவந்தார். கணக்குப்பிள்ளே கனகரத்தினத்தை அழைத்து இரண்டு பச்சை நோட்டுகளே அவர் கையில் திணித்துவிட்டுப் பேச ஆரம்பித்தார். ''கனரத்தினம்! ஊருக்கு வெளியே இருக்கும் என் நிலத்தைச் சுற்றி முள்வேலி போடப் போகிறேன். கூடவே அந்தக் குட்டையையும் சேர்த்துப் போட்டுக்கொள்ளுகிறேன். யாராவது கேட்டால் நான் சர்க்காரில் விலக்கு வாங்கிவிட்டதாகச் சொல்லிவிடுங்கள்!'' என்றபோது பதில் ஏதும் பேசாமல் தலேயை மட்டும் ஆட்டினுர் கனகரத்தினம். மறுநாளே பொன்னுரங்கத்தின் நிலத்தைச் சுற்றியிருந்த முள்வேலி இப்போது குட்டையையும் சேர்த்துக்கொண்டது.

கிராமத்திலிருந்த மற்றவர்களுக்கெல்லாம் இது ரொம்பவும் இடைஞ்சலாகவே இருந்தது. கணக்குப்பிள்ளேயிடம் எவ்வளவோ கேட்டும் பயனில்லே. பணப்பசையுடன் இருக்கும் பொன்னுரங்கத்திடம் பயம். அந்தச் சமயத்தில்தான் சர்வேயர் சாமிநாதன் 'பொன்மேடு' அளவைச் சரிபார்க்க வந்திருந்தான். இதற்கு முன் வந்த இரண்டொரு சர்வேயரும் பொன்னுரங்கத்தின் அபரிமிதமான உபசரிப்பில் மூழ்கிச் சும்மா இருந்துவிட்டனர். ஆனுல் சாமிநாதன்..

மற்றவர்களேப்போல அவனே எளிதில் மங்கிவிட முடியாது என்பதை நன்கு புரிந்துகொண்ட பொன்னுரங்கம் கணக்குப்பிள்ளே மூலம் அவரைச் சரிக்கட்டிவிடலாம் என்று இருந்தபோது சாமிநாதன் எவருடைய பேச்சையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் தன் கடமையைச் செவ்வனே செய்தான்.

மறுநாளே சில குடியானவர்களின் உதவி கொண்டு பொன்னுரங்கத்தின் வேலியைப் பிரித்து அந்தப் பக்கம் கல்லே நட்டுவிட்டான் சாமிநாதன். எல்லோரும் சாமிநாதனே மனமார வாழ்த்தினுலும் அவனுக்கு ஏதும் கெடுதல் நேரிடுமோ என்று பயப்படவும் செய்தனர். பொன்னுரங்கத்தின் பொல்லாத்தனம்தான் எட்டு ஊருக்குப் பிரசித்தமாயிற்றே!




**பையன்:** அப்பா, இந்தத் தடவை 5 ரூபாய்க்குப் பட்டாஸ் வாங்கணும்.

**அப்பா:** போடா, மண்டு. நான் கஷ்டப்பட்டுக் கரியைக் காசா அடிக்கிறேன். நீ காசைக் கரியா அடிக்கிறேன், என் கிருயே!


கிட்டத்தட்ட சாமிநாதனின் வேலை முடிந்துவிட்டது. அந்தக் கிராமத்தில் பழைய எல்லைக் கற்களையெல்லாம் பழுது பார்த்து விட்டான். கல் நடப்படாத இடங்களிலெல்லாம் சர்க்காரின் பிளான் படி அந்தந்த இடங்களில் புதிய கற்களை நட்டும் விட்டான். இனி மேலதிகாரி வந்து சரிபார்த்த பின் அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட வேண்டியதுதான்.

'பொன்மேடு' கிராமத்தின் வடக்கேயிருந்த அகன்ற ஏரிகரை மிகப் பெரியது. இரண்டு பக்கமும் பெரிய பெரிய மரங்களைக்கொண்டு இருக்கும் அதன் கரையின் மேல் நின்று ஏரியில் நிறைந்திருக்கும் தண்ணீரைப் பார்க்கும் எவனுக்கும் மனத்தில் உற்சாகமும் தெம்பும் ஏற்படாமல் இருக்காது.

எப்போதும் மாலை நேரத்தில் அந்த ஏரிக்கரையில் சிறிது நேரம் உலாவி விட்டு வராமலிருந்தால் சாமிநாதனுக்குத் தலைவலி வந்துவிடும். அன்றும் அப்படித்தான். மறுநாள் மேலதிகாரி வந்ததும் எல்லாம் பார்வையிட்டுக்கையெழுத்திட்டுவிட்டால் மதுரைக்குப் போகும்படி இருக்கும். அதனால் கடைசி முறையாக ஏரிகரையின் காற்றை முழுதும் அநுபவித்துவிடுவது என்று எண்ணிய சாமிநாதன் நன்கு இருட்டிய பின்னர்தான் வீட்டுக்குப் புறப்பட்டான். பனந்தோப்பைக் கடந்து ஒற்றையடிப்பாதையின் வழியே வந்துகொண்டிருந்தபோது-பக்கத்தில் இருந்த ஆலமரத்தின் அடியில் பதுங்கிக்கொண்டிருந்த ஓர் உருவம் குபீரென்று சாமிநாதனின் மேல் பாய்ந்தது. கையில் வைத்துக்கொண்டிருந்த இரும்புத் தடி சாமிநாதனின் தலையை நோக்கி ஓங்கியபோது—'ஐயோ!' என்ற சப்தம் அந்தத் தோப்பையே கிடுகிடுக்க வைத்தது.

கத்தியது சாமிநாதன் அல்ல. அவனை அடிக்க இரும்புத்தடியை ஓங்கிய அந்த உருவம்.

திடுக்கிட்ட சாமிநாதன் தன் பையில் இருந்த டார்ச்சை எடுத்துக் கீழே அடித்துப் பார்த்தபோது, பொன்னுரங்கம் புரண்டு புரண்டு துடியாக்த் துடித்தார். சற்று தள்ளி வேகமாக வளைந்து வளைந்து சென்ற பாம்பைக் கண்டதும் சாமிநாதனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. மறுவிநாடியே பொன்னுரங்கத்தின் காலில் ரத்தம் வந்த இடத்தில் வாயைவைத்து உறிஞ்சி, 'தூ'வென்று வெளியே துப்பினான். பக்கத்துக் கிராமத்துக்குச் சென்று அந்த வழியே வந்தவர்களின் உதவியால் பொன்னுரங்கத்தை அவர் வீட்டில் கொண்டு சேர்த்தான். உடனடியாக நாட்டு வைத்தியர் வந்து பச்சிலை வைத்துக் கட்டினார்.




பொன்னுரங்கத்தின் உடலில் விஷம் ஏறவில்லை.

மறுநாள் மேலதிகாரி வந்து பார்வையிட்டுவிட்டு திருமதியுடன் சென்றுவிட்டார். பொன்னுரங்கம்

சுய நினைவு வந்ததும் எழுந்து சாமிநாதனைக் காண ஓடோடி வந்தார். ஆனால் சாமிநாதனின் அறை காலியாக இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். பக்கத்திலிருந்தவர்களை விசாரித்தபோது சாமிநாதன் மேலதிகாரியுடனேயே சென்றுவிட்டான் என்று தெரிந்தது. அவன் பெருந்தன்மையை நினைத்துக் கண்ணீர் உகுத்தார் அவர். சாமிநாதன் இல்லாமலிருந்திருந்தால் தான் இறந்திருக்கவேண்டியதுதான் - தான் இறந்த பின் அவருடன் இவ்வளவு நாள் அரும்பாடு பட்டு பிறரைத் துன்பப்படுத்திச் சேர்த்த பணமும்-நிலமும் துணையாகப் போகிறதா என்று எண்ணிய பொன்னுரங்கத்துக்கு அதற்குமேல் அங்கே நிற்க விருப்பவில்லை. மறுநாளே தன்னிடமிருந்த தானியங்களையெல்லாம் ஊரிலுள்ளோரைக் கூப்பிட்டுக் கொடுத்தபோது எல்லோரும் வியந்தனர். 'நிலமில்லாத யாரும் என் நிலத்தை உழுது பயிராக்கிக் கொள்ளலாம்!' என்று கூறிய பொன்னுரங்கத்தைப் பார்த்து ஏழைக் குடியானவர்கள் கையெடுத்துக் கும்பிட்டார்கள். பொன்னுரங்கம் தம் மனத்திற்குள்ளேயே சாமிநாதனை வாழ்த்தினர்.



# ராமு துப்பறிந்தான்!



ஸி.எஸ். விஜயா

''என்ன ஸார், இவ்வளவு பெரிய கேஸை ஒரு பத்து வயதுப் பையன் கண்டுபிடித்தானாமே! ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது!'' – ஊரெங்கும் இதே பேச்சுத்தான்.

ஆம், பத்து வயதுப் பையன் இந்தக் கேஸைக் கண்டுபிடித்ததும், கண்டுபிடித்த விதமும் ஆச்சரியமேதான்.

ராமு ஒரு நாள் ஊருக்குத் தன் அத்தை வீட்டிற்குச் சென்றான். அது ஒரு பட்டிக்காடு. ராமு இருந்த பட்டணத்துக்குச் சில மைல்கள் அப்பால் இருந்தது அது. அந்த ஊரில் பத்தே வீடுகள்தான் இருந்தன: அதில் பாதிக்குமேல் பாழடைந்த வீடுகள். ராமுவின் அத்தை வீடும் அதற்குப் பக்கத்தில் மூன்று வீடுகளும்தான் குடியிருந்த வீடுகள். வீடுகள் எல்லாம் பழைய காலத்து வீடுகள். நடுவில் முற்றமும் நாலாபுறமும் ஓடு போட்ட தாழ்வாரமும் கொண்டது ஒவ்வொரு வீடும். அடுத்த வீட்டை ஒட்டினாற்போல் இருந்தது. இடையே ஒவ்வொரு சுவர் வீடுகளைத் தடுத்துப் பிரித்தது. வீடுகளுக்குப் பின்புறம் ராமுவின் அத்தைக்குச் சொந்தமான தென்னந்தோப்பு இருந்தது.

ராமுவை அங்கே ஒரு வாரம் இருந்துவிட்டுப் போகும்படி அவன் அத்தை கேட்டுக்கொண்டதால் அவனும் அங்கே தங்கினான். பொழுதே போகாததால் வீட்டின் பின்புறமுள்ள தென்னை மரங்களில் ஏறுவதும் இறங்குவதும் அந்த வீடுகளைச் சுற்றி வருவதுமாகப் பொழுதைக் கழித்தான். ''வேண்டாமடா, மரத்தின்மேல் ஏறி, கைகால் முறிந்து விடப்போகிறது'' என்று அத்தை எச்சரிக்கை செய்வாள். ஆனால் ராமு அதைச் சட்டை செய்யவே இல்லை. தினம் அந்தப் பட்டிக்காட்டைப் பத்துத் தடவையாவது சுற்றி வருவான். இப்படிச் சுற்றிவரும்போது, தினம் அவன் கண்ட ஒரு சம்பவம் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

அத்தை வீட்டை ஒட்டினாற்போல் இருந்த பக்கத்து வீட்டில் நான்கு ஆண்பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் தினம் காலையில் வெளியே செல்வதும் மாலையில் திரும்பும்போது ஆளுக்கு இரண்டு பூசனிக்காய்களை எடுத்து வருவதுமாக இருந்தனர். ராமுவுக்கு இது வேடிக்கையாக இருந்தது.

'பூசனிக் காய்களைத் தினம் இப்படிக் கொண்டுவந்து சேர்க்கிறார்களே, இவர்களுக்குப் பைத்தியமா? அவைகளை வைத்து வியாபாரம் செய்வதாயும் தோன்றவில்லையே!" என்று யோசனை செய்தான் ராமு.

ஒரு நாள் இரவு அவனும் அவனுடைய அத்தையும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பக்கத்து வீட்டிற்கும் இந்த வீட்டிற்கும் நடுவில் நின்ற சுவர்மேல் 'கட புட' வென்று சப்தம் கேட்டது. அதை அடுத்து ஒரு பூசனிக்காயும் உருண்டு கீழே விழுந்து உடைந்தது. பின்னோடு ஒரு பூனை குதித்தது. எலியைப் பிடிக்கும் கெடுபிடியில் பூனை பூசனிக்காய் மேல் ஏறி யிருக்கிறது. மழை பெய்து, அதோடு மிகவும் பழையதாகி வெடித்து விட்டிருந்த சுவர் இடிந்து அந்தக் காய் உருண்டு இவர்கள் வீட்டினுள் வந்து விழுந்து உடைந்திருக்கிறது.

அத்தைக்குப் பயம் வந்துவிட்டது. ''ஐயோ, யாரோ திருஷ்டி கழித்துப் பூசனிக்காயை இங்கே போட்டு விட்டார்கள். அதன் அருகில் பேகாதேடா ராமு'' என்று நடுங்கினாள் அவள். ஆனால் அவள் ஏதும் சொல்லும் முன்பே ராமு அதனருகில் இருந்தான்.

அங்கே கண்ட காட்சி அவன் கண்களைக் கூசச் செய்தன. ஏன்? அங்கே பூசனிக்காயினுள்ளிருந்து பள பள வென்று மின்னும் நகைகள் இறைந்து கிடந்தன!

ராமுவுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. ரகசியமாக, ''அத்தை இப்போது ஒன்றும் பேசாதே.... அது கழிப்புக் காய் இல்லை. அதனுள் இருந்த இவைகளையெல்லாம் பார்'' என்று கூறி நகைகளைக் காண்பித்தான். அத்தைக்கு ஆச்சரியமும் பயமும் ஒருங்கே சேர்ந்தன. பிறகு, ''இதோ வந்துவிட்டேன் அத்தை'' என்று வேகமாக வெளியே ஓடினான்.


நன்றாக இருட்டிவிட்ட போதிலும் மங்கலான நிலவொளி இருந்தது. நேராகப் பக்கத்து வீட்டுக்குப் பின்புறமிருந்த தென்னை மரத்தின் மேல் ஏறிக்கொண்டான் ராமு.

அங்கிருந்து பார்த்தால் பக்கத்து வீட்டின் முற்றமும் எதிரே தாழ்வாரமும் நன்றாகத் தெரியும். அங்கேயே உட்கார்ந்து கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான் ராமு.

அந்த நால்வரும் வீட்டினுள் வந்து ஹரிக்கேன் விளக்கை ஏற்றினார்கள். வழக்கம்போல் அன்றும் பூசனிக்காய்களைக் கொண்டு வந்திருந்தனர். அவைகளைத் தாழ்வாரத்தில் பரண்மேல் வைத்தனர். அப்படி வைக்கும்போது அங்கே நிறையப் பூசனிக்காய்கள் இருப்பதைக் கண்டான் ராமு.

பிறகு அந்த நால்வரும் முற்றத்தில் உட்கார்ந்து ஏதோ அரட்டை அடித்துக்கொண்டு சாப்பிட்டனர். பொறுமையுடன் காத்திருந்தான் ராமு. அவர்கள் சாப்பிட்டானதும் இரு பூசனிக்காய்களைக் கொண்டுவந்து விளக்கெதிரில் வைத்தனர். மூடிபோல் வெட்டப்பட்டிருந்த காயின் மேல்பாகத்தை எடுத்துவிட்டு, காயைக் கொட்டினால் அதிலும் அத்தனையும் நகைகள்!

அவர்கள் வெளியில் சென்ற பின் ராமு கீழே இறங்கி வந்தான். மெள்ள அத்தை யிடம் வந்து விஷயத்தைச் சொன்னான். அவள் நடுங்கி விட்டாள்.




**அப்பா:** வீட்டுக்குள்ளே யார் 'ஆடம் பாம்' வெடிக்கிறது?

**பையன்:** 'பாம்' இல்லேப்பா! தாத்தாவின் தும்மல் அது!



ராமு, "எப்படி அத்தை இவ்வளவு நாள் இங்கு இருந்தாய்? நாம் நாளைக் காலையே பட்டணம் போகவேண்டும்" என்று சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலை பெட்டியில் அவர்கள் வீட்டில் விழுந்த பூசணிக்காய், நகைகள் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொண்டு இருவரும் பட்டணம் போனார்கள்.

ஊருக்குப் போனதும் போகாததுமாக ராமு தன் தந்தையிடம் விஷயங்களைச் சொல்லி, பெட்டியைக் காண்பித்தான். அவர் உடனே போலீஸுக்குச் சொன்னார்.

போலீஸார் ராமுவைச் சூழ்ந்துகொண்டு பல கேள்விகள் கேட்டனர். எல்லாவற்றிற்கும் விவரமாய் விடை அளித்தான் அவன்.

அப்போதே போலீஸார் பட்டிக்காட்டானைப் போல் மாறுவேஷம் தரித்து ஜீப்பில் ராமுவுடன் அந்த ஊருக்குச் சென்றனர். ஜீப்பை ஊருக்கு வெளியே சற்றுத் தூரத்திலேயே ஒரு புதருக்குப் பின் காணாமல் மறைத்து நிறுத்திவிட்டு நடந்தனர்.

ராமு அந்தத் திருடர்கள் வழக்கமாக வரும் வழியைக் காண்பித்தான். போலீஸார் அந்தப் பாதை ஓரமாக உட்கார்ந்திருந்தனர். வெகு நேரம் காத்திருந்தபின்

ராமு கூறியதுபோல் ஆளுக்கு இரு பூசனிக்காய்களைக் கையில் எடுத்து கொண்டு அவர்கள் வந்தனர்.

பட்டிக்காட்டானைப்போல் வேஷம் தரித்த போலீஸ்காரன் ஒருவன், ''என்னப்பா விலை, காய் ஒண்ணு?'' என்றான்.

''இது குடுக்கறதுக்கில்லேப்பா!'' என்றான் திருடர்களில் ஒருவன்.

''பின்னே, இவ்வளவு பூசனிக் காய்களை எடுத்துப்போய் என்ன செய்வீங்க?'' என்றான் போலீஸ் காரன்.


''உனக்குத் தெரிஞ்சுதான் ஆக ணுமோ?....சும்மா வேலையைப் பார்த்துக்கொண்டு போ, ஐயா'' என்று சொல்லியவாறே நடந்து போய்விட்டார்கள் அவர்கள்.


சற்று இருட்டியபின் ராமு வழி காட்ட, போலீஸ்காரர்கள் மெள்ளப் பதுங்கிப் பதுங்கி, திருடர்களின் வீட்டுப் பின்புறம் சென்றனர். ராமு ஜாடை காட்டினான். அவர்களும் புரிந்துகொண்டு ஆளுக்கொரு தென்னைமரத்தில் ஏறி, திருடர்களின் வீட்டைப் பார்த்தனர்.

அங்கே ராமு வர்ணித்தது போலவே, முன்போலவே சாப்பிட்ட பிறகு பூசனிக்காய்கள் இரண்டை எடுத்துத் திறந்தனர். நகைகளை அதனுள்ளிருந்து எடுக்கும்போது ஒருவன், ''ஏய், இன்று காய் விலை கேட்டானே, அவனைப்பற்றி எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. நம் குட்டு ஏதேனும் வெளிப்பட்டு விட்டதோ என்னமோ!'' என்றான் ஒருவன்.

''ஊம்..எவனுக்குத் தெரியும்? நீ சும்மா இருப்பா!'' என்றான் மற்றொருவன்.

''எதுக்கும் காய்களை ஒரு முறை எண்ணிவிடுவோம்'' என்று காய்களை எண்ணிப்பார்த்தனர். அப்போதுதான் சுவரில் ஓட்டை இருப்பதையும், ஒரு காய் குறைவதையும் பார்த்துத் திடுக்கிட்டனர்.






இதற்குள் போலீஸார் மரத்திலிருந்து கீழே இறங்கி வீட்டைச் சுற்றி நின்றுகொண்டனர். திருடர்கள் வாக்குவாதம் செய்தவாறே வெளியே வந்தனர். போலீசார் 'கப்'பென்று பாய்ந்து ஆளுக்கொருவராகத் திருடர்களைப் பிடித்தனர்.

ஒருவன் போலீஸ் விஸில் ஊதினான். உடனே ஜீப் வந்துவிட்டது. திருடர்களை விலங்கிட்டு, வீட்டினுள் சென்று சுமார் முப்பது பூசனிக்காய்களை வெளியே எடுத்து வந்து ஜீப்பில் வைத்தனர்.

''திருட்டு நாய்களா! எவ்வளவு நாளாக இந்தக் காரியம் செய்கிறீர்கள்? யாருக்கும் தெரியாது என்று நீங்கள் செய்து வந்த திருட்டை, இதோ, இந்தக் குழந்தை காட்டிக்கொடுத்தான்'' என்று ராமுவின் முதுகில் ஒரு ஷொட்டு வைத்தார் இன்ஸ்பெக்டர்.


திருடர்கள் ராமுவைப் பார்த்துத் திடுக்கிட்டனர். ''பக்கத்து வீட்டிற்கு வந்த அந்தச் சிறு பையன் நம்மை என்ன செய்துவிடுவான்?'' என்று அலட்சியமாக அல்லவா இருந்தனர் அவர்கள்! நறநறவென்று பல்லைக் கடித்துக்கொள்வதைத் தவிர வேறு என்ன முடியும் அவர்களால்?

இன்ஸ்பெக்டர் ராமுவை மடி மீது உட்காரவைத்துக்கொண்டார். ஜீப் பட்டணத்துக்குப் பறந்தது.

மறுநாள் காய்களிலிருந்த நகைகளைப் பட்டியல் எடுத்ததில் பட்டணத்தில் களவுபோன முக்கால் வாசிப் பொருள்களும் கிடைத்துவிட்டதாகத் தெரிந்தது. போலீஸார் ராமுவை மிகவும் பாராட்டி அவனுக்குப் பரிசும் வழங்கினர்.

பத்திரிகைகளில் எல்லாம் ராமுவுடைய பிரதாபத்தையே வரிந்து தள்ளியிருந்தன. ஊரெங்கும் ராமுவைப் பற்றிய பேச்சேதான். அவன் தந்தை பெருமிதத்தில் ஆழ்ந்தார். தாயும் அத்தையும் 'குழந்தைக்குத் திருஷ்டி தாக்கும்' என்று ஒரு பூசனிக்காயையே வாங்கி வரச்சொல்லி அவனுக்குத் திருஷ்டி கழித்தார்கள்.

காயை உடைக்கும்போது, ''மெள்ளப் பார்த்து உடையுங்கள்; அதிலும் ஏதாவது நகை இருக்கப் போகிறது'' என்று சிரித்தான் ராமு குறும்பாக.



# கிளி சர்க்கஸ்















1. சொன்னபடி கேட்கும் சொர்ணக் கிளி.
2. ஆங்கில எழுத்துக்களைப் பொறுக்கி எடுத்து முழுப் பெயரையும் மாட்டுகிறது.
3. சர்க்கஸ் பார் வேலைகள் செய்து வளையத்தில் புகுந்து வருகிறது கிளி.
4. ஏணிப்படிகளில் நம்மால் தலைகீழாக இறங்கி வர முடியுமா? கிளி இதோ வளைந்து வளைந்து வரு கிறது.

போட்டோ:
**என். ராமகிருஷ்ணு**





5. வெடி மருந்து திணித்த பீரங்கியைப் பயமின்றி வெடிக்கிறது.

6. பெட்டியிலுள்ள காசைத் திருடுகிறது.


7. அதற்காக மாவு அறைக்கும் தண்டனை. எந்திரத்தில் மாவு அறைக்கிறது.

8. ரிப்பேர் ஆன காரைத் தள்ளிச் செல்கிறது.


ஓ, கழித்தல் கணக்கா?
இது என்ன பிரமாதம்!




மூன்றில் ஏழு போகாது.
ஒன்றைக் கடன் வாங்கி
னால் பதின்மூன்று.
பதின்மூன்றில் ஏழு
போனால் ஆறு. இதோ
ஆறு!



பாக்கி நாலு. நாலில்
இரண்டு போனால்
இரண்டு. இந்த விடை
சரிதானா? எப்படி இந்தச்
சமர்த்துக் கிளி!






1

[முத்தப்பன் வீடு. முத்தப்பன்: முத்தப்பன் மனைவி.]

மு. ம: என்னாங்க, இன்னிக்கு அரமனைக்குப் போகல்லையா?

மு. பச்சையம்மா. இன்னிக்கு விடுமுறை வாங்கிட்டு வந்தேன்.

மு. ம: அது எப்படி அடிக்கடி குடுப்பாங்க விடுமுறை?

மு: தகுந்த காரணம் காட்டினா, தன்னாலே குடுக்கறாங்க.

மு. ம: இன்னிக்குக் காட்டின காரணம் என்ன?

மு: பாட்டி பூட்டாங்கன்னு!

மு. ம: முந்தி?

மு: அப்பவும் பாட்டிதான்!

மு. ம: அடியாத்தே! எத்தனை பாட்டி உங்களுக்கு?

மு: எத்தனை வேணும் உனக்கு? முந்தி போனது பெரிய பாட்டி; அப்புறம் அத்தைப் பாட்டி; பின்னாலே சொந்தப் பாட்டி. இப்போ கண்ணை மூடினது சின்னப் பாட்டி!

மு. ம: அடியாத்தே! இப்படிப் பச்சையாப் புளுகலாமா? மாட்டிக்கிட்டா, என்ன செய்விங்க?

மு: பச்சையம்மா! இதுக்கெல்லாம் பயந்தா, ஒண்ணுமே நடக்காது இந்த உலகத்திலே.

மு. ம: எல்லாம் கேடு காலத்துக்குத்தான்.

மு: பச்சையம்மா, உனக்கு உலகம் தெரியாது. நியாயம் நின்று கொடுக்கும்; அநியாயம் அன்றே கொடுக்கும்!

மு. ம: இந்தாங்க, கொட்டிக் கொட்டி அளந்தாலும் குருணி பதக்காகுமா? கெட்டிக்காரன் புளுகு, எட்டு நாளையிலே வெளியாகும். ஜாக்கிரதை!

மு: அப்படி எண்ணாதே, பச்சை! புது நாள் வந்தாச்சு; புது வழி கண்டாச்சு! அந்த வழியிலே போய், பணத்தைச் சும்மா குவிச்சுத் தள்ளிடறேன், பாரு. இதிலே உன் ஒத்தாசை இருக்குமா?

மு. ம: இல்லாமே வேறெ வழி? பேய்க்கு வாழ்க்கைப்பட்டா, புளிய மரத்திலே ஏறித்தானே ஆகணும்!

மு: அப்படிச் சொல்லு, ராணி! ......நான் அடிக்கடி விடுமுறை எடுத்துக்கிட்டு வருவேன், புரியுதா?

மு. ம: உம்..?

மு: வீட்டுக்குள்ளேயே பதுங்கி இருப்பேன்.

மு. ம: இருந்தா?

மு: வழி சொல்லித் தர்றேன். இன்னிக்கு ராவுலே நடிச்சுக் காட்டறேன்; அதைப் பார்த்துக்கோ!

மு. ம: ஆகட்டும், அப்படியே செய்யறேன்.

2

[மளிகைக் கடை. நல்லப்பன்: முத்தப்பன் மனைவி.]

ந: என்னாது, நீங்க புறப்பட்டு வந்தது கடைக்கு?

மு. ம: (பெருமூச்சு விட்டு) வரும்படியா இருக்கு! என்ன செய்யறது?

ந: அடாடா!..என்னம்மா கண்ணிலே அருவி கொட்டுது! ஏன், வீட்டுக்காரர் எங்கே?

மு. ம: ஏதோ தவறு பண்ணிட்டாருன்னு அவரைச் சிறையிலே பிடிச்சுப் போட்டிருக்கார் ராஜா. சாப்பாட்டுக்கே வழி இல்லை. என்ன

செய்வேன்? அதனாலே தெரிஞ்சவங்களைப் பார்த்து ஏதாவது......

**ந:** பாவம், முத்தப்பன் நல்ல வனுச்சே. இப்படியா வந்து சேரணும் அவருக்கு? நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. என்னாலான உதவி செய்யக் காத்திருக்கேன். என்ன வேணும் சொல்லுங்க.

**மு. ம:** ஏதோ நீங்க பெரிய மனசு பண்ணிக் குடுத்தது, போதும்.

**ந:** டேய் மருதை! இவங்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, எண்ணெய், மிளகாய் எல்லாம் குடுத்து அனுப்பு....நீங்க போய் வாங்கிட்டுப் போங்கம்மா.

**மு. ம:** உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு.

### 3

[முத்தப்பன் வீடு. முத்தப்பன்: அவன் மனைவி.]

**மு:** சபாஷ், பச்சையம்மா, சபாஷ்!..நிறையக் கொண்டு வந்திருக்கியே. இன்னிக்கு மளிகை நல்லப்பன் கடையாச்சு. நேத்து துணிக்கடை துரைசாமி ஆச்சு. அதுக்கு முந்தி பாத்திரக் கடை ஆச்சு. நகைக் கடை ஆச்சு; நாளை வேறொரு கடை; மறுநாள், புது எடம்! புதிய பொய்! நமக்குத் தெரிஞ்ச கடை ஒண்ணும் பாக்கி விடாதே.


**மு. ம:** எல்லாருமே அப்படிக் கொடுப்பாங்களா?

**மு:** பச்சையம்மா, பதறாதே. நம் பிக்கையைத் தளரவிடாதே. எல்லாரும் தருவாங்க, கட்டாயம். போய் நின்னு, கண்ணைக் கசக்கு; மூக்கைச் சிந்து. குரலைக் கம்மலாக்கு; தள்ளாடிப் பேசு; இரங்காதவர் இருக்க முடியாது. பெண் என்றால் பேயும் இரங்கும், பாரு. இப்படியே யார் கண்ணிலேயும் படாமெ, காரியத்தைக் கவனிச்சுக்கிட்டே போனா, செலவு மிச்சம்!

### 4

[தெரு. சோலை: மாணிக்கம்: சின்னத்தம்பி: பெரியசாமி.]

**சோ:** பாத்தீங்களா, மாணிக்கம்! முத்தப்பன் ஏதோ சின்னத் தப்புச் செய்திட்டான். இதுக்குப் போய்




"எங்கே, தங்கள் அனல் கக்கும் வசனங்களைக் கொஞ்சம் சொல்லுங்களேன்!

"இப்போ எதுக்கையா?"

"சிகரெட் அணைஞ்சு போச்சு. பத்த வைக்கணும்!"

---

ராஜா அவனைப் பிடித்துச் சிறையிலே போட்டிருக்காரே!

**மா:** பாவம்! அவன் பெண்சாதி பச்சையம்மா, கண்ணீர் விட்டு அழுதாள். எனக்கு மனசு இளகிப் போச்சு! வேண்டிய சாமானைக் கொடுத்தனுப்பினேன். வேறே என்ன பண்றது?

**சோ:** எப்பக் கொடுத்தீங்க?

**மா:** நேத்துத்தான்.

**சி:** நான் நாலு நாள் முந்தி கொடுத்தேன்.

**பெ:** (வந்துகொண்டே) என்ன முத்தப்பன் சமாசாரம் தானே? நானும் அப்படித்தான் நினைச்சு, உதவி பண்ணினேன், ஆனா, அவ்வளவும் வெளிவேஷம்னு. இப்போ தெரியவருது.

**மா:** (ஆச்சரியத்துடன்) அது என்னங்க, புது விஷயமா இருக்கு!

**பெ:** ஆமா, மாணிக்கம்! ரெண்டு நாள் முந்தி, அவன் தலையிலே துணியைப் போட்டுக்கிட்டு, மறைஞ்சு, வீட்டுக்குள்ளே போனமாதிரி இருந்தது!

**சி:** சே..அப்படி இருக்காது, பெரியசாமி. அவன் பெண்சாதி, நேத்துத்தானே அழுதது.

**பெ:** நான் மட்டுமில்லே, சின்னத் தம்பி, இன்னொரு ஆள் கூட,

அவனைக் கண்டதாகச் சொல்லுது.

**சோ:** இருக்காது பெரியசாமி!

**பெ:** நானும் அப்படித்தான் சந்தேகப்பட்டேன். பிற்பாடு அரண்மனையிலேகூட போய் விசாரிச்சேன். முத்தப்பனை அங்கே யாரும் கைது செய்யலையாம்.

**சி:** அட பாவிப் பயலே! எதுக்காக இவ்வளவு பித்தலாட்டம்?

**பெ:** எதுக்கு? எல்லாம் வெள்ளையப்பனைச் சேர்க்கத்தான்!

**மா:** ஆமா! ஆமா!

## 5

[முத்தப்பன் வீடு. முத்தப்பன். முத்தப்பன் மனைவி].

**மு:** பச்சையம்மா, இனிமே நீ கடைத்தெருப் பக்கம் போகாதே. எல்லாரும் முழிச்சுக்கிட்டாங்க!

**மு. ம:** இனிமே என்ன செய்ய?

**மு:** கொஞ்ச நாளைக்கு யோக்கியமா இருக்கலாமா?

**மு. ம:** நல்லாச் சொன்னிங்களே ஒரு வார்த்தை! இனிமே அதெல்லாம் நடக்காது. இந்த வழியிலே பழகின பிறகு, வேறெ வழி....


**மு:** வழி இருக்கு, பச்சை! இதுவரையிலே சிநேகிதர்களைச் சுரண்டியாச்சு. இனிப் புறப்படு, சொந்தக்காரர்களை நோக்கி!

**மு. ம:** அவங்க முன்னலேபோய், அழவா சொல்றீங்க?

**மு:** எல்லாம் வெறும் பாசாங்கு தானே, பச்சை. நம்ம காரியம்







நடக்க, ஒரு நடிப்பு; அவ்வளவு தானே! சும்மா குஷியா அழுதுட்டு வா! கிடைச்சது கிடைக்கட்டும்! கிளம்பு, பச்சை! பொழுதைப் பொன்னுக்கு!

## 6

[பஞ்சவர்ணம் வீடு. பஞ்ச வர்ணம்: மங்காத்தா.]

ப: கேட்டியா மங்காத்தா!

ம: ஆமா, பஞ்சவர்ணம்! நானும் கேள்விப்பட்டேன். முத்தப்பன் சிறையிலே கிடக்குதாமே.

ப: முந்தா நாளு, அவன் பெண் சாதி வந்து, ஒரு குரல் அழுதாள். சோத்துக்கு இல்லே, உடுத்த இல்லே, அப்படின்னு கண்ணீர் வடிச்சாள். கண்ருவியா இருந்தது.

ம: என்ன கொடுத்திங்க, பஞ்ச வர்ணம்?

ப: ஏதோ என்னுலே ஏண்ட தைக் கொடுத்தேன்.

ம: அது சரி. நானும் அப்படித் தான்!

ப: ஆமா. போகட்டும்; செய்த வரையிலே சரி. இனிமே நம்மைத் தேடி வந்தா, கையை விரிக்கிறேம். முடிஞ்சவரையிலே செய்தாச்சு. என்ன?



ம: ஆமா, ஆமா!

7

[முத்தப்பன் வீடு. முத்தப்பன். அவன் மனைவி.]

மு. ம: என்னுங்க, இனிமே சொந்தக்காரங்களை நாட வழி இல்லே; இனி அந்த மாடு கறக்காது. யாருமே பாக்கி இல்லே.

மு: இன்னுள் வரையிலே காத்திருப்பேனு பச்சை? எல்லாம் முடிவு பண்ணி, வேலே ஆரம்பம் ஆயிட்டுது. (அதுகாறும் போர்வைக்குள் இருந்த கையை வெளியே எடுத்துக் காட்டி) பார், பச்சை! கையிலே என்ன இருக்கு?

மு. ம: (வியப்புடன்) அட வெள்ளித்தட்டு! ஏது, எப்படி வந்தது?

மு: வெள்ளித் தட்டுக்குக் கால் ஏது, பச்சை? அப்படியே இருந்தாலும், கூப்பிட்டா அது தன்னுலே வருமா? வராது.

மு. ம: பின்னே எப்படி?

மு: கண்ணு அதைப் பாத்தது! கை, அதை எடுத்துக்கிட்டு வந்தது! இன்னிக்கு வெள்ளித்தட்டு; நாளை தங்கத்தட்டு!

மு. ம: அட பாவி! திருடிக்கிட்டா வந்தே? வினையிலே வந்து முடியப் போகுது.

மு: அட சே, நடுங்காதே, பச்சை! அரண்மனையிலே இதைப் போல எத்தனேயோ கிடக்குது; அரமணையிலே இருக்கறதை, இங்கே நம்ம வீட்டுலே கொண்டு வந்து வச்சிக்கிட்டோம். அவ்வளவு தானே? இதுவா திருட்டு?

மு. ம: இது வினையிலே வந்து முடியாதா?

மு. அதுக்கு வழி இருக்கு, பச்சை. வந்த சாமான் எல்லாம், இங்கேயே தங்காது. ஒவ்வொன்ருகக் கடைக்கும் போகும்; பணமா மாறி வரும், புரியுதா?

8

[பாத்திரக்கடை. கோவிந்தன். முத்தப்பன்.]

கோ: (வெள்ளித் தட்டைக் கண்டு ஆச்சரியமடைந்து) இது யாருடைய தட்டு? உங்க தட்டு மாதிரித் தெரியலேயே!

மு: நம்ம வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்திருக்கு. அவருடைய தட்டு இது.

கோ: (கவனியாதவாறு) இது அவருடைய தட்டுதானு? நிச்சயமாத் தெரியுமா? அவர் பேர் என்ன?

மு: பேர் எதுவா இருந்தா என்ன? பொருள் இருக்கு; மனம் இருந்தா, எடுங்க.

கோ: இது உங்கள் தட்டுன்னு உறுதியாச் சொல்ல முடியுமா?

மு: இது என் தட்டேதான்.

கோ: ஏது உங்களுக்கு இந்தத் தட்டு? பேரு பொறிச்சிருக்கே!

மு: (வியப்பைச் சமாளித்து) பேரு தானே? ஆமா. பொறிச்சு இருக்கும்.

கோ: யாருடைய பேர், தெரியுமா? இதோ பார்! உள்ளே விளிம்பிலே, ராஜா பேர் பொறிச்சு இருக்கு!

மு: ஆமா. எனக்குப் பரிசு கிடைச்சுது?

கோ: சரி, பாக்கறேன். இப்படியே குந்தியிரு! அரண்மனைக்கு ஆள் போயிருக்கு. அங்கே இது போல தட்டுக, நகை நட்டுக எல்லாம், திருட்டுப் போயிருக்காம். எல்லாக் கடைக்கும் ரகசியமாத் தகவல் வந்திருக்கு. கொஞ்சம் பொறுத்திரு. அரண்மனை ஆள் வந்து பார்க்கட்டும். எல்லாம் வெட்ட வெளிச்சமாகுது.

மு: இந்தாய்யா! என்ன வெளிச்சமாகப் போகுது? இந்தத் தட்டுக்காக, நான் காத்திருக்கப் போறதில்லே. நீயே வச்சிரு. சாயங்காலம் வந்து பாக்கறேன்.

கோ: ஏய் எங்கே மெள்ள நழுவறே?....பிடி ஐயா அவனை.. விடாதே.

('பிடி விடாதே! திருட்டுப் பயல்!' என்ற குரல்கள்).

9

[அரண்மனை விசாரணை மண்டபம்].

அ: முத்தப்பா, அடே துரோகி! இந்த அரண்மனையிலேயே இருந்து

கொண்டு, இவ்வளவு துணிச்சலாகக் கொள்ளையடிப்பாய் என்று எதிர்பார்க்கவே இல்லை.

மு: அது எப்படி முடியும் மகாராசா? எனக்கு ஒண்ணுமே தெரியாது! எல்லாம் பொய்! ஆமா! எல்லாம் பொய், மகாராசா!

அ: முத்தப்பா, இனியும் வேண்டாம் இந்தக் கபட நாடகம்! விட்டுவிடு! உன் வீட்டை, நமது ஆட்கள் சோதனை போட்டு வந்திருக்கிறார்கள்.

அ: அது மட்டுமில்லை. நீயும் உன் மனைவியுமாக உன் நண்பர்களையும், உறவினர்களையும் ஏமாற்றிப் பொருள் சேர்த்திருப்பதாக வேறு கேள்வி.

மு: அது உண்மைதான், மகாராசா! நாங்க கேட்டோம்; அவங்களே விரும்பிக் கொடுத்தாங்க. அப்படிக் குடுத்திட்டு, இப்படிப் பேசலாமா? மகாராசா!

அ: அரண்மனையிலே களவு போன சாமான்கள் எல்லாம், உன் வீட்டிலேதான் கிடைத்திருக்கின்றன.


மு: இது அநியாயம், மகாராசா. எனக்கு வேண்டாதவங்க யாரோ செய்த வேலை இது. வீட்டுலே திருட்டுச் சாமான்களைக் கொண்டு தள்ளி இருக்காங்க!

அ: அப்படியானால், அந்தச் சாமான்களை அவர்களிடமே சேர்த்துவிடுகிறேன்! ஒரு தடவை களவு போன சாமானை, நான் அரண்மனையிலே சேர்ப்பதில்லை.

மு: மகாராசா, என்னை மன்னியுங்க. பொருளுக்கு ஆசைப்பட்டு, நான்தான் கொண்டு போனேன். என் வீடே, மகாராசா வீடுதானே! அதனாலே தட்டு எங்கே கிடந்தா, என்ன! என்று நினைச்சேன்.

மு. ம: இனிமே இப்படி நடக்காது மகாராசா. புத்தி வந்திட்டுது; நடந்ததை மறந்து, எங்களை மன்னிச்சுடுங்க, மகாராசா!

அ: அப்படியே ஆகட்டும், முத்தப்பா. (கனிவுடன்) உண்மை உரைத்த உன்னையும் உன் மனைவியையும் மன்னித்தேன். உங்கள்



இருவருக்குமே விடுதலை! இந்தப் பணத்தையும் பண்டங்களையும் நீங்களே வைத்திருக்கலாம்.

மு: நிசமாகவா? ஆகா! உங்க பெருந்தன்மையே பெருந்தன்மை!

(அநியாயம்! திருடனுக்குச் சலுகையா?' என்ற குரல்கள்)

அ: மகா ஜனங்களே, வியாபாரிகளே, பெரியோர்களே. பணத்தாசை பிடித்து, பொய்யும் புரட்டும் பேசிக் களவாடிய சொத்து எல்லாம் இவர்களிடமே இருக்கட்டும்; நமக்கு வேண்டாம்! ஆனால், முத்தப்பன் குடும்பத்துக்கு யாருமே எந்தச் சாமானும் விற்கக் கூடாது! அவர்களுக்கு என்ன கஷ்டம் வந்தாலும், இரக்கம் காட்டவே கூடாது! மீறி நடந்தவர்களுக்குக் கடுமையான தண்டனை! இனி, சபை கலையலாம்.

(சபாஷ்! அரசர் அறிவாளி! சரியான தண்டனை!)

## 10

[முத்தப்பன் வீடு. முத்தப்பன். மு. மனைவி.]

மு. ம: என்னா, அப்பவே சொன்னேனே, கேட்டீங்களா? வீட்டிலே இருந்த சாமான்கள் எல்லாம் தீர்ந்தாச்சு. பட்டினி உயிர் போகுதே. சாப்பாட்டுக்கு வழி இல்லாமப் போச்சே!

மு: என்ன செய்யறது, பச்சையம்மா? வெளியூருக்குப் போகலாம்னு கிளம்பினா அரண்மனை ஆட்கள், நம்மை இங்கேயே வீட்டுக்கு விரட்டி அனுப்பறாங்க. பாடுபட்டுப் பணம் காசுதான் சேக்கலாம்; இப்படி ஆகுமின்னு யார் கண்டாங்க? அங்கே பார்! மூலைக்கு மூலை பொன்னும் துணியுமாக் குவிஞ்சுதான் கிடக்கு.

மு. ம: போய் அதைச் சாப்பிடுங்க! ஏன் இப்படிப் பொன்னையும் பொருளையும் காட்டி, வயித்து எரிச்சலைக் கொட்டறீங்க? திருடித் திருடி, பணம் சேர்த்து என்ன ஆச்சு, பாருங்க! தன் வினை தன்னைச் சுடுது!

மு: அட இப்போ என்ன செய்யச் சொல்றே?

மு. ம: அப்படியானா, வாங்க, ராசா காலிலே விழுந்து எழுந்திரிப்போம். இது போலப் பட்டினி கிடந்து, சாகவா பிறந்தோம்? பணம் எலலாம் போகட்டும்! ஒரு வாய் சோறு கிடைச்சா, அதுவே சொர்க்கம். வாங்க! ராசாவுக்கு இரக்கமுள்ள மனசுதான். நம்மைக் காப்பாத்துவார்.

## 11

[அரண்மனை விசாரணை மண்டபம்.]

அ: முத்தப்பா. இப்பொழுதாவது புத்தி வந்தது பற்றி, மகிழ்ச்சி அடைகிறேன். மக்களையும் அரசாங்கத்தையும் ஏமாற்றி, பணம் திரட்டி, தனி மனிதன் என்ன செய்ய முடியும்? எல்லாருமாகச் சேர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டால், அவன் பாடு ஆபத்தாக முடியும் என்பதை அறிந்து கொண்டாயா?

மு: புத்தி வந்தது, மகாராசா!

அ: நல்லது, முத்தப்பா! உண்மையாகக் கண்ணீர் விட்டு மன்னிப்புக் கேட்பவர்களை மன்னிக்கத்தான் வேண்டும்; உங்களை மன்னித்தேன். திரட்டிய பணத்தை உரியவரிடமே சேர்த்துவிடு. அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள். அவ்வாறு செய்தால், அரண்மனையில் மீண்டும் வேலை கிடைக்கும்.

மு: அப்படியே செய்கிறேன், மகாராசா!

[திரை]





# தியாகம்

சங்கரசுப்பு

''எங்கே இன்னும் யாரையும் காணோம்?'' என்று கர்ஜித்தது சிங்கம்.

அதன் அருகிலிருந்த புலி, கர்ஜனையைக் கேட்டு நடுங்கி, சற்று நகர்ந்து, ''வரும் நேரந்தான்'' என்று தடுமாறிக் கூறியது.

''இன்று யார் அந்தப் பாக்கியசாலி?''

''முயலார்.''

''முயலாரா? தூ! மனிதப் பசிக்கு மாங்காயா? இன்று அகாதப் பசி எனக்கு. என் கோரப் பசிக்கு ஒரு முயல் எம்மாத்திரம்? ஆமாம், அந்தப் பயலுக்கு ஏன் இத்தனை நாழிகை? காலா காலத்தில் வரக்கூடாது?'' என்று கேட்டுவிட்டு, நாக்கை வெளியே நீட்டி வெளி வாயைச் சுற்றி நக்கிவிட்டு, தரையில் படுத்தது மிருகராஜன்.

''இப்போது வந்துவிடும்..'' என்றது புலி.

* * *

புலி சொன்னது உண்மைதான். காட்டின் மற்றொரு பகுதியில் தன் விதியை நொந்துகொண்டே சிங்கம் இருக்கும் இடம் நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது முயல். நடையும் ஓட்டமுமாக வந்துகொண்டிருந்த அதைப் பார்த்த நரியொன்று, ''என்ன முயலாரே, ஏதோ வேட்டகத்திற்குப் போவது போல், என்னைப் பார்க்காமல் கூடப் போகிறீரோ?'' என்று கேட்டது.


''என்ன அண்ணா, கேலி பண்ணுகிறீர்கள்? சாகப் போகிறவன் வேட்டகத்தை நினைத்து என்ன பயன்?''

''என்னையா இது?''

''தெரியாததுபோல் கேட்கிறீர்களே? இன்றைக்கு என் கெடுவு அல்லவா? மேன்மை தங்கிய சிங்க மகாராஜாவின் விருந்தாக அல்லவா நான் போகிறேன்.''

''ஓகோ, இன்று உம்முடைய முறையோ? ஓய், மறந்துவிடாதேயும், மேலே போனதும் முதல் காரியமாய் என் முதல் மனைவியையும், முன்னோரையும் விசாரித்ததாகச் சொல்லும்!''

''தேரை, பாம்பு வாயில் தவிக்கும்போது தெம்மாங்கு பாடின மனித ஜாதிபோல் பேசுகிறீர்களே! மகா யாத்திரை கிளம்பிவிட்டவனை




''உங்க பையன் கேட்கிற கேள்விக்குப் பதிலே சொல்ல முடியாது போலிருக்கே! பெரிய போக்கிரியா இருக்கானே!''

''ஆமாம், ஸார். சில சமயங்களில் அவன் அம்மாவையே பதில் பேச முடியாமல் செய்துவிடுகிறான்!''

---

வழியனுப்பும் பேச்சா இது? ஏன், அண்ணா, இப்படி அக்கிரமம் நடந்து வருகிறதே, இதைக் கேட்பதற்கு ஆள் இல்லையா?''

''அதுதான் கேட்டுவிட்டோமே. சிங்கத்தின் அக்கிரமத்தைக் கண்டித்துத் தினமும் ஒவ்வொரு பிராணி இனத்திலிருந்து ஒன்றே ஒன்றை அதற்கு பலியிடத் தீர்மானித்தாகிவிட்டதே!''

''அந்தத் தீர்மானம்தான் தெரியுமே. இப்படித் தினமும் ஒவ்வொரு பிராணியாகச் சிங்கத்தின் வயிற்றுக்குள் போய்க்கொண்டிருந்தால் அப்புறம் மற்றப் பிராணி வர்க்கங்களின் கதியென்ன? நாளடைவில் சிங்கத்தைத் தவிர மற்ற வம்சங்களே பூண்டற்றுப் போய்விடுமோ? ஓர் உயிர் வாழ்வதற்கு எத்தனை உயிர்கள் மடிய வேண்டியிருக்கின்றன!''

''ஆகா, எத்தனை கரிசனம்? உன்னுடைய கெடு வந்தவுடன் ஞானோதயமெல்லாம் வந்துவிடுகிறதோ! உனக்குச் சங்கடம் வரும்போதுதான் மற்றவர்களுக்கும் உன் மாதிரிச் சங்கடங்கள் வந்திருக்கும், வரும் என்ற சிந்தனை வருகிறது. உன்னைச் சொல்வதில் குற்றமில்லை. உலகம் அப்படித்தான் இயங்கி வருகிறது.''

''என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நான் இப்படிப் பேசுவதாக நினைக்காதீர்கள், அண்ணா. இந்தச் சிங்கத்தை ஒழித்துக் கட்ட ஏதேனும் வழி சொல்லுங்கள்!''

''என் மூளை வறண்டிருக்கும் சமயம் உன் கெடு வந்திருக்கிறதே! எனக்கு..'' என்று நரி சொல்லி முடிப்பதற்குள் அருகிலிருந்த பாழுங் கிணற்றுக்குள் ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. உடனே நரி, ''முயலாரே, பாழும் கிணற்றில் என்ன விழுந்தது என்று பார்க்கலாம்'' என்று முயலை அழைத்துக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றது.

நரியும் முயலும் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தன. கிணற்று நீர்ப் பரப்பின்மேல் பெரிய மாங்காய் ஒன்று மிதந்தது. மிதந்த மாங்காயைப் பார்த்தபோது கிணற்று ஜலத்தில் தெரிந்த தன் பிம்பத்தையும் பார்த்துவிட்டது நரி. உடனே அதன் முகத்தில் ஒரு புதிய களை தோன்றியது.

''அடேய், உன் அதிர்ஷ்டம்தான் மாமரத்திலிருந்து மாங்காய் ஒன்று விழுந்தது..'' என்று கூறிவிட்டு முயலின் அருகில் சென்று காதோடு காதாய் ஏதோ ரகசியம் பேசியது. நரி சொன்னதை எழுத்துவிடாது காதில் வாங்கிக்கொண்டதுபோல் முயல் தலையை ஆட்டியது.

''அண்ணா, உங்களுக்கு அனந்த கோடி நமஸ்காரம். நீங்களும் சரி, எங்கள் வமிசாவளியும் சரி, என்றென்றும் ஒரு குறையுமின்றி வாழ வேண்டும். நான் வருகிறேன்'' என்று தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு, நாலு கால் பாய்ச்சலில் சிங்கம் இருந்த இடத்திற்கு ஓடியது.

* * *

இரைக்க இரைக்க ஓடி வந்த முயலைப் பார்த்த சிங்கம், ''ஏனடா அற்பா, சாவகாசமாய் வருகிறாய்! உன் வருகைக்காக என் பசி காத்திருக்குமோ? மூடனே!'' என்று கோபத்துடன் கேட்டது.

''இல்லை.. பிரபோ..''

''என்னடா இல்லை, நொள்ளை? நேரங் கழித்து வந்ததுமல்லாமல்

சமாதானம் வேறு சொல்லவா பார்க்கிறாய்?''

''ஆமாம், மகராஜா!''

''என்ன, ஆமாவா?''

''ஆமாம்..நான் உங்கள் பொருட்டு வெகு வேகமாக வந்து கொண்டிருந்தேன். வழியில்..''

''வழியில் என்ன? வழுக்கி விழுந்தாயோ? மெல்ல வருவதற்கு என்ன கேடு?''

''நான் வழுக்கி விழவில்லை, மகாராஜா. என்னைத் தன் வழிக்கு கொண்டுபோக விரும்பினார் ஒரு பெரியார்..''


''என்ன..?''


''ஆமாம், ராஜன், வழியிலே என்னை வேறொரு சிங்கம் மடக்கிக் கொண்டுவிட்டது.''

''என்னடா கதையளக்கிறாய்! சொப்பனமா?''

''சொர்ப்பனமில்லை மகராஜ், உண்மையாகவே என்னைத் தனக்கு அர்ப்பணித்துவிட ஆக்ஞை யிட்டது அந்நிய சிங்கமொன்று. வழியிலே என்னை வழி மறித்து, 'டேய், யாரடா அவன்? என்னைப் பொருட்படுத்தாமல் கன அவசர மாய்ப் போகிறவன்?' என்று கேட் டது. நான், 'கன அவசரமாய்த் தான் போகிறேன்' என்று பதில் சொன்னேன். உடனே அந்தச் சிங்கம் தன் காலால் என் பின் மண்டையில் அறைந்துவிட்டு, 'எந்த ஊர் மகாராணி காத்திருக்கிறாள் உன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு?' என்று வினவியது. நான் சுருக்கமாக, 'மகாராணி காத்திருக்கவில்லை. எங்கள் மகா ராஜாதான் காத்திருக்கிறார், என்னைத் தன் விருந்தாக்கிக் கொள்ள' என்று கூறினேன். அந்தச் சிங்கம் வயிறு வெடிக்கச் சிரித்து விட்டு, 'என்னைத் தவிர இந்த வனாந்திரத்தில் வேறு ஒரு சிங்கம் இருக்கிறதோ? அது இருக்கும் இடத்தைக் காட்டு. அதை முதலில் பிண்டம் பிடித்துவிட்டு, பிறகு உன்னைக் கவனிக்கிறேன்' என்று கர்ணகடோரமான குரலில் கூறி யது.உடனே நான், 'ஐயா மகானு பாவரே, நீர் அங்கே வர வேண் டாம். இங்கேயே இரும். நான் என் ஐயனை இங்கே அழைத்து வருகி றேன்' என்று பகன்றுவிட்டு மெது வாய்த் தப்பியோடி வந்து விட்டேன். நீங்கள்தான் சரணம், பிரபோ!'' என்று மூச்சுத் திணறத் திணறக் கூறியது முயல்.

''நீ சொல்வது உண்மையா?






''இதென்ன தொந்திரவா போச்சு! எனக்கு வரும் லெட்டரி லெல்லாம் 'மகாகனம், மகா கனம்'னு எழுதித் தொலேக்கருங் களே! நான் அவ்வளவு கனமாகவா இருக்கேன்!''

எங்கேயிருக்கிறுன், அந்த முது கெலும்பில்லாத பயல்? காட்டு'' என்று தன் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது மிருகபதி.

முயல் முன்னே வழி காட்டிச் செல்ல, சிங்கம் பின்னுல் தொடர்ந்து சென்றது. பாழுங் கிணறு இருந்த இடம் வந்தது.

''எங்கேடா, உன்னே வழி மறித்த சிங்கம்?'' என்று அதட்டியது சிங்கம்.

''இங்கேதான் இருந்தது. இதோ பாருங்கள், அதன் பாதத்தின் அடையாளம்'' என்று வெறுந் தரையில் விளம்பிக் காட்டிவிட்டு, ''மகாராஜ்'' என்று கத்தியது.

''என்னடா?''

''ஓடி வாருங்கள். இதோ இருக்கிறது, பாருங்கள். நான் சொன்ன சிங்கம்'' என்று கிணற்றுக்குள் முகத்தைக் காட்டியது.

சிங்கம் உடனே அங்கே ஓடிச் சென்று, கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தது. பார்த்தவுடன் அது பயந்து, தலையை வெளியே இழுத்துக்கொண்டது. ஆமாம், முயல் கூறினது மெய்தான். கிணற்றுக்குள் தலே நீட்டி எட்டிப் பார்த்தது சிங்கம். கிணற்றுக்குள்ளிருந்த சிங்கமும் தரை மேலிருந்த சிங்கத்தைப் பார்த்தது. உடனே தரை மேலிருந்த சிங்கம் தன் பெரிய பற்கள் வெளியே தெரியும்படி முகத்தை அஷ்ட கோணவாய் வைத்துக்கொண்டு அழகு காட்டியது. கிணற்றுச் சிங்கமும் பதிலுக்கு அழகு காட்டியது. இதுதான் சமயமெனக் கருதிய முயல், ''அரசே, அதன் ஆணவத்தைப் பார்த்தீர்களா? உங்களுக்குப் பதில் அழகு காட்டுகிறது. உடனே அதன் மேல் பாய்ந்து அதை வதை செய்யாமல் நிற்கிறீர்களே! நேரங் கடக்கக் கூடாது பிரபோ!'' என்று சாதுரியமாகப் பேசிற்று.


முயல் கூறினதைக் கேட்டதும் சிங்கம், ''அடேய் உன்னே என்ன செய்கிறேன், பார்'' என்று கூவியது. அப்போது எதிர்பாராத விதமாக, கிணற்றருகே இருந்த மாமரத்திலிருந்து பழுத்த கனியொன்று கிணற்றுக்குள் விழுந்தது. அவ்வளவுதான்; கிணற்றுக்குள்ளிருந்த சிங்கத்தைக் காணவில்லே. மறைந்துவிட்டது. கரை மேலிருந்த சிங்கம், கிணற்றுச் சிங்கத்தைக் காணுமல் தேடியது. சற்றுப் பொறுத்து கிணற்று ஜலம், அமைதியடைந்த பிறகு மறுபடி கிணற்றுக்குள் சிங்கம் பிரசன்னமாகியது. உடனே கரை மேலிருந்த சிங்கத்திற்கு விஷயம் புரிந்துவிட்டது. தான் இதுவரை கிணற்றுக்குள் பார்த்தது வேறு சிங்கம் அல்ல, தன் பிரதிமையையே பார்த்து ஏமாந்து போய் விட்டோம் என்று தெரிந்து கொண்டது. முயல் செய்யவிருந்த சூதும் அதற்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிந்தது. ஆனுல் அதை வெளிக்காட்டாமல், ''முயலாரே, இங்கே வாரும்'' என்று கூப்பிட்டது. முயல் அதன் அருகே பயத்தோடு சென்றது.

''கிணற்றுக்குள் எட்டிப்பாரும்'' என்று ஆக்ஞாபித்தது சிங்கம். முயலும் எட்டிப் பார்த்தது. அப்போது முயலின் பிம்பமும் கிணற்று ஜலப் பரப்பில் தெரிந்தது. உடனே

சிங்கம், தன் பிரதிபிம்பத்தைப் பார்த்து, ''ஒய் சிங்கம், உமக்கு முயல் இறைச்சி தானே வேண்டும்? அதோ தெரிகிறது பாரும் முயல். அதைப் பிடித்துக்கொண்டு சாப்பிட்டு ஏப்பம்விடும்'' என்று முயலின் பிம்பத்தைக் காட்டியது.

சிங்கத்தின் பேச்சைக் கேட்டதும் முயலுக்கு உடம்பெல்லாம் வெடவெடத்தது. தன் சூழ்ச்சியைச் சிங்கம் தெரிந்துகொண்டு விட்டதே என்று கிலி பிடித்துவிட்டது. அதற்கு இனித் தப்ப வழியில்லை என்று தெரிந்தது. ஆனாலும் இந்தச் சிங்கத்திற்கு இரையாகக் கூடாது என்று தீர்மானித்து ஓடவாரம்பித்தது. முயல் ஓடுவதைப் பார்த்த சிங்கம் அதைத் துரத்தியது. முயல் உடனே கிணற்றைச் சுற்றி ஓடியது. சிங்கமும் விடாமல் முயலைத் துரத்தியது. இரு மிருகங்களும் ஒன்றையொன்று நெருங்காமல் கிணற்றைச் சுற்றிச் சுற்றி ஓடின. ஓடிக்கொண்டிருக்கும்போது முயலின் மனத்தில் ஓர் எண்ணம் உருவாகியது. தான் செத்தாலும் பரவாயில்லை, மற்ற விலங்குகளாவது கவலையின்றிச் சௌக்கியமாய் வாழட்டுமே. தன் ஓர் உயிரினால் எவ்வளவோ உயிர்கள் பாதுகாக்கப்படுமே என்று பெருந்தன்மையாக நினைத்தது. பிறகு திடீரென்று சிங்கம் எதிர்பாராதவாறு கிணற்றுக்குள் குதித்தது. முயலை எப்படியாவது பிடித்துக் கொல்ல வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு இதுவரை அதைத் துரத்திய சிங்கம், கோபத்தில் இன்ன காரியம் செய்கிறோம் என்ற நிதானம் இல்லாமல் முயலைப் பின்பற்றிக் கிணற்றுக்குள் குதித்தது. முயல் எது நடக்க வேண்டும் என்று விரும்பிக் கிணற்றுக்குள் குதித்ததோ அது நிறைவேறிவிட்டது.

## அம்பலத்தில் வெடிக்காதது, அறையில் வெடித்தது!



அழிந்த இடத்தைச் சேர்த்துப் படித்தால் அருமையான கதை!

# பலே திருடன்!

ஜமீன்தார் சொக்கலிங்கம் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தார். அப்போது தபால்காரன் வந்து ஒரு லெட்டரை அவரிடம் கொடுத்து விட்டுச் சென்றான். ஜமீன்தார் லெட்டரைப் பிரித்துப் படித்தார். அவர் முகம் வெளுத்தது. அந்த லெட்டரில் கண்டிருந்த விஷயம் இது தான்:

"ஜமீன்தாரே, இன்று இரவு நான் உமது வீட்டைக் கொள்ளையடிக்கப் போகிறேன். உம்மால் முடிந்ததைச் செய்து கொள்ளுங்கள். இப்படிக்கு மாயாண்டி."

உடனே ஜமீன்தார் உடல் பரபரக்க டெலிபோனை எடுத்துப் போலீஸிற்குப் போன் செய்தார். இன்ஸ்பெக்டர் சதாசிவம் தனது போலீஸ்காரர்களுடன் வந்து சேர்ந்தார். இரவு '12 மணி ஆயிற்று'. திருடனின் சாயலையே காணோம். சதாசிவம் மிகவும் பெருமையடித்துக் கொண்டிருந்தார். "நான் வந்தால் திருடன் எவ்வாறு இங்கே வருவான்?" என்றார். ஜமீன்தார் வாயெல்லாம் பல்லாக இருந்தது.

பொழுது விடிந்ததும் இன்ஸ்பெக்டர் சதாசிவம் ஜமீன்தாரிடம் விடை பெற்றுக் கொண்டு மிகவும் பெருமையோடு தனது வீட்டிற்குச் சென்றார். அங்கே அவர் கண்டது என்ன? வீடு திறந்து கிடந்தது. வீட்டிலிருந்த விலையுயர்ந்த சாமான்கள் எல்லாம் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன.

— பி. ஆர். வி




# துப்புத் துலங்கியது

கே. சுந்தரேசன் .....

அன்றைத் தினசரியை எடுத்துப் பிரித்தார் துப்பறியும் சுந்தர்.

பேப்பரில் இருந்த 'காணோம்' என்ற தலைப்பைச் சுட்டிக் காட்டி விட்டு, சுந்தரின் முகத்தை உற்றுப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் சங்கர்.

அங்கே ஓர் இளைஞனின் புகைப் படம் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அதன் அடியில், பையனின் பெயர் சுகுமாரன், வயது 16 என்ற விவரங்கள் கொடுக்கப் பட்டிருந் தன. அதன் அடியில் அந்தப் பையனின் தகப்பனார் 'பரமசிவன்' என்று கையொப்பமிட் டிருப்பதை யும் ஊன்றிக் கவனித்தார். பின்பு இரண்டாவது பத்தியைப் பார்த் தார். அதில் ஒரு தங்கச் செயினை யும் இரண்டு மோதிரங்களையும் "ராஜாராமன்' என்பவர் பஸ்ஸில் ஏறும்போது கோட்டை விட்டு விட்டார் என்று இருந்தது. அதை ஒரு சிறுவன் பிக் பாக்கெட் செய்து விட்டானும்.

சுந்தர் சிறிது சிந்தித்தபிறகு, "ஊம்..நீங்க வந்த விஷயம்?" என்று கேட்டார்.

"இல்லே..அந்த ஜமீன்தாரின் மகன் ரங்கநாதன் விஷயமாகத் தான்..முதலில் பையன் உயிரோ டிருக்கிருனு, இல்லையா என்பதே தெரியவில்லையே!"

"ஓ! அதுவா!" என்ருர் சுந்தர். அவர் சிந்தனை சுழன்றது.

* * *

ஜமீன்தார் பூதலிங்கத்துக்கு ஒரே அருமை மகன். திடீரென்று அவனைக் காணவில்லை என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. சுந்தர் உடனே ஜமீன்தார் வீட்டிற்கு விரைந்தார். விசாரணையில் 'துரைக்கண்ணு' என்பவனும் ரங்க நாதனும் மிகவும் நெருங்கிய நண் பர்கள் என்றும், துரைக்கண்ணு தினமும் வந்து ரங்கநாதனை வெளி யில் அழைத்துச் செல்வான் என் றும், அன்றும் அதேபோல் போன தாகவும் தெரிந்தது. இரண்டு.... மூன்று நாட்கள் ஆகியும் வராமல் போகவே போலீஸுக்குத் தகவல் கொடுத்ததாகவும் சொன்னர் ஜமீன்தார்.

"துரைக்கண்ணு என்பவன் யார்?" என்ருர் சுந்தர்.

"துரைக்கண்ணு யாருன்னு எங் களுக்கே அதிகம் தெரியாது. பெரிய பணக்காரனும். பல ஊர் களிலும் ஏராளமான சொத்து இருக்கிறதாம். ஒரு நாள் நம்ப பையன் அவனைச் சினிமாவிலே சந் தித்தானும். அதிலேருந்து நெருங் கிய சிநேகம்."

"ரங்கநாதனைக் காணவில்லை என்ற செய்திக்குப் பிறகு துரைக் கண்ணு இங்கே வந்தானு?"

"ஒரே ஒரு தடவை வந்தான். 'ரங்கன் எங்கே' என்று கேட்டான். 'இல்லை' என்றதும் போய்விட் டான்."

"உங்கள் பிள்ளைக்கு வீட்டில் ஏதாவது விரோதம்.."

"அதெல்லாம் விரோதம் ஒன்றும் கிடையாது."

"என்ன மிஸ்டர் சுந்தர்.. கொஞ்சம் கவனிங்க.." என்று எழுந்தார் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டர் வெளியே போன தும், "ஸார்! யாரோ வந்திருக்காங்

களே..உள்ளே வரச் சொல்லட்டுமா?'' என்றான் வேலைக்காரன்.

''ஊம்!'' என்றார் சுந்தர்.

மறு விநாடி ஒரு பெரியவர் உள்ளே நுழைந்தார்.

''என் பையன் சந்திரனை.....'' என்று அவர் ஆரம்பிக்கும் போதே, ''என்ன காணோமா?'' என்று அலுப்புடன் கேட்டார் சுந்தர்.

''ஆமாம்..''

''பரீக்ஷை கிரீக்ஷை பெயிலாயிட்டானா, இல்லாட்டா நீங்க ஏதாவது சொன்னீங்களா?''


''இல்லீங்க....''

''அப்போ அவன் யாருகூடப் போனான்..எப்போ போனான்?''

''அவன் யாருகூடவும் போக மாட்டானுங்க. அவனுக்கு ஒரே





ஒரு பையன்தான் சிநேகம். அவன்தான் நேத்துப் பேப்பர்லே 'காணோம்'னு வந்ததே - 'சுகுமாரன்' என்று - அவன் தான். அவன்கூடத்தான் பள்ளிக்கூடம் போவான்..வருவான். அந்தச் சுகுமாரன் மகா பொல்லாத பயலுங்க. துடுக்குக்காரன். அசட்டுத் தைரியமும்..முரட்டுத் தனமும் உடையவன்.''

''அது சரி, அவன்கிட்டே விலையுயர்ந்த பொருள் ஏதாவது....''

''ஒண்ணுமில்லீங்க. ஒரே ஒரு புதிய பார்க்கர் பேனு இருக்குது. அது போனுப் போவட்டுங்க..பயல் உசிரோடே திரும்பினுப்போதும்.''

''சரி, போங்க. என்னுலான முயற்சிகளை நான் செய்யறேன்.''

அவர் போய் விட்டார்.

சுந்தரின் சிந்தனைக் குழம்பியது.

''சுகுமாரனைக் காணேம்—அவன் முரடன். அவன்கூடப் போன

சந்திரனையும் காணோம், அவன் சாது. ஜமீன்தார் மகனைக் காணோம்- அவன் கவலையற்றவன். அவனுக்குச் சிநேகிதன் துரைக்கண்ணு. பணக்காரன். ஊம்..ம்! ஒரு வேளை.. ..ஊஹூம்!'' அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

ஊரெல்லாம் எங்கே போனாலும், 'காணோம்' என்ற பேச்சுத்தான்.

* * *

மிகவும் இருட்டான ஓர் அறை. ஒரே நிச்சப்தம். ஊர் அடங்கிப் போய்க் கிடந்தது. ஏதோ சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான் சந்திரன். கும்மிருட்டைக் கண்டு அவனுக்குப் பயமாக இருந்தது. சட்டென்று பக்கத்தில் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

''எங்கே இருக்கிறோம்?''

எதிரில் பார்த்தான். கதவின் இடுக்கு வழியாக லேசாக வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சத்தை மறைத்தது ஓர் உருவம். சந்திரனுக்கு மனம் 'படக்..படக்' கென்று அடித்துக்கொள்ள ஆரம்



"கடைக் கண்ணினாற் கண்டாள்.."

034n2WNS N51

பித்தது. ''அம்மா!'' அவன் வாயைத் திறப்பதற்குள் அவன் வாயை இரு கரங்கள் பொத்தின.

''டேய், சந்துரு! ஏண்டா கத்தறே? எங்கே இருக்கோம்னு நினைவில்லையா? தூக்கக் கலக்கம் போலிருக்கிறது! சத்தம் செய்யாமல் எழுந்து பாரு'' என்றது ஒரு குரல்.

சட்டென்று எழுந்தான். நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்ருக அவன் நினைவுக்கு வந்தன.

சுகுமாரனும் அவனும் பள்ளிக்கூடம் போய்விட்டு வரும்போது சந்திரன் தன் தந்தையின் பார்க்கர் பேனவைத் தொலைத்துவிட்டான். வீட்டிற்குச் சென்ருல் தந்தை அடிப்பாரே என்ற பயம். சுகுமாரன் அவன் மனக் கவலையைப் போக்க நினைத்து அவனை அழைத்துக்கொண்டு கடற்கரைக்குப் போனுன். சந்திரனுக்கு விளையாட்டிலோ, பேச்சிலோ, சிரத்தை இல்லை. அவன் முகம் வாட்டத்துடன் காணப்பட்டது.



84202

"உள்ளம் குளிர்ந்ததோடா, கண்ணு!"

தலையைக் குனிந்துகொண்டு மண்ணைக் கோதியவாறே உட்கார்ந்திருந்தான் அவன்.

''ச்சூ! சரிடா, வா போகலாம். கொடுக்கிற உதையைப் படத்தான் வேண்டும். வேறுவழி. . அதுக்காக வீட்டுக்குப் போகாமல் இருக்க முடியுமா?'' என்றான் சுகுமாரன்.

சந்திரன் எழுந்திருக்க மனமில்லாமல் மணலில் கையை ஊன்றிக் கொண்டு சாய்ந்தான். கீழே ஒரு பொட்டலம் தட்டுப்பட்டது.

'சீ! மணலைச் சுண்டல்போல் கட்டிப்போட்டுட்டுப் போருன்கள்' என்று அதைப் பிரித்தான்.

என்ன ஆச்சரியம்! அதில் ஒரு தங்கச் செயினும், இரண்டு மோதிரங்களும் ஜொலித்தன. சுகுமாரனுக்கு முகத்தில் புன்னகை தவழ்ந்தது. சந்திரன் பிரமித்தான்.

''டேய்! அது வைரமோதிரம் போலிருக்குடா! இரட்டை வடச் செயின்! என்னடா யோசிக்கிறே?',

''இதை எப்படி அதன் சொந்தக்



"இனிய குழல் இசைத்தவனே!"

போட்டோ: என். ராமகிருஷ்ணு

காரர்களிடம் ஒப்படைப்பது என்று தான் யோசிக்கிறேன்.''

''ஏண்டா, பழி! பேசாமல் இதை விற்று, கெட்டுப்போன பார்க்கர் பேனுவுக்குப் பதில் வேறு ஒன்று வாங்கிக்கொண்டு, மீதியைத் தீபாவளிச் செலவுக்கு வைத்துக்கொள்ளலாம். நாம் என்ன, யாரிடமாவது இதை அபகரித்தோமா?'' என்ருன் சுகுமாரன்.

சந்திரனுக்கு அதுவும் 'சரிதான்' என்று பட்டது. ஆனுல் மனத்தில் மட்டும் ஏதோ ஒரு பயம் குடிகொண்டிருந்தது. 'இதை எப்படி விற்பது?'' என்று யோசித்தான். அதே சமயம் பக்கத்தில் நின்றபியூக் கார் ஒன்றை நோக்கிப் புறப்பட்டான் சுகுமாரன்.

காரிலிருந்த பெரியவரைப் பார்த்து, ''ஸார்! நாங்க ரொம்ப ஏழைங்க. எங்க அப்பா..ஊம்.. இல்லே. அம்மாவுக்கு மூன்று நாட்களாகக் கடுமையான ஜுரம். வீட்டில் செலவுக்குப் பணம் கிடையாது. ஆதலால் அம்மா இந்தச் செயினை யாரிடமாவது கொடுத்துப் பணம் வாங்கிண்டு வரச் சொன்னுள். ஸார்!'' என்று தயங்காமல் புளுகினுன்.

பெரியவர் செயினை இப்படியும் அப்படியுமாகத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''ஊஹூம்! இது வேண்டாம்ப்பா....வேண்டுமானுல், இதை வாங்கிக்கிட்டுப் போ....'' என்று ஓர் இரண்டு ரூபாய் நோட்டை இனுமாகக் கொடுத்தார்.

கறுப்புக் கண்ணுடி, மஸ்லின் ஜிப்பா, தங்கச் செயின் போட்ட கைக்கடிகாரம்....அமெரிக்கன் கிராப்பு....இவைகளுடன் காட்சியளித்த ஒரு வாலிபன் அருகில் கூப்பிட்டு, ''தம்பிங்களா, நீங்க இருவரும் அந்தக் காரிலே இருப்பவருடன் பேசியதை நான் கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். அந்தச் செயினை எடுங்கள். நான் வாங்கிக்கொள்கிறேன்'' என்ருன் அன்பாக.

சுகுமாரன் செயினை எடுத்து அவனிடம் நீட்டினுன்.

''அடேடே! ஐம்பது ரூபாய் பெறுமே? நீங்க வாங்க; நான் தர்றேன்'' என்ருன் கனிவுடன்.

சுகுமாரனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

''ஸார்..எங்களிடம் இன்னும் இரண்டு மோதிரங்கள்கூட இருக்கின்றன. அதையும்....''

அதையும் வாங்கிப் பார்த்துவிட்டு, ''வைரமா? நல்லா இருக்குதே! பாவம்! கஷ்டத்துக்கு விக்கிறீங்க. ஆபத்துக்கு உதவத்தானே தம்பி நகை நட்டுங்க. வாங்க, இரண்டுக்குமாகச் சேர்த்து நூற்றி இருபது ரூபாய் தருகிறேன்'' என்று சொல்லி, இருவரையும் அழைத்துக்கொண்டு சந்து பொந்துகளெல்லாம் சுற்றி வளைத்து, கடைசியில் ஒரு சிறு வீட்டை அடைந்தான். அங்கே இருந்த மற்றும் இருவரைப் பார்த்ததும் சந்திரனுக்குக் கதி கலங்கியது. அங்கிருந்தவர்களில் ஒரு கிருதாக்காரன், ''அண்ணே! ஏது கிராக்கி பலமா இருக்கே! இந்த இரண்டு பொடிப் பசங்களும் யாரு?'' என்று விசாரித்தான். 'இருக்கட்டும் அண்ணே! பேசிக்கலாம்' என்று சொல்லி, ''டேய்! பயல்களா, நீங்க நான் திரும்பி வரும்வரையில் இங்கேயேதான் இருக்கணும்..சத்தம் கித்தம்...ஆமா!'' என்று சொல்லி, பிச்சுவாவைக் காண்பித்து மிரட்டிவிட்டு, வெளியே சென்ருன். பிறகு கதவு மூடப்பட்டது.

''எல்லாம் உன் வறட்டுத் தைரியத்தால்தான் வந்தது'' என்ருன் சந்திரன் அழாக்குறையாக. ஒரே பயம் அவனுக்கு. நன்ருகத் தூங்கிவிட்டான். பின்பு எழுந்த போதுதான் மேலே கண்ட நிகழ்ச்சி நடந்தது.

சந்திரனின் நினைப்புக் கலைந்தது. மெதுவாக எழுந்து கதவிலிருக்கும் ஒரு துவாரத்தின் வழியாக வெளியே பார்த்தான். வெளியே கிருதாக்காரனும் ஸாண்டோ பனியனும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

''ஏன் அண்ணுச்சி. நம்ம ராமதுரை பெரிய ஆள்தான். ஜமீன்தார் பிள்ளையோடே டிப்டாப்பா அவருக்குச் சரியா அலங்கரிச்சுகினு 'துரைக்கண்ணு'னு போகும்போது யாராவது அவரைப் பார்த்தா சந்தேகப் படுவாங்களா? 'கேடி'ன்னுவது 'திரு

டன்'ன்னுவது சொல்லுவாங்களா? சரி; ஜமீன்தார் மகனை எங்கே காணவே இல்லியே?''

''அதுவா, தம்பி..அதோ இருக்குதே பூமிக்கடியிலே, அண்ணுத்தையினுடைய சொரங்க அறை, அதிலே வைச்சிருக்குது அந்தப் பிள்ளையாண்டானை. அண்ணுச்சி பணம் கேட்டதுக்கு ரங்கநாதன் ஏதோ எக்கச்சக்கமா பேசிச்சாம்.. 'பாரு, உன்னை ஓட்டாண்டியாக்கி விடறேன்'னு சொல்லி அடைச்சு வச்சிருக்கு. ஜமீன்தார் வூட்டுப் புள்ளேஇல்லே..ஏதாவது பயமுறுத்தல் கடுதாசி..கிடுதாசி..இல்லையா ..எப்படியோ நிறையச் சம்பாதிப்பாரு..'' என்ருன் கிருதாக்காரன்.

ராமதுரை ஒரு சிரமமுமில்லாமல் தனக்குக் கிடைத்த நகைகளை எடுத்துக்கொண்டு கடைத் தெருவுக்கு நடந்தான். தெரிந்த தட்டானிடம் சென்று நகைகளைக் காட்டினுன்.

''அண்ணே! எல்லாம் பத்தரை மாத்துத் தங்கம். மொத்தம் ரூபா எழுநூறு பெறும். நீங்கள் என்னேடு வந்தீங்கன்னு இதை நல்ல விலைக்குப் பேசி முடிக்கிறேன்'' என்று பல்லை இளித்தான் தட்டான். இருவரும் ஒரு பங்களாவுக்குள் நுழைந்தனர்.

''யாரு, பத்தரா? என்னையா விஷயம்?'' என்ருர் வீட்டுக்காரர்.

''எஜமான்! இதைக் காட்டலாம்னு வந்தேன். ஹி..ஹி..'' என்று நகைத்துவிட்டு, பொட்டலத்தை அவர் முன்பு நீட்டினுன் தட்டான். பெரியவர் முகத்தில் கோபம் வெடித்தது.

''திருட்டுப் பயலே, எங் கிட்டேயா உன் வித்தையைக் காண்பிக்கறே! நாங்க எல்லோரும் பீச்சுக்குப் போயிருந்தபோது குழந்தை கெட்டுப்போக்கி விடுமேன்னு எல்லா நகைகளையும் கழற்றிப் பொட்டலமாகக் கட்டி வைத்துக் கொண்டேன். அதைப் பஸ்ஸிலே ஏறும்போது யாரோ பிக்பாக்கெட் செஞ்சுட்டான்னு நினைச்சேன்! பார், உன்னைப் போலீஸிலே ஒப்படைச்சு..'' என்று நெருப்பிலிட்ட நெல்போல் துள்ளினுர் அவர்.

தட்டான், ''ஐயா! எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. இதோ இந்த ஆளுதான்..'' என்ருன்.

பெரியவர் ராமதுரையை தலை முதல் கால்வரை பார்த்தார்.

''சாமி! யார்கிட்டே சாமி, உன் கைவரிசை? என் நகையை எடுத்துக்கொண்டு கதை பேசருரு கதை! மரியாதையா வேணும்னு பணம் கொடுத்து எடுத்துக்குங்க. இல்லாட்டா'' ராமதுரை முடிக்கவில்லை.

இதற்குள் போலீஸுக்குத் தகவல் சென்று போலீஸ் வந்தது. போலீஸ்காரர்களைக் கண்டதும் ராமதுரை 'வெலவெலத்துப் போய்விட்டான்.


''சார்! சத்தியமா நகைகள் என்னுடையதில்லே. இரண்டு பசங்க என்னிடம் கொண்டுகொடுத்து, வித்துகிட்டு வரச்சொன்னுங்க. இது மாதிரி ஆகும்னு நினைச்சுத்தான் அவங்களை என் வீட்டிலே போட்டுப் பூட்டி வச்சிருக்கேன். இட்டாறேன்'' என்ருன். சுகுமாரனும் சந்திரனும் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். போலீஸ்காரர்கள் ராமதுரையைச் சாட்சியாக அழைக்க அவனும் ஸ்டேஷனுக்குப் போனுன்.

அதற்குள், '''பஸ் ஸ்டாண்'டில் இந்தப் பசங்கதான் பிக்பாக்கெட் செஞ்சிருக்கணும்....நான் வரட்டுங்களா, எனக்கு நேரமாகுது!'' என்று தப்ப முயன்ருன் ராமதுரை.

''சீ! நீ போவதா? இன்ஸ்பெக்டர் ஸார், ஏன் யோசிக்கிறீங்க? முதலில் அவன் கையில் விலங்கு மாட்டுங்க. அவன் லேசான ஆளில்லே. பலே கேடி, ராமதுரை! ஜமீன்தார் வீட்டிற்கு வரும்போது இவன் பெயர் துரைக்கண்ணு. ஜமீன்தாரின் மகன் ரங்கநாதன் உயிருடன்தான் இருக்கிருன். இவனுடைய வீட்டில் மேஜைக்குக் கீழே இருக்கும் பலகையைத் தூக்குனல் ஒரு சுரங்கம் இருக்கிறது. அந்த அறையில் இருக்கிருன்'' என்று ஆரம்பித்து, கடைசிவரை நடந்ததை விளக்கிச் சொல்லி, குட்டை உடைத்தான் சுகுமாரன்.

போலீஸ்காரர்கள் ராமதுரையைக் கைது செய்து அவன் இருப்பிடம் சென்று சோதனை போட்டதில் எல்லாம் உண்மை என்பது வெட்ட வெளிச்சமாகியது.

எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.




சாக்கோட்டை சம்பத்துக்குச் சுட்டுப் போட்டாலும் கணக்கு வராது. முதல் வகுப்பிலிருந்து அவன், கணக்குப் பரீட்சையில் ஒற்றை இலக்கத்திலேயேதான் மார்க்கு வாங்கி வந்திருக்கிறான்! சில சமயம் சுழியே வாங்கி, பூஜ்யன் என்று பெயர் வாங்கியதுமுண்டு. ஒவ்வொரு வருஷமும் அவனுடைய மாமா சந்துரு, சிரமத்தைப் பார்க்காமல் சம்பத்துக்காகக் கணக்கு உபாத்தியாயர்கள் வீட்டுக்கு நடையாக நடப்பார். மாமாவின் முக தாட்சிண்யத்துக்காகக் கணக்கு வாத்தியார்களும் சம்பத்து வாங்கிக் கொண்டிருந்த 5, 6 என்ற ஒற்றைப் படை மார்க்குகளுக்கு முன்னால் நான்கோ ஐந்தோ துணை சேர்த்து 45, 56 என்று பாஸ் போடுவார்கள்!

இப்படி எத்தனை நாள்தான் நடக்கும்? மேலும் சாக்கோட்டை ஸ்கூலில் மூன்றாவது பாரத்தோடு சரி. மேலே படிக்க அவனை அத்திம்பேரிடம் சென்னைக்கு அனுப்பி அங்கே ஏதாவது ஒரு ஹைஸ்கூலில் சேர்ப்பது என்று ஏற்பாடாகியது. ''எலே சம்பத்து! என்னமோ மார்க்குத் தானம் வாங்கி மூன்றாவது பாரம் வரை வந்தாச்சு. இனிமேல் உஷாராகப் படிச்சு முன்னுக்கு வர வழியைத் தேடு'' என்று மாமா சந்துரு அவனைச் சென்னைக்கு ரெயில் ஏற்றி அனுப்பினார்.

சாக்கோட்டைச் சம்பத்து கணக்கில் தான் பூஜ்யமே தவிர மற்றப் பாடங்களில் சோடை இல்லை. தமிழ் அவனுக்குத் தலை கீழ்ப் பாடம்!

சென்னையில் அத்திம்பேர் வீட்டில் இருந்து கொண்டு படிக்க ஆரம்பித்த சம்பத்தும் வக்கீல் மகன் தம்புவும் வெகு சீக்கிரத்தில் இணை பிரியாத நண்பர்களானார்கள்.

சம்பத்து கணக்கில் 'சோப்பளாங்கி' என்றால் தம்புவுக்குத் தமிழிலும் மற்றப் பாடங்களிலும் தகராறு. கணக்கு மட்டும் அவனுக்கு நன்றாக வந்தது. நன்றாகத் தங்களுக்குத் தெரிந்த பாடங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கற்றுக் கொள்வதென்று ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

வகுப்பிலும், வெளியிலும் சம்பத்துப் போதித்த தமிழ்ப் பாடங்களைத் தம்பு மனப்பாடம் செய்து வந்தான்.

தமிழ் மேதாவி சம்பத்தும், அவன் சீடன் தம்புவும் சேர்ந்து வகுப்பில் பேசிய தமிழ் புரியாமல் வகுப்பிலிருந்த மற்றப் பிள்ளைகள் பேந்தப் பேந்த விழித்தார்கள். சம்பத்தின் தமிழைத் தாங்களும் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டார்கள்.

இப்படி இருக்கும் போதுதான் கால் வருஷப் பரீட்சை வந்தது...

தம்பு சொல்லித் தந்த குறுக்கு வழிகளில் பாய்ந்து ஏதோ ஒரு தினுசாகக் கணக்குப் பரீட்சையை ஒப்பேற்றினான் சம்பத்து. குருட்டாம் போக்கில் விடைகள் மட்டும் சரியாக விழுந்தன. ஆனால் வழிகள்? ஆகையால் 'காப்பி' அடித்திருப்பதாக முடிவு செய்த கணக்கு வாத்தியார் சாக்கோட்டைப் பாணியிலேயே மார்க்குப் போட்டார்!

கணக்கு மார்க்கைப் பார்த்தபோது சம்பத்துக்கு வயிற்றை எரிந்தது. சம்பத்துக்கு அந்தப் பரீட்சையில் கணக்கு மார்க்கு '9' தான்! ஊர் மாறியும் கணக்கு மார்க்கு மாறாமல் இருப்பதை நினைத்து வேதனைப்பட்டான்.

தம்பு தமிழைத் தலை கீழ்ப் பாடமாகச் சம்பத்திடம் கற்றுக்கொண்டதாலோ என்னவோ, தமிழ்ப்பரீட்சையில் அவன் எழுதிய விடைகளில் எழுத்துக்கள் புரண்டு விட்டன. ''எல்லாம் தப்பு'' என்று சிவப்பு மையினால் உபாத்தியாயர்




அடித்து விட்டுத் தர்மத்துக்காகக் கொஞ்சம் மார்க்கு தானம் செய்திருந்தார்!

வகுப்பில் வாய் ஓயாமல் பேசியதைப் பார்த்துத்தான் கணக்கு உபாத்தியாயரும், தமிழ்ப் பண்டிதரும் தங்களை மட்டம் தட்ட மார்க்கைக் குறைத்திருக்கிறார்கள் என்று சம்பத்தும் தம்புவும் முடி டவுக்குவந்தார்கள். இதை நிவர்த்திக்க, இருவரும் வெளிக்கு தங்களுக்குள் விரோதம் வந்து விட்டது போல வேஷம் போட்டார்கள். ஆனால் யாருக்கும் தெரியாமல் அவர்களிடையே பேச்சு வார்த்தைகளும், கடிதப் போக்கு வரத்தும் நடந்துகொண் டிருந்தன.

போதாத காலம்! அரைப் பரீட்சை சமயத்தில்தானா சம்பத்து தம்புவுக்கு எழுதிய அந்தக் கடிதம் கணக்கு வாத்தியார் கையில் அகப்பட்டுத் தொலைய வேண்டும்? கணக்கு வாத்தியார் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். தலை சுற்றியது.

''பம்துவுக்கு பம்சத்து ழெவுதியது. ளிகிகூம்மு ணகக்கு தாவ்யார் டொக்கத்தையும், மிதிரையும் ராப். ணேவுமென்றே ளுேப





**தலைவர்:** ஏன், பேச்சை நிறுத்திக் கொண்டீர்கள்?

**பிரசங்கி:** ஒன்றுமில்லை. 'சகோதரிகளே' என்று ஆரம்பித்து விட்டேன். கூட்டத்தில் என் மனைவியும் இருக்கிறாள்...... இதற்கு என்ன செய்வது?

---

டதவை வஅர் ராம்க்கைக் றைகைச் சுட் டோப்பிருக்கார். ராகணம் ருபிய லிவ்லே. ருசுக்க மாந் ழவி ஞகை ணேவும். ணம்டை ழொகுப்பு டபிய லந்லடாபம்..பம்சத்.''

எத்தனை தடவை படித்தும் விஷயம் விளங்கவில்லை. தமிழ்ப் பண்டிதரிடம்கூடக் கொண்டு போனார். அதை அவர் வெள்ளெழுத்துக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு துருவித் துருவிப் பார்த்தார். துளியாவது புரிந்தால் தானே? அவருக்கு மூளை குழம்பி, 'கிர்' அடித்தது! இருவரும் கடிதத்தைத் தூக்கிக்கொண்டு ஹெட் மாஸ்டரிடம் புகார் செய்யப் போனார்கள்.

சம்பத்தும் தம்புவும் தகவல் தெரிந்து திருதிரு என்று என்ன செய்வதெனப் புரியாமல் விழித்தார்கள். ஹெட்மாஸ்டரும் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தார். ஒன்றும் விளங்கவில்லை. இதை யார், யாருக்கு எழுதியது என்று நேரிடையாகவே புலன் விசாரிக்க ஆரம்பித்தார். சம்பத்தும் தம்புவும் மாட்டிக் கொண்டு விட்டார்கள்.

ஹெட்மாஸ்டர் அறையில் ஏகக்கூட்டம். சம்பத்து, தம்பு இருவரின் விசாரணையைக் கவனிக்க இதர மாணவர்களும் அங்கே கும்பல் கூடி யிருந்தார்கள்.

ஹெட்மாஸ்டர் விசாரணை ஆரம்பமாகியது. அவர் சொன்னார்: ''உண்மையை ஒத்துக் கொள்ளப் போகிறீர்களா? அல்லது பள்ளிக்கூடத்திலிருந்து 'டிஸ்மிஸ்' செய்து விடட்டுமா? உண்மையைச் சொன்னால் தண்டனை குறையும். இல்லாவிட்டால்..''

சம்பத்து, தம்புவைப் பார்த்தான். தம்பு தரையைப் பார்த்தான். 'மாட்டிக் கொண்டாகி விட்டது. இனி என்ன?' என்று சம்பத்து ஒப்புக்கொண்டான். கணக்குவாத்தியாருக்குஇதைக் கேட்டதும்கோபம் தலைகால் தெரியாமல் வந்தது.

ஹெட்மாஸ்டர்: —''கடிதத்தில் என்ன எழுதினாய்? இதுதானா, உன் படிப்பின் லட்சணம்? சரி, சரி. இந்தா நீ எழுதிய கடிதத்தை உரக்கப் படி!''

''இதில் நான் எழுதியிருக்கும் பாஷை தமிழ்தான் ஸார். ஒரு வார்த்தையில் உள்ள முதல் எழுத்தின் உச்சரிப்பு இரண்டாவது எழுத்துக்கு மாறும். இதே போல கடைசி எழுத்தின் ஒலியை அதற்கு முன்னால் உள்ள எழுத்துக்கும் மாற்றலாம். அப்படி எழுதிய கடிதம்தான் இது'' என்றான் சம்பத்து.

''உன் ஊர் சாக்கோட்டை. இந்தப் பெயரை உன் பாஷையில் எப்படிச் சொல்வாய்?''

''காச்டோக்கை'' என்று சம்பத்து பதில் கூறிவிட்டு சாக்கோட்டை என்பதில் இரண்டாவது எழுத்திலுள்ள 'க்' முதல் எழுத்தான 'சா' வுக்கு மாறி 'கா' ஆகியதாயும் இரண்டாவது எழுத்தான 'க்' முதல் எழுத்தான 'சா' வின் இடத்துக்குப் போய் மாறியதாயும் விளக்கினான்.

ஹெட்மாஸ்டர், கணக்கு, தமிழ் உபாத்தியாயர்கள் ஆச்சரியம் தாங்

காமல் மிரள மிரள விழித்தார்கள். கூடியிருந்த பிள்ளைகள் கொல்லென்று சிரித்தார்கள். ஹெட்மாஸ்டர் முகத்தில் புன்னகை மலர்ந்தது. சம்பத்து பின் வருமாறு அந்தக் கடிதத்தைப் படித்தான்.

''தம்புவுக்கு, சம்பத்து எழுதியது. கிளி மூக்கு கணக்கு வாத்தியார் கொட்டத்தையும் திமிரையும் பார். வேணுமென்றே போன தடவை அவர் மார்க்கைக் குறைச்சுப் போட்டிருக்கார். காரணம் புரியவில்லை. சுருக்க நாம் வழி காணவேணும். மண்டைக் கொழுப்பு படிய நல்ல பாடம்.. சம்பத்து.''

ஹெட்மாஸ்டர் வாய் விட்டு உரக்கச் சிரித்தார். கணக்கு வாத்தியாருக்கு உள்ளூர எரிச்சலாயும் அவமானமாயும் இருந்தது.

சம்பத்து என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்று நடுங்கிக்கொண்டிருந்தான்.

ஹெட்மாஸ்டர் சம்பத்தின் குயுக்தியை நல்ல முறையில் திருப்ப எண்ணினர். அவர் பின்வருமாறு சொன்னர்:

''அடே பையா. உனக்கு நல்ல மூளை. அதை நன்ருக உபயோகித்தால் இந்தப் பள்ளிக்கூடத்துக்கே நல்ல பெயர் வரும். தமிழ் மொழியை இப்படித் தலைகீழாகப் புரட்டி எல்லோருக்குமே ஒரு புதிராகச் செய்திருக்கிருய். பாஷையை நல்ல விஷயத்துக்கு உபயோகிக்க வேண்டும். திட்டுவதற்கும், அவமானப் படுத்துவதற்கும் அதை இப்படிக் குட்டிச் சுவராக்காதே. இந்த எழுத்துப் புரட்சியில் உள்ள கஷ்டத்தை விடக் கணக்குகளைப் போடுவது கஷ்டமில்லை. மெய் சொன்னதற்காக இரண்டு பேரையும் மன்னித்து விடுகிறேன். இந்த மாதிரி இனிமேல் தலைகீழ்ப் பாடங்களைச் செய்யாதே.''

புதிய பாஷையின் ரகசியம் தெரியவரவே மற்ற பிள்ளைகளுக்குச் சம்பத்திடம் மதிப்பு ஏறியது. ''சம்பத்துக்கு ஜே! தம்புவுக்கு ஜே!'' என்று ஆரவாரித்தார்கள்.

## மாப்பிள்ளை மருண்டார்!



# ஒரு நாள் இரவு...

## தங்கமணி

இரவு, ஏழு ஏழரை மணி இருக்கும். கருக்கிருள் 'கும்' மென்று கப்பிக்கொண் டிருந்தது; மார்கழிப் பனி. உயிரை உலுக்கும் வாடைக் காற்று, 'உஸ், உஸ்ஸ்..' என்று சுழன்று சிறிக்கொண் டிருந்தது. ரஸ்தாவின் இருபுறமும் வரிசையாக, வானேங்கி அடர்ந்திருந்த காட்டு மரங்களினூடே, 'பளிச் பளிச்' சென்று மினுக்கின, மின்மினிப் பூச்சிகள்; னொய் யென்று கரிச்சான் கிறீச்சிட்டுக் கொண் டிருந்தன; வெகு தூரத்திலே, வைக்கோல் வண்டிகள் வரிசையாக ஆடி, அசைந்தவாறு போய்க்கொண் டிருந்தன; அந்தக் காட்சியை ரசித்தவாறே, ரஸ்தாவின் ஓரமாக நடந்துகொண் டிருந்தான் நடேசன்; அவனுடன் நடந்துகொண் டிருந்த பூபதி, இனிய குரலில் பாடத் துவங்கினன்:

''கள்ளங் கபடின்றிக்
கண்ணியமாய்ப் பாடுபட்டுத்
தொல்லைகளை வெல்லு!-எனத்
தூண்டி விடும் நாவலிது!..''

ஒன்று, ஒன்றரை மைல் தூரத்திலிருக்கும் தமிழோங்கிபுரத்தில், அன்று மாலை, சிறுவர் இலக்கியக் கழக'த்துச் சிறுவர்கள், ஒரு கூட்டம் நடத்தினர்கள். அப்போது பாடின அந்தப் பாட்டை, பூபதி சுவைத்துப் பாடிக்கொண்டே நடந்தான்; நடேசன் அதைக் கேட்டுக் கொண்டே நடந்தான்.



திடீரென்று, பாதையின் புறத்திலிருந்து வரப்புகளிலும், வயல்களிலும் விழுந்தெழுந்து, ''அண்ணுச்சி! அண்ணுச்சி!'' என்று கூவிக்கொண்டே தாவியோடி வந்தாள், ஒரு சிறுமி.

நடேசனும், பூபதியும் திகைத்துத் திடுக்கிட்டு நின்றுர்கள்.

''அண்ணுச்சி, தயவு செய்து உதவி செய்யுங்கள், அண்ணுச்சி! மேய்ந்துகொண் டிருந்த ஆட்டுக்குட்டி ஒன்று, அதோ....அந்தக் குன்றின்மீது ஓடிவிட்டது..தயவு செய்து, அதைப் பிடித்துக்கொடுங்கள், அண்ணுச்சி, அண்ணுச்சி..'' அந்தச் சிறுமி கெஞ்சினுள்! இருவரும் அந்தச் சிறுமியின் முகத்தைப் பார்த்தார்கள்; பறட்டைத் தலை, அழுது சிவந்த விழிகள், பசியாலும் பயத்தாலும் வாடி வதங்கிக் கருகிய முகம்-பாவம்!.. பார்க்கப் பரிதாபமாகயிருந்தது!

''எது அது? வா, போவோம்!''

அந்தச் சிறுமி இருவரையும் அழைத்துக் கொண்டு, கொஞ்ச தூரத்திலிருந்த அல்லியூர் மலைக் குன்றை அடைந்தாள்.

''ம்மே!..ம்மே!..ம்மே!..''

செடியும் கொடியும், புல்லும் பூண்டும், கல்லும் கரடும், இருளும் பனியுமாகச் செருமிக் கிடந்த குன்றிடையே ஆட்டுக் குட்டியின் அலறல் கேட்டது.

பூபதி, 'டார்ச்' விளக்கு வெளிச்சத்தால் குன்றின் இண்டு இடுக்கெல்லாம் பார்த்தான்.

''அதோ! அதோ, ஆட்டுக் குட்டி! குன்றின் சரிவில்! நீங்கள்



இங்கேயே நில்லுங்கள்; நான் போய் அதைப் பிடித்து வருகிறேன்..'' என்று சொல்லிக் கொண்டு; பூபதி குன்றின் மீது ஏறினான்.

கொஞ்ச நேரத்துக்குள்-

எப்படியோ, ஆட்டுக் குட்டியைப் பிடித்துத் தோள் மீது போட்டுக் கொண்டு, பூபதி, குன்றை விட்டு மெல்ல இறங்கினான்... இறங்கினான்..

திடீரென்று-

''ஆ! அம்மா! அப்பா! ஐயோ! ஐயையோ!..''பூபதியின் வீரிட்ட அலறல், அந்தப் பிரதேசமெங்கும் எதிரொலித்தது!..

* * *

இரவு, பத்து பத்தரைமணி. பொன்மயமான அந்தக் குழந்தை, உயிர் குலுங்க, வீரிட்டு அலறியது!..

''ஐயோ, என் குழந்தையைக் கொடுத்து விடேன்!..ஐயோ, என் குழந்தையைக் கொடுத்து விடேன்!..'' என்று செம்பவள மயமான அந்தத் தெய்வ லோகப் பெண், நெஞ்சதிரக் கெஞ்சினாள்.

'உம், ஹூம்.. கொடுக்கவே மாட்டேன்! உம், ஹூம்..கொடுக்கவே மாட்டேன்!..' என்று கரும் பாறை மயமான அந்தப் பாம்புத் தலைப் பூதம், வையம் அதிரக் கர்ஜித்தது.

முல்லைப் பட்டணத்திலுள்ள தம் வீட்டு வராந்தாவில் உலவிக் கொண்டிருந்த டாக்டர் சபாபதிக்குக் 'குப், குப்'பென்று வேர்த்துக் கொட்டியது! ''ஆ, என்ன பயங்கரக் கனவு-அம்மம்மா!'' என்று அவர் உடலைக் குலுக்கினார். இந்தக் கனவுப் பயத்துடன், தாமரையூரிலிருக்கும் தன் செல்வ மகனின் நினைவும் அடிக்கடி தோன்றி, அவர் நெஞ்சைக் குழப்பியது! இது ஏன் என்று அவருக்குப் புரியவில்லை. இப்படிப் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கும்போது-

யாரோ ஓர் ஆள் சைக்கிளில் பஞ்சாய்ப் பறந்து வந்தான். டாக்டரிடம் தாவியோடினான்; ''ஐயா, தாங்கள்தானே பூபதியின் அப்பா!'' என்று பரபரப்புடன் கேட்டான்.

டாக்டருக்குச் சர்வமும் நடுங்கின! ''ஆமாம், நான்தான் பூபதியின் அப்பா! என்ன சேதி? பூபதிக்கு என்ன நேர்ந்தது.?''

''ஆபத்து.. மலைக் குன்றில் ஏறி..பாம்பு..கடி..கடித்து.. ரொம்ப..'' அந்தத் தாமரையூர் ஆள் தட்டித் தடுமாறிக்கொண்டு மேலும் கூறுவதற்குள்-?

* * *

இரவு, பதினொரு மணி..

பதினாறு, பதினேழு மைல் தூரத்திலிருக்கும் தாமரையூரை நோக்கி, டாக்டர் சபாபதி காரில் விரைந்து கொண்டிருந்தார்!

இன்னும் பத்து மைல்தான்..

இன்னும் ஒன்பது மைல்தான்..

கார், காற்றுகப் பறந்தது.

'ஆண்டவனே, என் மகனைக் காப்பாற்று!..கடவுளே, என் மகனைக் காப்பாற்று!..தெய்வமே, என் மகனைக் காப்பாற்று!..'

டாக்டர், கண்ணீர் வடித்தார்.

கார், பறந்து கொண்டிருந்தது..

இன்னும் ஆறு மைல்தான்..

மானூர், ரஸ்தாவில் கார் போய்க்கொண்டிருக்கும்போது-

''நில்லுங்கள்! காரை நிறுத்துங்கள்!..''ரஸ்தாவின் நடுவில்

நின்று, கைகளைத் தூக்கி யாரோ ஒரு சிறுவன் ஓங்கிக் கூவினன்!

டாக்டர், ஆத்திரமும் திகைப்புமாகக் காரை நிறுத்தினர். தாவிக் குதித்து வந்த சிறுவனைப் பார்த்து, ''என்னடா?'' என்று உறுமினர்.

''ஐயா! தயவு செய்து காப்பாற்றுங்கள், ஐயா! தெய்வம் போலக் கிடைத்தீர்கள்..என் அருமைத் தங்கை மாரடைப்பினல் சாவுடன் போராடிக் கொண்டிருக்கிருள்! ஐயா, ஐயா..கொஞ்சம் கருணை காட்டுங்கள், ஐயா!''..அந்தச் சிறுவன், டாக்டரின் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினன்!

டாக்டர்....?

அவர், சில விநாடிகள் பாச உணர்ச்சியுடன் போராடினர்; சில விநாடிகள் தியாக உணர்ச்சியுடன் போராடினர். அவர் மனக்கண் முன்னே சிபியும் மநுவும், திலீபனும் அலர்க்கண்ணனும், புத்தரும் காந்தியும் தோன்றி..

டாக்டர், டாக்டரானர்!

''தம்பி, அழாதே! உன் வீடு எங்கே? வா, போவோம்..'' அந்தச் சிறுவனை அழைத்துக் கொண்டு, வியர்த்துக்கொட்டிய முகத்தைத் துடைத்தவாறே, மானூர்க் கிராமத்தை நோக்கி நடந்தார்.

* * *

இரவு இரண்டு மணி..



அந்தச் சிறுவனின் தங்கை பிழைத்து விட்டாள்! நிதானமாகவும், ஒரு மனத்துடனும், கடமை உணர்ச்சியுடனும் டாக்டர் அந்தச் சிறுமிக்குச் சிகிச்சை செய்தார்; 'இனிப் பயமில்லை' என்னும் அளவுக்கு அந்தச் சிறுமி குணமடைந்துவிட்டாள்!..

டாக்டர் கிளம்பினர்.

'..என் மகன் பூபதியின் கதி..? ஓ, தெய்வமே! மனிதத் தன்மையுடன் நான் நடந்து கொண்டதற்கு...' அதற்குமேல் வார்த்தை இழை யோடவில்லை; டாக்டர், நீர் மல்கிய கண்களைத் துடைத்துக் கொண்டார்.

மணி மூன்று ஆகிவிட்டது..

தாமரையூர்க் கிராமத்திலுள்ள தம் வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு, டாக்டர் பரபரப்புடன் காரிலிருந்து இறங்கினர்.

''வாருங்கள்..'' ஓடோடி வந்து வாசலில் நின்று வரவேற்ற பூபதியின் அம்மாவின் முகத்தில் படர்ந்திருந்த மகிழ்ச்சியைக் கண்டதும்-

சுழன்று உருகித் தத்தளித்துக் கொண்டிருந்த டாக்டரின் இதயத்தில் தேன் மழை சொரிந்தது!..

''பூபதிக்கு..?'' வாசலில் நின்றவாறே கேட்டார் டாக்டர்.

''ஆபத்து ஒன்றுமில்லை; தமிழோங்கிபுரத்திலிருந்து வந்து கொண்டிருந்த தமிழ் வைத்தியர் ஒருவர், நல்ல சமயத்துக்குச் சிக்கினர். மானூரில் அவருடைய மகள் மாரடைப்பால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பதையும் விட்டு, பூபதியைக் காப்பாற்றினர்; நம் நெஞ்சில் பால் வார்த்த அந்தத் தியாகமூர்த்தியின் மகளைக் கடவுள் காப்பாற்ற வேண்டும்!..'' உள்ளன்புடன் கையெடுத்துக் கும்பிட்டாள் அம்மா. அவளுடன், டாக்டரும் கையெடுத்துக் கும்பிட்டார்!

அந்தச் சமயத்தில்-

உள்ளறையில் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த பூபதி, 'அப்பா! வந்து விட்டீர்களா! வாருங்கள்..'' என்ருன்.

# எந்த நாடும் எனக்கு நாடே!

பூவண்ணன்

1

காடுமலை நாடுகடல்
கடந்து செல்லுவேன்;
ஈடுஇல்லை, என்றனக்கு
எவரும் தடுத்திடார்.

2

வெப்பத்தினால் கஷ்டப்படும்
வேளை தன்னிலே
எப்புறமும் சென்றுசென்று
இன்பம் வழங்குவேன்.

3

மாடிவீடு, மண்குடிசை
தேடிச் செல்லுவேன்;
ஓடிஓடி ஓய்விலாமல்
உலகைச் சுற்றுவேன்.

4

ஆலமரக் கிளைகளினை
அசைத்துச் செல்லுவேன்;
சோலைமலர்க் கூட்டத்திலே,
குழைந்து நுழைகுவேன்.

5

யாருமில்லை நிகரெனக்கு
ஆல மரத்தையும்,
வேருடனே பெயர்த்திடுவேன்
வீட்டை வீழ்த்துவேன்.

6

அன்னையின்கை அடித்தபின்னர்
அணைக்கும், அன்பினால்!
என்நிலையும் அப்படியே!
இரண்டும் செய்குவேன்.

7

எந்தநாடும் எனக்குநாடே!
எங்கும் வாழ்கிறேன்.
எந்தஉயிரும் நானிலையேல்
இல்லை; இறக்குமே!





பொன்னப்பன் மனம் திருவிழா ராட்டினம் போல் சுற்றிச் சுற்றி வந்தது.

''பொன்னப்பா! நீ உயிருடனிருப்பதில் பயனில்லை. இப்பொழுது செயப்படுபொருள் தற்கொலையே. ஆகவே நீ எழுவாய்..''

போகும் வழியிலேயே இருந்த பாற்கடல் பவனத்தில் நுழைந்து இஷ்டமான டிபன்களைப் பொட்டலம் கட்டி வாங்கிக்கொண்டான்.

அவன் கடற்கரையை அடையும்பொழுது மணி ஒன்பதுதான் இருக்கும்.

பெரிதும் சிறிதுமான படகுகளும் கட்டு மரங்களும் கிடந்த ஓர் இடத்திற்கு வந்தான் பொன்னப்பன். அங்கே ஈ, கொசு இல்லை. மூளியாக இருந்த சந்திரனிடமிருந்து லேசான வெளிச்சமே வந்துகொண்டிருந்தது. படகுகளின் நிழல்கள் அந்த சிறு வெளிச்சத்தையும் மறைத்து இருளைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இந்த




தற்கொலை செய்துகொள்வது என்றும் சமுத்திரம்தான் அதற்கு ஏற்ற இடம் என்றும் முடிவாகத் தீர்மானித்தான் அவன்.

சுருக்கமாக அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதி அவர் பார்க்கக்கூடிய இடத்தில் வைத்தான். அம்மாவிடம் தேடவேண்டாம் என்று சொல்லிவிட்டு வெளியேறினன் பொன்னப்பன்.

இடமே தன் காரியத்திற்கு ஏற்ற இடம் என்று நினைத்தான் பொன்னப்பன். டிபன் பொட்டலங்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு நடுநிசி ஆகட்டும் என்று படுத்தான்; அப்படியே சிறிது தூங்கிவிட்டான்.

திடீரென்று யாரோ அழைக்கும் குரல் கேட்க, திடுக்கிட்டு எழுந்தான் பொன்னப்பன்.




''டேய் யாரது?'' என்ற குரல் கேட்டது. ஆனுல் உருவம் ஒன்றும் அவனுக்குப் புலப்படவில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டு ஒருவரையும் காணுமல் விழித்தான் அவன்.

''டேய் சுண்டைக்காய், உன்னைத்தாண்டா! இங்கே என்னடா வேலை உனக்கு?''

பொன்னப்பனுக்கு உருவம் தெரியாத அந்தக் குரலைக் கேட்கவே பயமாக இருந்தது.

''ஹஹ்ஹா . . ஹா . . ஹா . .'' என்ற பேய்ச் சிரிப்பு எழுந்தது படகுகளின் இடையிலிருந்து.

ஏதாவது கடற் பிசாசோ? உருவத்தைக் காணுமே!

''என்ன யோசிக்கிருய்?''

சாகப் போகிறவன் பேயடித்துச் செத்தால் என்ன, சமுத்திரத்தில் விழுந்தால் என்ன? சிறிது தைரியமடைந்தான் பொன்னப்பன்.

''டேய்! கையில் என்ன?''

''அது என் கடைசி ஆகாரம்.''

''முதலில் அவைகளை இந்தப் பக்கம் வீசி எறி. .பாக்கியைப் பிறகு பேசிக்கொள்ளலாம். .''

''பிசாசுகளுக்குக்கூடப் பசிக்குமா?இந்தா. .''என்று பொட்டலங்களை வீசினுன் பொன்னப்பன். படகுகளுக்குமேல் ஒரு கை மட்டும் தெரிந்தது. பிறகு பொட்டலங்கள் பிரிக்கப்படும் ஓசை கேட்டது.

பொன்னப்பன் ஆலோசித்தான். பிசாசுகள் ஆளைக் கண்டதுமே அடித்துவிடும் என்று கேள்விப்பட்டிருக்கிறான். அதற்கு மாறாக இந்தப் பிசாசு சாவகாசமாக விசாரிப்பதும் டிபன் சாப்பிடுவதும் ஆச்சரியமாக இருந்தன.

''டேய்..!''

அவன் சிந்தனை கலைந்தது.

''சரி, நீ எங்கே வந்தாய்?''

''நானா..பரீட்சையில் இரண்டு தரம் 'பெயில்'..இந்த அக்டோபரில் எழுதினேன்..'பாஸ்' என்ற எண்ணத்திற்கே இடமில்லை நான் எழுதியிருக்கும் அழகு..உலகுக்கும், வீட்டுக்கும் பாரமாக இருப்பதைவிட..''

''ஹஹ்ஹா..தெரியும். நீ கடலில் விழுந்து உயிரை விட்டுவிடலாம் என்று நினைத்து வந்தாயா?''

''ஆமாம்.''

''ஹஹ்ஹா..நீ பெரிய கோழை. உனக்கு வேண்டியது என்ன? வேலை..பணம்..இதுதானே?''

பொன்னப்பன் பேசவில்லை.

''நான் தருகிறேன்! என்ன?''

ஆச்சரியமாக இருந்தது பொன்னப்பனுக்கு! இந்தப் பிசாசே புது மாதிரியாக இருந்தது.

''சம்மதம்..''

''ஆனால் ஒன்று; உன் ரத்தத்தில் எனக்கு ஒரு சத்தியம் செய்து தர வேண்டும். மாறக்கூடாது.''

''அப்படி என்ன சத்தியம்?''

''உன் உயிர் உள்ளவரை எனக்கு உண்மையாக இருக்க வேண்டும். நமது ரகசியத்தைத் தலை போவதானாலும் வெளியே யாருக்கும் சொல்லக்கூடாது. நான் எது சொன்னாலும் கேள்வி கேட்கக் கூடாது. தவறினால் கிடைக்கும் பணம் போய்விடும்; உன் உயிரும் போய்விடும்..''

சிறிதுதான் யோசித்தான் பொன்னப்பன். ஒரே சொட்டு ரத்தத்தில் நாளெல்லாம் உழைத்தாலும் கிடைக்காத பணமா?

''நீ யாரென்று சொல்லவேயில்லையே! பிசாசுதானே!''

''பிசாசா, யார் சொன்னது? என்னைப் போய் அவ்வளவு அல்பமாக நினைத்து விட்டாயே....!''

''அப்போ நீ யார்?''

''நான் இந்த உலகமேயில்லை..''

''என்னது? இந்த உலகமே இல்லையா?'' பொன்னப்பனுக்கு நாக்குக் குளறியது.

''பூமியைத்தவிர உலகத்தில் பல மண்டலங்கள் இருக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''ஆமாம். .படித்திருக்கிறேன்.''

''நான் சுக்கிர மண்டலவாசி.''

''ஹா!'' என்று வாயைப் பிளந்தான் பொன்னப்பன். ''எத்தனையோ கோடிக்கணக்கான மைல் தூரத்திலிருந்து ஒருவன் எப்படி வர முடியும்?''

''அட பைத்தியக்காரா! ஏரோப்பிளேனில் பறக்கவில்லையா? அணுச் சக்தியால் எத்தனையோ புதுமைகள் செய்யவில்லையா? 'ராக்கெட்' விமானங்கள் தயார் செய்து சந்திர மண்டலத்துக்குச் செல்ல முயற்சிகள் செய்யவில்லையா? மனிதர்களே அப்படிச் செய்யும்போது நாங்கள் சும்மா யிருப்போமா?....மற்ற மண்டலங்களுக்குப் போக நாங்களும் ஒரு வாகனம் கண்டுபிடித்திருக்கிறோம்...பறக்கும் தட்டு!

## என்ன இருக்கு?



அதில்தான் நான் வந்தேன்..'' என்றான் அந்த மர்ம மனிதன்.

பொன்னப்பனுக்கு அந்தப் பெயரைக் கேட்டமாதிரி இருந்தது. பத்திரிகைகளில் அந்தப் பெயர் ஒரு சமயம் பிரபலமாக அடிப்பட்டுக் கொண் டிருந்தது. சுக்கிரமண்டலத் தட்டைப் பார்க்கும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைத்ததைப் பற்றி அவன் பெருமிதம் அடைந்தான். அந்தப் பறக்கும் தட்டில் ஏறிப் பறக்க வேண்டும் போலிருந்தது. அதற்காக அந்த மர்ம மனிதன் ஓர் ஆழாக்கு ரத்தம் கேட்டால்கூடக் கொடுக்கத் தயாராக இருந்தான் பொன்னப்பன்.

''என்ன! சரிதானா?''

''ஊம்....''

அடுத்த நிமிஷம்..

படகுகளின் இடையே ஏதோ பளிச்சென்று வைரத்தைப் போல் டாலடித்தது, படகு போன்ற ஓர் உருவம் கண்ணில் பட்டது. அது வெள்ளியைப் போல பளிச்சென்று இருந்தது. அதைச் சுற்றி ஏதோ பளபளப்பான மூன்று கோடுகள் தெரிந்தன. அவை அந்த இருட்டில் மினுமினுவென்று கண்ணைப் பறித்தன.

அந்தப் படகுத் தட்டின் நடுவிலிருந்து எழுந்து நின்றான் அந்த மர்ம மனிதன். அவன் கண்களைச் சுற்றி வட்டமான கோடுகள் பளபளவென்று மின்னின. 'அவ்வளவு பெரிய கண்களா?' என்று எண்ணி, ஆச்சரிய மடைந்தான் பொன்னப்பன். அந்த வட்டங்கள் 'நியான்சைன்' விளக்கைப் போல் பளிச்சிட்டன.

''ஏய்! உன் பெயரென்ன?''

''பொன்னப்பன்..''

''சரி,கண்களை மூடிக்கொள்...''

அந்த மர்ம மனிதனின் உருவம் தன்னை நோக்கி வருவது தெரிந்தது. கண்களை இரு கைகளாலும் மூடிக் கொண்டான் பொன்னப்பன். தன் கைகளில் ஒன்று பின்பிறமாக இழுக்கப்படுவதை உணர்ந்தான் அவன். அடுத்த விநாடி 'சுரீர்' என்று கையில் ஓர் எரிச்சல்...பின்புறமிருந்து உருவம் நகர்வது போன்ற லேசான ஒலி.

''நான் சொல்கிறபடி சொல்லிச் சத்தியம் செய்'' என்ற குரல் படகுகளிடமிருந்து வந்தது. ஐந்தே நிமிஷத்தில் சத்தியம் முடிந்தது.

'பொத்'தென்று ஒரு பொட்டலம் அவன் காலடியில் விழுந்தது.

''பொன்னப்பா! அந்தப் பொட்டலத்தை எடுத்துக்கொள். அதில் பணம் இருக்கிறது. நேரே பாரகன் டாக்கீஸிற்குப் போ, அங்கே கடைகள் திறந்திருக்கும். 6 பாக்கெட் சிகரெட்டும் இரண்டு தீப்பெட்டிகளும் வாங்கிக்கொண்டு வா. மீதமிருக்கும் பணம் உனக்கு'' என்றான் அந்த மர்ம மனிதன்.

பணத்தைப் பத்திரப்படுத்தியவாறு நடந்தான் பொன்னப்பன்.

வெற்றிலை பாக்குக் கடையில் அவன் வேண்டியதை வாங்கிக் கொண்டு மறுபடி கடற்கரையை அடைந்தபோது, அந்த மர்ம மனிதனின் குரல் மட்டும் கேட்டது.

''தம்பீ! அவைகளை இங்கேஎறி.''

தூக்கி எறிந்தான் பொன்னப்பன். இரண்டு கைகள் வெளியே வந்து அவைகளை எடுத்துக் கொண்

## ஆ! எல்லாம் இருக்கு!



போட்டோ: என். ராமகிருஷ்ணா

டன. அடுத்த நிமிஷம் படகுகள் பக்கத்திலிருந்து புகை கிளம்பியது.

''ஏய் பொன்னப்பா! நாளைக்கு ஒரு 'பிளாஸ்க்' வாங்கி, அது நிறைய நல்ல காபி வாங்கி நிரப்பிக்கொள். உன்னால் முடிந்த அளவு நல்ல டிபனுகை வாங்கு. ஒரு டஜன் சார்மினர்..கால் டஜன் நெருப்புப் பெட்டி எல்லாவற்றை வாங்கிக் கொண்டு, இரவு 11 மணிக்குமேல் 12 மணிக்குள் இங்கே வந்துவிடு. அதான் உனக்கு வேலை. சத்தியம் ஞாபகமிருக்கட்டும்... போ!''

வந்தபொழுது இருந்த தைரியம் போகும்பொழுது இல்லையாயினும் குஷியாக இருந்தான் அவன். சாகப் போனவனுக்கு அதிருஷ்டம்...சுலப வேலை. நிறையப் பணம்...இந்தப் பிரமாதமான விஷயத்தை எல்லாரிடமும் கூறிப் பெருமையடைய வேண்டும் போல் ஆசை எழுந்தது அவனுக்கு, ஆனால் சத்தியம்!

* * *

அவன் வீட்டு வாசற்படி நுழைந்து சற்று நிதானித்தான். அங்கே நிலவிய அமைதியிலிருந்து தன் கடிதத்தை இன்னும் யாரும் பார்க்கவில்லை என்று தெரிந்து கொண்டான்.

நுழைந்த பொன்னப்பன் தனக்குப் பெரிய அதிருஷ்டம் வந்திருப்பதாகவும், ஒரு பெரிய ஆசாமியிடம் நல்ல உத்தியோகம் கிடைத்திருப்பதாகவும் கூறி, தான் கொண்டு வந்த பணத்தையும் உதறினான். தொண்ணூற்று ஒன்பது ரூபாய்களும் ஓரிரண்டு அணுக்களும் விழுந்தன.

''ஏண்டா, ஏதுடா இவ்வளவு?''

''இது எந்த மூலை! இனிமே நிறையக் கிடைக்கும். நம் தரித்திரமே ஒழிஞ்சு போகும்..''

''ஏண்டா நிஜமா? ஏதாவது... தப்புத் தண்டா...''

''இல்லேப்பா....சத்தியமா'' என்று உறுதியாகக் கூறினான் பொன்னப்பன்.

பொன்னப்பனுக்கே ஆச்சரியம்! தினசரி நல்ல நல்ல டிபனும், பாதாம்கீரும், காபியும், சிகரெட் வெற்றிலை பாக்கும் வாங்கிக் கொண்டு நடு இரவில் மர்ம மனிதனுக்குக் கொடுப்பதும், ஏதாவது பணத்தோடு திரும்புவதும் சகஜமாகி விட்டன.

எல்லாவற்றையும்விட பொன்னப்பனுக்கு வியப்பைத்தந்தது தபால் விஷயம்தான். இரண்டு தடவை தபால் கடிதங்கள் வாங்கி வரச் சொல்லி, எழுதிக்கொடுத்துப் போடும்படி சொன்னபொழுது, பல சந்தேகங்கள் தோன்றின அவனுக்கு. 'இந்த ஆசாமியோ சுக்கிர மண்டலத்திலிருந்து வந்ததாகச் சொல்கிறான். இவன் யாருக்கு எழுதுவான்?' என்று எண்ணினான். இருந்தாலும் ஏராளமாக வரும்பணத்தை இழக்க விரும்பாத அவன், கண்ணை மூடிக்கொண்டு தபால்களைப் பெட்டியில் போட்டுவிட்டான்.

அவ்வப்பொழுது நிறையப் பணம் கிடைத்து வந்தது. ஒரு சமயம் ஒரு தங்கச்சங்கிலியும் கைக்கடிகாரமும்கூட கிடைத்தது. வீட்டில் சந்தோஷம் நிலவியது.

அமிர்தலிங்கத்திற்குப் பையன் இரவு வேளைகளில் வேலை, வேலை என்று சுற்றி வருவது பிடிக்கவில்லை. ''உத்தியோகத்தைப் பகலில் வைத்துக் கொள்ளேண்டா'' என்று சொன்னார்.

எவ்வளவோ முயற்சித்தும் பொன்னப்பன் ஏதேதோ சொல்லி மழுப்பி விட்டான்.

* * *

ஒரு நாள் அவன் சிகரெட் பெட்டிகள் வாங்கிக்கொண் டிருந்த சமயத்தில் திடீரென்று தோன்றினார் அவன் தகப்பனார் அமிர்தலிங்கம்.

''என்னடா! எத்தனை நாளாடா இந்தப் பழக்க மெல்லாம்...?'' அவர் குரலில் கோபம் தெறித்தது.

''இல்லேப்பா, இது அவருக்கு!''

''ஏண்டா புளுகுகிறாய்; உங்க ஜமீன்தார் 'சார்மினர்' சிகரெட் குடிக்கிறாரா?'' என்றதும் பொன்னப்பனுக்கே குழப்பமாகிவிட்டது.

மற்றொரு நாள், 'ருஸ்தும் மிலிட்டரி ரெஸ்டாரெண்டி'லிருந்து இறங்கும்பொழுது மாட்டிக்கொண்டான் அப்பாவிடம்.

பையன் ஏதோ கெட்டவர்களுடன் சேர்ந்து கெட்ட வழிகளில் போகிறுன் என்று தீர்மானமாக நம்பினர் அவர். அவன் எங்கே போகிறுன், என்னென்ன செய்கிறுன் என்பதைக் கவனிக்க முயன்ருர். இதனுல் பொன்னப்பனுக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. இதனுல் அவன் சரியான சமயத்திற்குப் போக முடியாமல், மர்ம மனிதனின் கோபத்திற்காளாகும்படி நேர்ந்தது.

ஒரு நாள்,—அமிர்தலிங்கத்தைத் தேடி வந்தார் ஒருவர். தாம் ஒரு துப்பறியும் இலாகா இன்ஸ்பெக்டர் என்று அவர் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''உம்ம மகனுக்கு என்ன வியாபாரம்?'' என்று விசாரித்தார்.

''வியாபாரம் ஒன்றும் இல்லே; ஒரு ஜமீன்தாரிடம் வேலே பார்க்கிறுன்'' என்று பதிலளித்தார் அமிர்தலிங்கம்.

''எவ்வளவு சம்பளம்?''

''அது ஒண்ணும் கணக்கில்லே. ஒரு தரம் பத்து ரூபாய் வரும். மற்ருெரு தரம் ஐம்பது கொண்டு வருவான். அவர் ரொம்ப நல்லவராம். ஒரு தரம் தங்க செயின் ஒன்றும், வேருெரு சமயம் உயர்ந்த கைக்கடிகாரமும் கொடுத்திருக்கிருர்.''

''அது யார் ஐயா, அந்தத் தாராள ஜமீன்தார்?''

''எனக்குத் தெரியாது.''

''கூப்பிடும் பையனே!''

''அவன் வேலேக்குப் போய்விட்டான்.''

''ஓகோ, இரவு வேலேயா? சரிதான்..எங்கே, அந்தச் சங்கிலியும் கடிகாரமும் இருந்தால் கொண்டு வாரும், பார்ப்போம்.''

இரண்டையும் எடுத்து வந்து கொடுத்தார் அமிர்தலிங்கம்.

''இவை என்னிடமே இருக்கட்டும்; நாளேக் காலே வருகிறேன்'' என்று நகர்ந்தார் இன்ஸ்பெக்டர்.



மறுநாள் சொன்னபடியே உள்ளே நுழைந்தார் இன்ஸ்பெக்டர்.

''ஏன் தம்பி, நீதானே ஜமீன்தாரிடம் வேலை செய்கிருய்?''

''ஆமாம்.''

''அது யாரு அந்த ஜமீன்தார்? எங்கிருக்கிருர், என்ன செய்கிருர்?''

''தெரியாது..''

''என்ன விளையாடறே! எங்கே, என்ன வேலை என்பது தெரியாது? நீ இரவில்தான் வேலை செய்கிருயா அவருக்கு!''

''ஆமாம்..''

''என்ன வேடிக்கையப்பா இது? இரவில் வேலை, ஆளைத் தெரியாது, இருக்குமிடம் தெரியாது..பணம் ஏராளமாகக் கொடுக்கிருர்..ஹா ஹா..நல்ல கதை! சரி நீ எங்கே போய் வேலை செய்கிருய்?''

''......''

''என்ன வேலை செய்கிருய்?''

''......?''

திணறிப் போனுன் பொன்னப்பன். கையைப் பிசைந்தான். 'ஐயோ சத்தியம்..அதுவும் ரத்தத்தில்..' வாயை இறுக மூடிக் கொண்டான் அவன்.

''சொல்லமாட்டாயா, சரி அரஸ்ட் வாரண்டுடன் வருகிறேன்'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

''சொல்லேண்டா, என் மானம் போகும்படிச் செய்யாதேடா'' என்று கத்தினுர் அமிர்தலிங்கம்.

ரொம்ப எக்கச்சக்கமான நிலையில் திணறினுன் பொன்னப்பன்.

''வந்து..பறக்கும் தட்டு..'' என்று உளறிவிட்டான்.

''என்ன தட்டு, என்ன உளறுகிருய்?'' என்று அதட்டினுர் இன்ஸ்பெக்டர்.

''சுக்கிர மண்டலத்திலிருந்து ஒரு மர்ம மனிதன்..''

''என்னப்பா உனக்கு ஏதாவது மூளைக் கோளாரு? சுக்கிரனுவது, மண்டலமாவது, பறக்கும் தட்டாவது..என்ன பிதற்றுகிருய்..?''

பொன்னப்பனுக்கு நிஜமாகவே பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

பொன்னப்பன் யோசித்தான், 'இன்று எப்படியாவது அந்த மர்ம மனிதனிடம் சொல்லி, சத்தியத்திலிருந்து விடுதலை வாங்கிவிட வேண்டும்; நமக்கு உத்தியோகமும் வேண்டாம்; பணமும் வேண்டாம்!' என்று தீர்மானித்தான்.

''ஸார், இன்னும் மூன்று நாள் அவகாசம் கொடுங்கள்'' என்று கெஞ்சினுன் பொன்னப்பன்.

இன்ஸ்பெக்டர் பேசாமல் வெளியேறினுர்.

அன்றும் வழக்கத்தைவிட நேரமாகிவிட்டது. அந்த மர்ம மனிதன் வெகு கோபமாக இருந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த ஆசாமியிடம் பேசவே பயமாக இருந்தது. கொண்டு வந்ததை வைத்துவிட்டுத் திரும்பினுன் அவன்.

பின்னுல் இரு உருவங்கள் தன்னைத் தொடர்ந்து வருவதைக் கூட அவன் கவனிக்கவில்லை.

* * *

**அ**ன்று கிளம்பும் பொழுதே பொன்னப்பன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

அவன் கடற்கரையை அடைந்த பொழுது சுமார் பன்னிரண்டு மணியிருக்கும். அன்றும் கோபித்துக் கொண்டான் அந்த மர்ம மனிதன்.

''மர்ம மனிதனே! என் நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது.. நீதான் ஒத்தாசை செய்யவேண்டும். எல்லோரும் பலவிதமாகச் சந்தேகிக்கிருர்கள். போலீசார் வேறு வந்து கேள்விமேல் கேள்வி கேட்டு, தொல்லைப் படுத்துகிருர்கள்.''

''ஓகோ, அப்படியா! நான் அப்பொழுதே நினைத்தேன்..இவ்வளவு நாளும் இல்லாமல் சமீபகாலமாக இரவு வேளைகளில் மனித

நடமாட்டம் கொஞ்சம் அதிகரித்திருக்கிறதே என்று..ஹஹ்ஹா.. உனக்கு என்ன வேண்டும்?'' பயங்கரமாகச் சிரித்தான் அவன்.

''என்னை உன் சத்தியத்திலிருந்து விடுதலை செய்..இல்லையோ...''

மறுபடியும் பயங்கரச் சிரிப்பு எழுந்தது. ''சரி, சற்று இரு: இதோ வருகிறேன்'' என்ற குரல் கேட்டது. அடுத்த நிமிஷம் நெடிய உருவம் ஒன்று எழுந்தது. கொஞ்சம் கொஞ்சமாகப் பொன்னப்பனை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது அது.

''டேய் அறியாப் பயலே! விடுதலைதானேடா கேட்டாய்? சத்தியத்திலிருந்து மட்டுமல்ல; இந்த உலகத்திலிருந்தே விடுதலை தரப் போகிறேன், இனி நீ எனக்கு ஆபத்தானவன்..''

அதன் கையிலிருந்த கத்தி மேலே எழும்பியது. பொன்னப்பனுக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு மயக்கமாக வந்தது.

'தட தட' வென்று பின்னால் ஏதோ சப்தம் கேட்டது.

அடுத்த கணம் ஐந்தாறு போலீஸ்காரர்கள் அந்த மர்ம மனிதனைப் பிடித்து விலங்கு மாட்டிக்கொண்டிருந்தனர். அந்த மனிதனிடமிருந்து பிடுங்கிய கத்தியுடன் அவன் எதிரே நின்றிருந்தார் இன்ஸ்பெக்டர். பின்னால் நின்றிருந்தார் அவன் அப்பா.

* * *

**வீ**ட்டில் படுக்கையில் கிடந்தான் பொன்னப்பன். மயக்கம் சிறிது தெளிந்திருந்தது. தலைமாட்டில் தகப்பனார் நின்றார்.

''பொன்னப்பா, உங்க சுக்கிர மண்டல மனிதன் இன்னும் பத்து வருஷங்களுக்கு எந்த மண்டலத்திற்கும் போக மாட்டான்; சர்க்காரின் ஜெயில் மண்டலத்திற்குள் பத்திரமாக இருப்பான். கவலைப் படாமல் எழுந்திரு'' என்றார் பக்கத்திலிருந்த இன்ஸ்பெக்டர்.

''என்ன சார்!''


''பைத்தியமே! அவன் சுக்கிரனுமில்லை; மண்டலமுமில்லை. பேயாண்டி என்ற பெரிய கொள்ளைக்காரன் அவன். பெரிய பெரிய பாங்கிகள், வீடுகள், கடைகள் எல்லாம் கொள்ளையடித்து லக்ஷம் லக்ஷமாகச் சுருட்டினான். போலீஸ் தொல்லை தாங்க முடியாமல் போகவே தப்பி ஓடினான். சமுத்திரக் கரையில் ரகசியமாகப் பணத்தையும், நகைகளையும் பத்திரப்படுத்தி வைத்தான். ஒரு புது மாதிரியான படகு செய்து கொண்டான். பகல் பூராவும் கடலில் சிறிது தூரம் சென்று சுற்றிக் கொண்டிருந்து விட்டு இரவில் வந்து கரையில் தங்குவான். அவன் படகுக்கு 'ரேடிய'த்தால் கோடுகள் போட்டிருந்ததால் அதைப் பார்த்து நீ ஏமாந்து விட்டாய். அவன் சதா மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தான். அந்தக் கண்ணாடி பிரேம் மீதும் ரேடியம் தடவி யிருந்ததால் இரவில் பளபள வென்று உனக்குத் தெரிந்திருக்கிறது.

''தப்பிச் செல்ல ஏற்பாடுகள் செய்யும் வரை, தன் தேவைகளைக் கவனிக்கவும், தன் ஆட்களுடன் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் நம்பிக்கையான ஓர் ஆள் தேவைப்பட்டது. சரியான சமயத்தில் நீ மாட்டிக்கொண்டாய். அவன் உனக்குக் கொடுத்த கடிகாரத்திலிருந்தும் சங்கிலியிலிருந்தும் நான் ஆள் இன்னாரென்று கண்டு பிடித்தேன். அவனைப் பிடிப்பதற்கு முதல் நாள் நான்தான் உன்னைத் தொடர்ந்து வந்து கவனித்தேன். உன் அப்பாவும் கூடவேதான் வந்தார்.

இன்னும் மூன்று நாள் போயிருந்தால் தப்பியிருப்பான் அவன். உன் உதவியினால்தான் அவனைப் பிடிக்க முடிந்தது. அவன் கூட்டாளிகளையும் பிடித்து விட்டோம். உன் உதவிக்கு நன்றி!'' என்று முடித்தார் இன்ஸ்பெக்டர்.

''அடேய், நீ பாஸாகி விட்டாயாடா!'' என்றார் அப்பா.

பொன்னப்பன் முகத்திலே மகிழ்ச்சி பொங்கியது.




1

[குசேலன் வருத்தமாக உட்கார்ந்திருக்கிறான், தங்கை சுசிலா கட்டப் பலகையுடன் வருகிறாள்.]

சுசீலா—குசேலா, ஒரு ஆட்டம் ஆடுவோம்...ஏய் உன்னைத்தானே,

குசேலன்: போடி..நான் வரலெ.

சுசிலா: ஒரே ஒரு ஆட்டம்டா.

கு: நான் வரலெ.

சு: ஏன் வருத்தமா இருக்கே?

கு: அதெல்லாம் ஒண்ணுமில்லே.

சு: பின்னெ எதுக்காக இப்படி உக்காந்திருக்கியாம்?

கு: உங்கிட்ட சொல்லி என்ன? எனக்கு அதிருஷ்டமில்லே.

சு: என்ன சொல்லேன்.

கு: இதோ பார். (ப்ராக்ரஸ் ரிபோர்ட்டைக் கொடுக்கிறான்.)

சு: என்ன இது? ப்ராக்ரஸ் ரிபோர்ட்டா?

கு: கிழிச்சுப் போடு அதை.

சு: தமிழ் 27, இங்கிலீஷ் 27, சமூகம் 27, கணக்கு 27, டிராயிங் 27, ஹிந்தி 27. தேவலையே, எல்லாத்திலியும் 27 கொடுத்திருக்காளே!

கு: குறைச்சலா வாங்கியிருக்கேன்னு அப்பா மண்டையிலெ குட்டு குட்டுன்னு குட்டினார். எண்ணி இருபத்தேழு குட்டுக் குட்டினார். மண்டையெல்லாம் தெறிக்கிறது.

சு: நீ ஏன் இப்படி மார்க்கு வாங்கறே? நன்னாப் படிக்கலியா?

கு: படிக்காமெ என்ன? படிச்சேன்? வதவதன்னு கேள்வி கேட்டா, யாரு எழுதுவா? பாதி கேள்விகளுக்குக்கூடப் பதில் எழுத முடியலே.

சு: அப்பா ரொம்ப அடிச்சாரா?

கு: அப்பா தினமும்தான் அடிக்கிறார். எனக்கு அதைப்பத்தி ஒண்ணும் கவலையில்லே. கால் பரீட்சையிலியே இப்படி 27 மார்க்கு வாங்கினால் அரை, முழுப் பரீட்சையிலே என்ன செய்யப் போறோம்னு தெரியல்லே. போன வருஷம் 26 மார்க்குக்குமேல் வரலே. அதுக்கு முன் வருஷங்களில் எல்லாத்திலியும் 25, 24. இப்படி இந்த மாதிரி வருஷத்துக்கு ஒரு மார்க் வீதம் உசந்துதுன்னா நான் எப்படி இந்த வருஷம் பாஸாகப் போகிறேன்? அதுவும் இந்த ஹெட்மாஸ்டரைப் பாக்கற போதே குலை நடுங்கறதே.

சு: நன்னாப் படியேன்டா!

கு: நன்னாத்தான் படிக்கிறேன். மார்க்மட்டும் வரமாட்டேங்கறது.

சு: என்ன செய்யலாம்?

கு: விஷத்தைக் குடித்து....

சு: ஐயையோ, மகாபாவம்!

கு: பின்னெ, என்ன செய்யறது?

சு: நான் ஒண்ணு சொல்றேன்!

கு: என்ன?

சு: ஹெட்மாஸ்டர் பிள்ளை கண்ணன் இருக்கானேல்லியோ?....

கு: கண்ணனு? ஆமாம். நானும் அவனும் மூணும் கிளாஸ் வரைக்கும் ஒரே செக்ஷன்லே வாசிச்சோம். ரண்டுபேரும் சேர்ந்துதான் பள்ளிக்கூடம் போவோம்; வருவோம். சேர்ந்து நாயுடு தோட்டத்திலே மாங்காயடிப்போம். ஒரு நாள் ரெண்டுபேரும் சேர்ந்தே உதை கூட வாங்கினேம், தோட்டக்காரங்கிட்ட. நாலாங்கிளாஸ் வந்தப்புறம் அவன் பி - செக்ஷனுக்குப் போயிட்டான். நான் ஸி செக்ஷன். அப்பறம் நாங்க சேர்ந்தே போகல்லெ எங்கியும். ரொம்ப கெட்டிக்காரன் அவன். நூத்துக்கு நூறு எல்லாத்திலியும்.

சு: அவன் ஹெட்மாஸ்டர் பிள்ளைதானே; அவனை ஏதாவது வழி பண்ணச் சொல்லேன்?

கு: அவன் என்ன செய்வான்?

சு: கேட்டுப் பாரேன்.

கு: அவன் ஹெட்மாஸ்டர் பிள்ளை. ரொம்ப ஒஸ்தின்னு நெனச்சிண்டிருப்பான்.

சு: சே, அவன் நல்லவண்டா! ப்ராக்ரஸ் ரிபோர்ட்டைக் காமிச்சுச் சொல்லேன், 'நீதான் ஏதாவது செய்யணும்'னு. கட்டாயமாச் செய்வான்..,இப்பவே போ.

கு: இப்பவேவா?

சு: ஆமாம். கிளம்பு.

கு: மணி என்ன ஆறது?

சு: (உள்ளே போய் வந்து) பத்து இருபது.

கு: சரி, வரட்டுமா?

சு: ஏய், குசேலா... இரு வறேன்! (உள்ளே போகிருள்.)

கு: எதுக்காக உள்ளே போயிருக்கா?... சுசீ, சுசீ! போனு எத்தனை நாழி?

சு: (ஓடி வந்து) இந்தாடா, இதைக் கொண்டுபோய்க் கொடு!

கு: என்ன பொட்டலம் இது?

சு: அவல் கேசரிடா. டிபனுக்காகப் பண்ணியிருக்கா அம்மா. அம்மா அந்தண்டை போகட்டும்னு பாத்து எடுத்திண்டு வந்தேன். அதான் நாழியாயிடுத்து.

கு: அவல் கேசரியா? அப்பாடா கடுதாசிமேல்கூட மணக்கிறதே!...

சு: ஆமாம்.

கு: பச்சைக் கற்பூரம்போட்டிருக்கோ?

சு: ம்.

கு: குங்குமப்பூ?

சு: நிறைய.

கு: அப்படின்னு அப்பறம் போறேனே.

சு: இப்ப அம்மா தரமாட்டா. அப்பா வந்துதான். நீ போ!

## 2

[கண்ணன் வீடு. நேரம் இரவு. படுக்கையில் படுத்தபடியே கண்ணன் அவல் கேசரியைத் தின்று கொண்டிருக்கிருன்.]

**கண்ணன்:** ரொம்ப நன்னுயிருக்கு..பாவம் எவ்வளவு ஆசையாகக் கொண்டு வந்தான் -குசேலன்..அவனுக்கு எப்படி உதவி செய்யறதுன்னுதான் புரியவில்லை... நான் ஹெட்மாஸ்டராயிருந்தா அந்த 27 எல்லாத்தையும் 42, 72, 73ன்னு முன் நம்பர் பின் நம்பர் எதையாவது அழிச்சு, சேர்த்து மாத்திப் பிடுவேன்..ஆ! மார்க் ரிஜிஸ்டர் நோட்டை அப்பா இங்கேதான் வச்சிருக்கார். இன்னும் கொண்டு போகல்லியே பள்ளிக்கூடத்துக்கு. இப்ப அப்பா குறட்டை விடுருர். போய் மாத்திவிடுவோமே.

[அப்பாவின் அறைக்குப் போய், மேஜையிலிருந்த பெரிய நோட்டைப் புரட்டுகிருன்.]

நல்ல குசேலன்டா! எல்லாத்திலியும் 27 மார்க்கு. இங்கிலீஷ் 27-இல் ரெண்டை அடி. 7க்கப்புறம் 1 போடு—71 ஆக்கு..தமிழில் 27-ஐ - சரி ஏழை ஆடி. ரெண்டுக்கு முன்னுல் 4 ஐப் போடு. 42..சமூகத்தில் 27..ம்..2க்குக் கீழே வளை..ம். 37..

(வெளியேயிருந்த குரல்) அப்படியே இரு. நோட்டை மூடினியோ கொன்னுப்பிடுவேன்! அதே பக்கத்தை எடுத்து வைக்கணும்! திறடா! திறடா கதவை..ம்..திற.

(கதவைத் திறக்கிறுன் கண்ணன்.)

**அப்பா:** என்னடா செய்தே?

**கண்:** ஒண்ணுமில்லே. சும்மா மார்க்கெல்லாம் பாத்திண்டிருந்தேன்.

**அப்:** எழுதினியே என்னமோ?

**கண்:** இல்லேப்பா.

**அப்:** என்ன இல்லே? நான் தான் பாத்திண்டிருந்தேனே, கதவு ஓட்டை வழியா; சொல்றியா இல்லாட்டா..(விசிறிக் காம்பை எடுக்கிறுர்) யார் மார்க்கைத் திருத்தினே?

**கண்:** குசேலன் மார்க்கை.

**அப்:** ஏன் திருத்தினே?

**கண்:** அவன் ஏழை. மார்க்கும் வாங்கலே, அப்பா!

**அப்:** கழுதை! அதற்காக மார்க்கையா திருத்தினே? எந்தக் கை அது? இந்தக் கையா திருத்தித்து? மேஜை மேலே வை. வைடான்னு! மூடிக்கோ—(விசிறிக் காம்பால் போடுகிறுர்.)

**கண்:** இல்லேப்பா, இல்லேப்பா!

**அப்:** இனிமே உள்ளே வருவியா?

**கண்:** மாட்டேன்.

**அப்:** என் நோட்டுப் புஸ்தகங்களைத் தொடுவியா? (அடி)

**கண்:** மாட்டேன். ஐயோ மாட்டேம்ப்பா, வலிக்கிறதே.

**அப்:** உடையட்டும் முட்டி.

**கண்:** இல்லேப்பா, இனிமே செய்யமாட்டேம்ப்பா.

**அப்:** மடையா! (பெருமூச்சுவிட்டுக்கொண்டே) ஓடு! படு, போய் வாசல் திண்ணையிலே!

(கண்ணன் அழுகிறுன்)

**அம்மா:** (விழிப்புக் கொடுத்து) என்ன அது?

**அப்:** மார்க்கு ரிஜிஸ்டரைத் திறந்து மார்க்கைத் திருத்தறுன்! ஓடு, போ. வெளியிலே! திண்ணையிலே படு. காலமே அந்தப் பயலை அழச்சிண்டு வந்தாத் தான் வீட்டுக்குள் நுழையலாம்.

**அம்:** பாதிராத்திரியிலே காத்து கிழிச்சின்னு ஊதுமே?

**அப்:** விறைக்கட்டும்! காலமே அந்தப் பயலோடே இங்க வரணும்.

(கண்ணன் அழுது கொண்டே போகிறுன்.)

**அம்:** குழந்தை எங்கியாவது போயிடப் போறுனே.

**அப்:** தொலையட்டும் காலி. புள்ளையே இல்லேன்னு நெனச்சுக்கறேன்.

**அம்:** ரொம்ப அழகுதான்.

**அப்:** நீ மூடு வாயை. நீ அவ்வளவு இடம் கொடுத்திருக்கே - உம் புள்ளைக்கு - அணிப்புள்ளைக்கு!

## 3

(மறுநாள் காலை. ஹெட்மாஸ்டர் வீடு. கண்ணன் காதைப் பிடித்துக்கொண்டு முட்டித் தோப்புக் கரணம் போடுகிறுன். பக்கத்தில் குசேலன்)

**ஹெட்:** எண்றயாடா?

**குசே:** எண்றேன், சார்.

**ஹெட்:** எத்தனை ஆச்சு?

**குசே:** அறுபத்தெட்டு.

**ஹெட்:** கிருஷ்ண பரமாத்மா தோப்புக்கரணம் போடறுர் பாரும்.. ஓய், குசேலரே.. இப்ப எத்தனை ஆச்சு?

**குசே:** எழுபது?

**ஹெட்:** நிறுத்து, பயலே! முட்டி எப்படியிருக்கு?

(கண்ணன் அழுகிறுன்)

**கு:** விட்டுடுங்கோ, சார்.

**ஹெட்:** எதுக்குத் தோப்புக்கரணம் போடறுன், தெரியுமா?

**கு:** எனக்கு உதவி செஞ்சதுக்காக.

**ஹெட்:** சீ, கழுதை! உதவி செஞ்சதுக்காக இல்லே. தப்பான வழியிலே உதவி செஞ்சதுக்காக.,. நீ செய்யச் சொன்னியா அதுமாதிரி?

**கண்:** அவன் சொல்லலேப்பா!

**ஹெட்:** நீயா செஞ்சியா?

**கண்:** ஆமாம்.

**ஹெட்:** இப்ப எப்படி யிருக்கு? (கண்ணன் தலைகுனிந்து நிற்கிறுன்)

**ஹெட்:** இனிமே என்ன செய்ய வேண்டியது தெரியுமா?.. குசேலன் தினம் காலமே புத்தகங்களை எடுத்திண்டு வருவான் இங்கே. எல்லாப் பாடமும் அவனுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியது நீ. என்ன முழிக்கிறே?

**கண்:** சரிப்பா.


**ஹெட்:** வறியாடா காலமே?

வராட்டா, என்ன சார் பண்றது?

ஹெட்: உனக்கு மார்க் வராட்டா, உன்னாலே அவனும் பெயிலாப் போவான். . (கண்ணனைப் பார்த்து) நன்றாச் சொல்லிக் கொடுப்பியா அவனுக்கு?

கண்: கொடுக்கறேன்.

ஹெட்: நீ தவறாம வருவியா?





குசே: வர்றேன், சார்.

ஹெட்: (கண்ணனைப் பார்த்து) அவன் பரீட்சையிலே ஐம்பது மார்க்குக்குக் குறைஞ்சு எதிலியாவது வாங்கினானே, உன்னையும் பெயிலாக்கிப்பிடுவேன்.

குசே: எனக்கு மார்க்கு

குசே: வருவேன் ஸார்!

ஹெட் வரலியோ. . பியூனைவிட்டு இழுத்துண்டு வரச் சொல்லி ஒரு வெண்கலப் பானை நிறைய, சர்க்கரையே போடாமெ, நெய் ஊத்தாமெ அவல் கேசரியைப் பண்ணி வைப்பேன். ரெண்டு பேருமாத் திங்கணும். (திரை)





# ஏழை மீனா

ஸேனா

மீனாவைப் பார்க்க யாரோ வருவதாக அம்மா பக்கத்து வீட்டுப் பாட்டியோடு சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போதுதான் வெளியே எதிர்வீட்டுக் குழந்தையோடு உள்ளே நுழைந்த மீனாவின் காதில் இது விழுந்தது.

அவள் எரிச்சலோடு, ''என்ன, அம்மா, இது; நான் கொலுப் பொம்மையா என்ன; அடிக்கடி இப்படி எத்தனை பேர் என்னை வந்து பார்ப்பார்கள்?'' என்றாள்.

மீனாவை ஏற இறங்கப் பார்த்தாள் அவள் அம்மா. பிறகு ஒரு பெருமூச்சு விட்டுப் பாட்டியிடம், ''பாருங்களேன். வயசு பதினைந்தாகிறது; இன்னும் குழந்தைப் புத்தி போகவில்லை; இவளை வைத்துக்கொண்டு எப்படி நான் சமாளிப்பது?'' என்றாள் சலிப்புடன்.

மீனாவின் அப்பா ஒரு கிராமத்தில் இருந்தார். சொற்பச் சம்பளத்தில் ரெயில்வேயில் வேலை செய்யும் குமாஸ்தா. பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போவதென்றால் விடியற் காலையிலேயே சமையல் ஆகிவிட வேண்டும். சாப்பிட்டு, ரெயில் வண்டி ஏறி, இரவு ஏழு மணிக்குத்தான் திரும்புவார்.

இதுவரை நாலு பிள்ளைகள் வந்து மீனாவைப் பார்த்துவிட்டுப் போனார்கள். அவர்களுக்குப் பெண் பிடித்திருந்தாலும், அவர்கள் பெற்றோருக்கு இந்தப் பெண்ணால் அதிக வரும்படி - வரதட்சிணை - கிடைக்காது என்று படவே, அவர்கள் மறுபடியும் இந்தப் பக்கம் திரும்பவேயில்லை.

இந்தத் தடவையும் மீனாவை அம்மா வலுக்கட்டாயமாக உட்கார வைத்துத் தலைவாரிப் பின்னி ஒழுங்குபண்ணி வைத்திருந்தாள்.

வரப்போகிற பையன் அப்பா, அம்மா இல்லாதவன்; அவனும் மீனாவின் அப்பா ஆபீசில் வேலை பார்ப்பவன்தான். அன்று மாலை அவள் அப்பா அவனை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார்.

மீனாவுக்கு மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. கைகால்

கழுவிக்கொண்டு அப்பாவும் அந்தப் பையனும் கூடத்தில் வந்து உட்கார்ந்தார்கள்.

ஒரு தட்டில் பட்சணத்தோடு மீனுவை அங்கே அனுப்பினுள் அம்மா. பையன் எப்படி இருக்கிருன் என்று பார்க்க ஒரு பக்கம் திகிலாக இருந்தாலும், இன்னெரு பக்கம் ஆவலாகவும் இருந்தது மீனுவுக்கு. பட்சணத் தட்டைக் கீழே வைக்கும்போது அவன் முகத்தை ஜாடையாகக் கவனித்தாள். அவனும் அவளைப் பார்த்தான். மீசை அப்போதுதான் அரும்பி, இள இளவென்று இருந்தது. பால் வடியும் முகம்.

மீனுவுக்கு உள்ளூற மகிழ்ச்சிதான். பையன் முகம் சற்றே சிவந்தது; அவனுக்கும் அவளுடைய கள்ளங்கபடற்ற முகம் பிடித்திருந்தது. அப்பா, ''சம்மதந்தானே?'' என்ருர் பையனைப் பார்த்து.

அவன் குனிந்தபடி தலையாட்டினன். மீனுவும் தன்னை அறியாமல் தலையை ஆட்டினுள். உடனே யாராவது பார்த்துவிட்டார்களோ என்று வெட்கத்தோடு உள்ளே ஓடினுள்.

அம்மா மீனுவின் முகத்தைப் பார்த்ததும் அவளுக்குப் பையனைப் பிடித்துவிட்டது என்று தெரிந்து கொண்டாள்.

கல்யாணம் ஆகிப் புருஷனுடன் பட்டணம் போய் ஒரு சிறு வீட்டில் குடியிருந்தாள் மீனு. கொஞ்ச நாள் வரையில் பிறந்த வீட்டுக் கருகில் தான் அருமையாகக் கவனித்து வந்த அந்தக் குழந்தை ராஜுவின் கவனமாகவே இருந்தாள். அவளுக்குப் பொழுது போகவேண்டி அவள் புருஷன் சின்னச் சின்னக் கதைப் புஸ்தகங்களைக் கொண்டு தருவான். அவைகளின்மேல் மனசே ஓடுவதில்லை அவளுக்கு.

பக்கத்துப் பங்களா பூட்டிக் கிடந்தது. அதில் ஏராளமான மரங்களும் பூஞ்செடிகளும் இருந்தன. அங்கே இருந்த சரக்கொன்றை மரத்தில் தொங்கும் அந்த மஞ்சள் பூ பார்க்க என்ன அழகாக இருந்தது! தன் பிறந்த வீட்டின் நினைவு வந்துவிடும் மீனுவுக்கு.

திடீரென்று ஒரு நாள் காலை அந்தப் பங்களாவில் மனித சந்தடியாக இருந்தது. வெளியூர் போயிருந்த அதன் சொந்தக்காரர் திரும்பி வந்துவிட்டார். அன்று மீனுவின் வீட்டுப் பக்கமாக வந்து அவர்கள் வீட்டுக் குழந்தை எட்டிப் பார்த்தது. குழந்தை ராஜுவைப் போலவே அதுவும் இருந்தது. மீனுவுக்கு ஒரே மகிழ்ச்சி. அவள் அதைத் தன்னிடம் வரும்படி அழைத்தாள். அதற்கு அவள் முகம் புதிசாக இருந்ததால் உள்ளே ஓடிப் போய்விட்டது.

புருஷன் ஆபீஸிலிருந்து திரும்பினுன். மீனு ஆவலோடு, ''பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து விட்டார்கள், தெரியுமா?'' என்ருள்.

அவனுக்கு ஆபீஸ் கவலை; நாளைக்கு மீதிக் காரியத்தையும் முடிக்க வேண்டும். ''உம்'' என்று ஏதோ தலையாட்டி வைத்தான்.

மீனு, ''என்ன தலையாட்டுகிறீர்கள்? அவர்கள் வீட்டில் ஒரு குழந்தை இருக்கிறதே; அதை இப்படிச் சற்று நேரம் அழைத்து வாருங்களேன்'' என்ருள்.

அவன், ''அவர்களோடு பழக்கமேயில்லை. திடீரென்று எப்படிப் பேசுவது?'' என்ருன்.

மீனு, ''பரவாயில்லை. போய்க் கேளுங்கள்'' என்ருள்.

அவனும் சற்று நேரம் கழித்துப் பக்கத்து வீட்டுக்குப் புறப்பட்டுப் போனுன்; வாசலில் அவனுக்காகக் காத்திருந்தாள் மீனு. பிறகு, அவன் முகம் சோர்ந்து திரும்பி வந்தான்.

''என்ன என்ன?'' என்ள் மீனு.

''வாசலில் இருந்த காவல்காரன் உள்ளே வரக்கூடாது என்று தடுத்துவிட்டான்.''

மீனு என்ன சொல்வதென்று தெரியாமல் கம்மென்று இருந்தாள்.

* * *

அன்று சாயங்காலம் அந்தக் குழந்தை அவள் வீட்டு வேலிப் பக்கம் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தது. மீனு அதையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அதுவும் அவளைப் பார்த்துச் சிரித்தது. அதன் கன்னத்



தில் விழுந்த குழிதான் எவ்வளவு அழகாக இருந்தது!

மீனா உள்ளே போய், தான் அருமையாகப் புருஷனுக்குப் பண்ணி வைத்த லட்டு ஒன்றை எடுத்துவந்து அதனிடம் கொடுத்தாள். குழந்தையும் அதை ஆவலோடு வாங்கிக்கொண்டது.

அதே சமயம், ''மணி!'' என்று கூப்பிட்டுக்கொண்டே அந்தப் பங்களா எஜமானி அங்கே வந்தாள்.

குழந்தையின் கையில் லட்டு இருப்பதைப் பார்த்தாள். முகத்தைச் சிடுத்துக்கொண்டு மீனாவைப் பார்த்துச் சந்தேகப் பார்வையோடு, ''நீ கொடுத்தாயா?'' என்றாள்.

மீனா, ''ஆமாம்'' என்று தலையை ஆட்டினாள்.

''உன்னை யார் கொடுக்கச் சொன்னது! கண்ட எண்ணெயிலும் பண்ணின பண்டங்களைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதா? ரொம்ப நன்றாயிருக்கிறது?'' என்று மீனாவின்மேல் சீறி விழுந்தாள் அந்த வீட்டுக்காரி. குழந்தையின் கையிலிருந்த லட்டைப் பிடுங்கித் தூர விட்டெறிந்தாள். குழந்தையைக் கரகரவென்று பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

மீனாவுக்கு உலகமே இருண்டு விட்ட மாதிரி இருந்தது. அப்போது அந்தப் பக்கம் வந்த அவள் புருஷன், ''என்ன, மீனா!'' என்று கேட்டான்.

மீனாவுக்குக் கண்களில் நீர் பொங்கி வந்தது. விக்கியபடியே நடந்ததைச் சொன்னாள்.

அவன் வெறுப்போடு சிரித்து, ''அசடே! உலகம் உன்னைப்போல் கபடற்றது என்றா எண்ணிக்கொண்டாய்!..நாம் ஏழைகள்; அவர்கள் பணக்காரர்கள் - இனி மேலாவது தெரிந்துகொள் இந்த வித்தியாசத்தையெல்லாம்'' என்றான். ஆதரவோடு அவள் தலையைக் கோதினான்.

**EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,**
**AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4,**
**ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.**

## அச்சகத்தார்களே !

**நீங்கள் விரும்புவது**

- ★ தரமான உழைப்பு
- ★ பளபளப்பு
- ★ வர்ணப் பொலிவு
- ★ அதிகப் பிரதிகள்
- ★ உலரும் சக்தி

இவைதான் என்றால், உங்களுக்குத்
தேவையானவை

## "ரெயின்போ பிரிண்டிங் இங்க்குகள்"

200-க்கு மேற்பட்ட வகைகள்
'அடோலின்' (இங்க் கண்டிஷனர்)
அச்சிடுவோருக்கு ஒரு வரப்பிரசாதம்

எங்கள் 'ரெயின்போ கைட் அண்ட் ரெமடீஸ்'
என்ற புத்தகம் அச்சகத்தார்களுக்கு
இலவசமாக அனுப்பப்படும்.

விவரங்களுக்கு :

# Rainbow Ink & Varnish Mfg., Co.,

**Private Limited,**

**TARDEO :: BOMBAY-7.**

Telegram: RAINBOINK

Telephones: Office: 42471, Factory: 88101

(Regd, as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

குறைந்த நேரத்தில்

சிறந்த முறையில்

ஆப்டோன், லைன்

மூவண்ணப் பிளாக்குகள்

தயாரித்துக் கொடுப்பதில்

அதிக அநுபவமும்

பிரசித்தியும் பெற்றவர்கள்

★

நியூடன் & கம்பெனி,

80, வாலாஜா ரோட், சென்னை - 2.

போன்: 86729